
மார்ச் 01 - 07, 2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்





## வெற்றிப் பாதையில் தமிழ்க் கூட்டமைப்பு





## அம்பாறையில் பலப்பரீட்சை





# பேரியல் அஷ்ரப் - அதாவுல்லா கூட்டணியினரின் சவாலை ரவூப் ஹக்கீம் முறியடிப்பாரா?


ஹக்கீம்

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெரு விருட்சம் இன்று நான்கு ஐந்து துண்டுகளாக உடைந்து பலவீனமடைந்திருக்கிறது. இதனால் முஸ்லிம்களின் பேரம் பேசும் சக்தி எந்த அளவு பாதிக்கப்படப் போகிறது என்பது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகே தெரிய வரும்.

பிளவுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்கள் இம்முறை பொதுத் தேர்தலில் கட்சி தோற்றம் பெற்ற — அதன் தாயகமான அம்பாறை மாவட்டத்தில் களமிறங்கியிருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப், முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு அணித் தலைவர் ஏ.எஸ்.எம். அதாவுல்லா, முஸ்லிம் காங்கிரஸில் இருந்து இறுதி நேரத்தில் வெளியேறிய முன்னாள் எம்.பி.க்களான எச்.எம்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோரே இவர்களாவர்.

இவர்களில் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முதன்மை வேட்பாளராகவும், பேரியல் அஷ்ரப் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முதன்மை வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர். அதாவுல்லா, ஹரீஸ் ஆகியோரும் பேரியல் அஷ்ரப் தலைமையிலான சுதந்திரக் கூட்டணி பட்டியலிலேயே போட்டியிடுகின்றனர்.

## அதாவுல்லா அணி

முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் ஹரீஸ், அன்வர் ஆகிய மூவரும் கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களாகப் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள். இம்மூவருமே முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவப் பிரச்சினையின் போது பேரியல் அஷ்ரப்பை இணைந்த தலைமைத்துவத்திலிருந்து விரட்டியடித்துவிட்டு ஹக்கீமை ஏகதலைவராகக் கொண்டு வருவதற்குப் பாடுபட்டவர்கள்.

இதையடுத்தே பேரியல் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேறி, 'நுஆ' தலைமைப் பதவியை ஏற்றார்.

கடந்த நாடாளுமன்றத்தின் ஒரு வருட முடிவில் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ஹக்கீமுடன், அதாவுல்லா முரண்படத் தொடங்கினார். அரசு —புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டு ஹக்கீம் ஒஸ்லோவில் தங்கியிருந்த வேளையில் அதாவுல்லா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஐவரினதும், அதிஉயர்பீட உறுப்பினர்கள் 12 பேரினதும் ஆதரவுடன் முஸ்லிம் காங்கிரஸைக் கைப்பற்றி ஹக்கீம் மீது 36 குற்றச்சாட்டுகளை சுமத்தி அவரை தலைமைப் பதவியிலிருந்து அகற்றுவதாக பிரகடனப்படுத்தினார்.

எனினும் ஒருசில நாட்களுக்குள்ளாகவே அதாவுல்லா அணியினரின் சதிப்புரட்சியை முறியடித்து ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். அப்போது ஹரீஸ், அன்வர் ஆகியோர் தலைவர் ஹக்கீமுக்கு பக்க பலமாகவே இருந்தனர். அதனால் முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளராக ஹரீஸும், பிரதித் தலைவராக அன்வர் இஸ்மாயிலும் ஹக்கீமினால் நியமனம் செய்யப்பட்டனர்

இதையடுத்தே அதாவுல்லா, மறைந்த தலைவர் அஷ்ரப்பின் கொள்கைகளை முன்னெடுக்கப்போவதாக அறிவித்து ''அஷ்ரப் காங்கிரஸ்'' எனும் புதிய அமைப்பை உருவாக்கினார்.


அதாவுல்லா அன்வர் இஸ்மாயில் ஹரீஸ்

## தேசிய முஸ்லிம் காங்கிரஸ்

எனினும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து தனது எதிரியான ரவூப் ஹக்கீமின் சிஷ்யர்களான ஹரீஸ், அன்வர் ஆகியோர் தலைவருடன் முரண்படுவதை அறிந்த அதாவுல்லா அவர்கள் இருவருக்கும் கயிற்றைக் கொடுத்தார். அவர்களும் இணங்கிவந்தனர்.

அதனால் அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட முஸ்லிம் ஒற்றுமைக் கூட்டணியிலிருந்து விலகி, தனது புதிய சகாக்களான ஹரீஸ், அன்வர் ஆகியோரை அழைத்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தி, அம்பாறை மாவட்ட சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் இரு இடங்களைப் பெற்றதுடன் தேசியப்பட்டியல் மற்றும் அமைச்சுப் பதவிகளுக்கான உத்தரவாதத்தையும் பெற்றனர்.




அதனை தனிமனிதர்களாக அல்லாமல் ''தேசிய முஸ்லிம் காங்கிரஸ்'' எனும் புதிய கட்சியை உருவாக்கி, அதனூடாகவே ஜனாதிபதியுடன் அதாவுல்லா அணியினர் பேரப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். தேர்தல் முடிந்த பிறகு அதனை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வோம் என அதாவுல்லா அறிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற தாய்க் கட்சி அதன் ஸ்தாபகத்தலைவர் அஷ்ரப் மறைந்து மூன்றாண்டுகளில் எவ்வாறு பிளவு பட்டுப் போயிருக்கிறது என்பதை மிகச்சுருக்கமாக — மேலோட்டமாகப் பார்த்தோம்.

அரசியல் சதுரங்கத்தில் சமூகத்தின் பெயரால் தனிமனிதர்கள் எவ்வாறெல்லாம் தமது சுயநல அரசியலுக்காக காய்களை நகர்த்தி கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளாதவரை அவ்வாறனவர்கள் ஏதோ ஒரு வகையில் அரசியலில் நிலைத்திருப்பர் என்பது கண்கூடாகக் காணும் நிகழ்வுகளாகும்.

## எதிரிக்கு எதிரி நண்பன் பேரியல்—அதாவுல்லா கூட்டு

பேரியல் அஷ்ரப்புக்கு அதாவுல்லா, ஹரிஸ், அன்வர் ஆகியோர் பரமவிரோதிகளாகத் திகழ்ந்தவர்கள். தன்னை அம்பாறை கரையோரப் பிரதேசத்தில் கால் பதிக்க விடாமலும் முஸ்லிம் காங்கிரஸின் இணை தலைமைத்துவத்திலிருந்து தன்னை ஓரங்கட்டுவதிலும் வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டவர்கள் இம் மூவருமே என்பதை பேரியல் அஷ்ரப்பினால் மறக்க முடியாத வடுவாக இருக்கும்.

அதேபோன்று ஹக்கீம்—அத்தாவுல்லா பலப்பரீட்சையின்போது ஹரீஸ், அன்வர் ஆகிய இருவரும் அதாவுல்லாவுக்கு எதிரான நிலைபாட்டையே கொண்டிருந்தனர். கட்சிப் பிளவுக்கு வழிவகுத்துவிட்டு ஹக்கீமுக்கு சோரம் போனவர்களே ஹரீஸ், அன்வர் ஆகியோர்என்ற குற்றசாட்டு அதாவுல்லா அணியினரிடம் இருந்து வந்தது.

இவற்றைவிட அக்கரைப்பற்றை தமது சொந்த ஊராக கொண்ட 'நுஆ' செயலாளர் சேகு இஸ்ஸதீனும், அதாவுல்லாவும் ஆயுட்கால பரமவிரோதிகள் என வர்ணிக்கப்பட்டு வந்தனர்.

செய்தி ஊடங்களிலும்,மேடைகளிலும் ஒருவரை ஒருவர் திட்டித் தீர்ப்பதும், மட்டந்தட்டிப் பேசுவதும் இருவருக்கும் கைவந்த கலையாகும்.

இவ்வாறான எதிரிகள் அனைவரும் (பேரியல்—அதாவுல்லா—ஹரீஸ்—அன்வர்—சேகு இஸ்ஸதீன்) ஜனாதிபதியின் தயவில் ஒன்றுபட்டிருக்கின்றனர். பேரியல் அஷ்ரப் அணி (நுஆ) அதாவுல்லா அணி (தேசிய முஸ்லிம் காங்கிரஸ்) ஆகிய இரண்டுமே சுதந்திக் கூட்டணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றன.


பேரியல் அஷ்ரப்

## பொது எதிரி ஹக்கீம்

இவர்கள் தமது பொது எதிரியான முஸ்லிம் காங்கிரஸையும், அதன் தலைவர் ரவூப் ஹக்கீமையும் தோற்கடிப்பதற்காகவே பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து போட்டியிடுகின்றனர்.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸை வெற்றியீட்டச் செய்வதில் தலைவர் ஹக்கீம் பலத்த சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

24ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதித்தினத்தன்றே அங்கு தேர்தல் களம் சூடு பிடித்து விட்டது. அன்று முஸ்லிம் காங்கிரஸ் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துவிட்டு தலைவர் ஹக்கீம் ஊர்வலமாக வாகன அணித் தொடரில் சென்ற போது ஹரீஸின் சொந்த ஊரான கல்முனைக்குடியில் சரமாரியாக கல்வீச்சு நடத்தப்பட்டிருக்கிறது. அதனால் சில வாகனங்கள் சேதமடைந்திருக்கின்றன.

இது தவிர வேறு சில இடங்களிலும் ஹக்கீமுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டு அவர் தூஷிக்கப்பட்டிருக்கிறார். சம்மாந்துறையில் முஸ்லிம் காங்கிரஸ் சுதந்திரக் கூட்டணி ஆதரவாளர்களுக்கிடையே மோதல்கள் இடம் பெற்றன.

''முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகி ஜே.வி.பி. பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற துரோகிகளின் அனைத்து சவால்களையும் முறியடித்து அம்பாறை மாவட்டம் முஸ்லிம் காங்கிரஸின் தளம் என்பதை உலகுக்கு மீண்டும் நிரூபித்துக் காட்டுவேன்'' '' என ரவூப் ஹக்கீம் சூளுரைத்திருக்கிறார்.

''ஹக்கீம் கண்டியிலோ, கொழும்பிலோ போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது என்பதை அறிந்தே, அம்பாறையில் போட்டியிட வந்திருக்கிறார். இங்கும் அவருக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்'' என பேரியல் அஷ்ரப், அதாவுல்லா ஆகியோர் கூறியிருக்கின்றனர்.

எதிரும் புதிருமான தலைவர்களின் தேர்தல் பிரசாரங்கள் மக்களை எந்தப் பக்கம் வாக்களிக்கத் தூண்டும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கடந்த காலங்களில் விட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடும் தேர்தல் களமாகவும் அம்பாறை மாவட்டம் அமையலாம் எனக் கருதப்படுகிறது.

— அஸ்லம் எஸ். மௌலானா —

---

# வாசகர் இதயம் பேசுகிறது

*சுசிகாந்தன்—மல்லாவி.*

அன்பின் பத்திரிகை நண்பனே,

ஒவ்வொரு திங்களும் உன்னைப் பார்க்க நாம் மறப்பதில்லை. உனது ஆக்கங்கள் அனைத்தையும் நேசிக்கிறோம். அதிலும் உன்னில் வரும் இணையத் தளத்தில் பகுதி மிகவும் சிறந்தவவை. மேலும் நீ வளர வாழ்த்துகிறேன்

*ஜனகன்—வத்தளை*

சுடர் ஒளியே,




உனது தீவிர ரசிகன் நான். உனது ஆக்கங்கள் அனைத்தும்அற்தும் அவற்றில் அரசியல் அம்பலம், கவிதைப் புனல், பித்தன் பதில்கள் சிறப்பானவை. உன் பணி தொடர வாழ்த்தும்

*பு.புவிதா — திருநெல்வேலி*

தித்திக்கும் சுடர் ஒளியே!

என்னுள்ளம் கவர்ந்தவளே! உன்னுடைய அம்சங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. அவ் வருமைகளில் என்னுள்ளம் கவர்ந்தவை பித்தன் பதில்கள், இளஞ்சுடர், சிறுகதை, மலையகக் கண்ணோட்டம் என்பன. குறிப்பாக மலையக மக்களின் அவலங்களை உலகிற்கு எடுத்துக் கூறி, அடிப்படை வசதிகள் கல்வி என்பவற்றை வழங்கச் செய்கிறாய். உன்னுடைய புகழ் எட்டுத்திக்கும் பரவி பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றேன்.

*யோ.ஜெனி — புதுக்குடியிப்பு*

எம் தேசத்தில் ஒளி வீசிச் சிட்டாக சிறகடித்து வாரம் ஒருமுறை முத்தமிட்டுப் பறக்கும் அன்பின் சுடர் ஒளிக்கு என் தலை சாய்த்த வந்தனம். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்பானவை. உன்பணி மென்மேலும் சிறக்க கோடான கோடி வாழ்த்துக்கள்.

*ஜஸ்மிதன் — முல்லையூர்*

என் அருமை சுடர் ஒளியே!

உன் ஒவ்வொரு இதழ்களையும் தவற விடாது சுவைக்கும் வாசகன் நான். ''எம்.ஜி.ஆர் — பிரபா'' நட்பு தொடர் கட்டுரை எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. எம்.ஜி.ஆர் அவர்கள் எமது தேசத்திற்கும் தேசியத் தலைவருக்கும்எவ்வளவுஉதவிசெய்தார் என்பதை இறுதி அத்தியாயங்கள் மூலம் சிறப்பாக புரியவைத்தாய். உனக்கு கோடான கோடி வந்தனங்கள்.


அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165



சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

# சிங்களவருக்கு அதிகாரம் தமிழர்களுக்கு நிர்வாகம்

## இதுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்கிறது ஜே.வி.பி

இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டத்தின் வயது ஐந்து தசாப்தங்களைக் கடந்துவிட்டது. உலகில் எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும் இலங்கையை சர்வதேச மயப்படுத்தியது இந்த உரிமைப் போராட்டம்.

இன்று மேற்குலக நாடுகள் மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளும் இந்தப் பிரச்சினையை உற்று நோக்கி வருகின்றன.

இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நிலைக்கு அவை தள்ளப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் தமிழர்களின் ஏக



விமல் விரவன்ஸ

பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து அவர்களுடன் பேசியே இதற்கு இறுதித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இந்த நாடுகள் வந்துள்ளன. இனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சுயநிர்ணய உரிமைகள் பற்றியும், நவீன உலகமைப்புக் கிணங்க வழங்கப்பட வேண்டிய அதி கூடிய தனிமனித உரிமைகள் பற்றியும் அந்த நாடுகள் ஆய்வு செய்து வருகின்றன. அப்படியெனில் தமிழர் போராட்டம் நியாமானது, அவர்களுக்குரிய நிலவுரிமைகள், அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது சர்வதேசத்தின் நோக்கமும் சகல தரப்பினரினதும் விருப்பமும் ஆகும்.

இப்படியான ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு சகல தரப்பும் முனைந்திருக்கும் இந்த சூழ்நிலையில், மார்க்ஸிஸ்டுகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பி. மட்டும் 'தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. அதிகாரம் பரவலாக்கப்பட்டால் அது தனி நாடாகி விடும். நாட்டைப் பாதுகாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள்' என்றெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் தீவிர பிரசாரம் செய்து வருகின்றது.

அண்மையில் சுயாதீன தொலைக்காட்சி நிலையத்துக்கு ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளர் வழங்கிய செவ்வியில் கூட அதிகார பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை. வேண்டுமென்றால் நிர்வாகப் பரவலாக்கல் வழங்கப்படல் வேண்டும் என்று கூறினார்.

இந்த நிர்வாகப் பரவலாக்கல் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி அவர் விளக்கமளிக்கவில்லை. பௌத்தத்துடன் கலந்து மார்க்ஸிசம் என்ற ஒரு புதிய கோட்பாட்டை கூறியிருக்கும் ஜே.வி.பி.யினர் தமிழர்களுக்கு இலங்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அடித்துக் கூறுவதால் தமிழர்கள் – குறிப்பாக வடக்கு – கிழக்குத் தமிழர்கள் – ஜே.வி.பி. யினரை கடும் இனவாதிகள் என்று கருதும் நிலைக்கு வந்துள்ளனர்.

83 ஆம் ஆண்டு 77 ஆம் ஆண்டுச் சம்பவங்கள், யாழ் நூலக எரிப்பு போன்ற வன்முறைகளுக்கு தாம் சூத்திரிதாரிகள் அல்லர் என்றும் ஐ.தே.க வினரே காரணகர்த்தாக்கள் என்றும் ஜே.வி.பி.யினர் கூறுகின்றனர்.

உண்மையிலேயே இந்த வன்முறைகள் ஐ.தே.வின் ஆட்சிக்காலத்திலேயே இடம் பெற்ற போதிலும் பேச்சுக்கள் மூலம் அதிகாரப் பகிர்வு பற்றி பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முன் வந்திருப்பதும் நீண்ட கால போரை ஓய வைத்திருப்பதும் அந்த கட்சியே.

தாம் இனவாதிகள் அல்லர்என கூறும் ஜே.வி.பி.யோ தமிழர்களுக்கு எதுவும் வழங்கப்படக் கூடாது என கூறிவருகிறது. அப்படியெனில் இனவாதிகள்யார்? என்ற கேள்வி எழுகிறது.

பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்எனக் கூறும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும்ஜே.வி.பியினர், அதற்கு முரணான கருத்துக்களையே மேடைகளில் முன்வைத்து வருகின்றனர்.

கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் என்பவற்றை தூரத்தில் வைத்துவிட்டு தமது நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காக ஜே.வி.பியுடன்கூட்டு வைத்துள்ளார் ஜனாதிபதி. ஜனாதிபதி தனது விரலை கட்டுக்கொள்ளும்தூரம்வெகுதூரத்தில்இல்லை என்பதை உணரும் காலம் நெருங்கி வருவதாக தோன்றுகிறது.

இலங்கை அரசியலில் பலமுறை ஆட்சி செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பல கட்சிகளுடன் கூட்டு வைத்தே தேர்தலில் வெற்றி பெற்றது. ஆனால் இந்த முறை தனது தனித்துவத்தை தாரை வார்க்க வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டுவிட்டது.

56இல் தனிச்சிங்களம் என்ற சாயத்தைப் பூசி எப்படி பண்டாரநாயக்க பிரசாரம் செய்தாரோ அதே பாணியில், "விடுதலைப்புலிகள் நாட்டை பிடித்துவிட்டார்கள். தாய்நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டது. நாட்டில் பாதுகாப்புக்கு பெரும்அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது" என்ற அஸ்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தென்பகுதியில் ஜே.வி.பியினர்தமது பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

முழுக் கொழும்புமே இராணுவ முகாம் போன்று காட்சி அளித்த காலத்தை மறந்த நிலையில், இவை அத்தனையையும் சிங்கள மக்கள் அவதானித்து வருகின்றனர்.

காலத்துக்குக்காலம்தமது கடந்த காலத்தை மறந்து விடும் தென்பகுதி மக்கள் இந்த முறை தேர்தலில் யாரைத் தேர்ந்தெடுப்பர் என்பது பற்றி எவராலும் எதிர்வு கூற முடியாது.

ஆனால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதற்கு இந்தத் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எவரும் மறக்க மடியாது. ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு விடுதலைப்புலிகள் அமைதி காத்து வருகின்றனர். மறுபுறம் கடும் இனவாதப் போக்கை கொண்ட சிஹல உறுமய என்ற கட்சி தனது பெயரை ஜாதிக ஹெல உறுமய என்று மாற்றம் செய்துதனது வேட்பாளர்களாக பௌத்த பிக்குகளை மட்டும் நிறுத்தியுள்ளது. இலங்கை முழுவதும் இவர்கள் போட்டியிடுகிறார்கள். "நாடாளுமன்றத்தில் புத்தம் சரணம் கச்சாமிதினமும் ஒலிக்க வேண்டும். பௌத்த மதம் இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டும்" என்ற கோஷங்களை முன்வைத்து இவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். பௌத்த பிக்குகள் தேர்தல்களத்தில் குதித்திருப்பதை மற்றொரு பௌத்த பிக்குகள் சங்கம் வன்மையாக் கண்டித்து அதன் தலைவர் திலக்கருணாரத்னவின் வாசஸ்தலத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தையும்ஆரம்பித்தது.



திலக் கருணாரத்ன

இலங்கை வரலாற்றில் ஒரு கட்சியில் பௌத்த பிக்குகள் மட்டும் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடுவது இதுவே முதன் முறையாகும்.

எது எப்படி இருந்தாலும் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தமிழர்களுக்கு எதுவுமே வழங்கக் கூடாது என்ற நிலைப்பாட்டுடன் களத்தில் குதித்துள்ளன.

தேர்தல் முடிவுகள் வெளிவரும்போது மக்களின் நிலைப்பாடு அம்பலத்துக்கு வரும்.

வரதன்

## மிகக் குறைந்த அணிகள் யாழில் கூடிய அணிகள் அம்பாறையில்

இலங்கை தேர்தல் களம், இம்முறை முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில், அதிகமான கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் போட்டிக் களமாக மாறியிருக்கிறது. கூடிய அணிகள் போட்டியிடும் மாவட்டம் அம்பாறை. குறைந்த அணிகள் போட்டியிடும் மாவட்டம் யாழ்ப்பாணம்.

கொழும்பில் 17 கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இங்குதான் அதிகளவிலான கட்சிகள் போட்டியிடுகின்றன. அடுத்ததாக குருநாகல் மாவட்டத்தில் 15 கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

மாத்தளை மாவட்டத்தில் 14 கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இதே போன்று புத்தளம் மாவட்டத்தில் 14 கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹா மாவட்டத்தில் 14 கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களும், களுத்துறை மாவட்டத்தில் 14 கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 கட்சிகளும் 8 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் 14 கட்சிகளும் 4 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

திகாமடுல்ல மாவட்டத்தில் மட்டும் 14 கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. மிக அதிகமான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடும் மாவட்டமாக இது கருதப்படுகின்றது.

கேகாலை மாவட்டத்தில் 13 கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும், காலி மாவட்டத்தில் 12 கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12 கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும், மொனறாகலையில் 12 கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

ஏனைய மாவட்டங்களான பதுளை, மாத்தளை மாவட்டங்களில் 11 கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும், அநுராதபுரம் மாவட்டத்தில் 10 கட்சிகளும் 5 சுயேச்சைக் குழுக்களும், பொலன்னறுவை மாவட்டத்தில் 9 கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களும், யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்த அளவில் 8 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இதன்படி 196 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக்கொள்வதற்காக, பதிவு செய்யப்பட்ட 24 அரசியல் கட்சிகளும், 200 சுயேச்சைக் குழுக்களும் இம்முறை தேர்தலில் போட்டியிட முன் வந்திருப்பது வியப்புக்குரிய விடயமாக இருக்கிறது.

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு நின்று கோஷம் செய்தும் நில உரிமை கோஷத்தை ஓங்கி ஒலித்தும் உணர்ச்சி பூர்வமாகத் தமது ஆதரவைத் தெரிவிக்க யாழ். மாவட்டத்துக்கான வேட்பு மனுக்களை தமிழ் கூட்டமைப்பினர் தாக்கல் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் செயலகத்துக்குச் சென்று தனது தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்தார்.

தமிழர் கூட்டமைப்பு வேட்பாளர்கள் முன்னாள் எம்.பி மாவை சேனாதிராஜாவைத் தலைமை வேட்பாளராகக் கொண்டு தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் தமிழ் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




பேருவளையில் பரம்பரை மாந்திரீகம்

அரபி, உருது, மலையாள மாந்திரீகம் (இன்ஷா அல்லாஹ்) இறைவன் அருளால்

சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்

*செய்வினை *ஏவல் *ஜின் *செய்தல் *பேய் *பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் [illegible]

*செய்வினை அகற்றி *வீடு *தோட்டம் *வியாபார ஸ்தலம் [illegible]

[illegible]

உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்

(வெளிநாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்)

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30 மணி முதல் சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்)

A.H.A. நஸ்பர் ஹாஜியார்,

69 பழைய ரோட், மொள்ளியமலை, பேருவளை.

(யூனானி வைத்தியசாலைக்கு அருகில்)

தொ.பே: 034-76932

வீடு இருக்குமிடத்தை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்

அலுவலகம் :– ஷாமிலா ஜுவலர்ஸ், 15 சுப்பர் மார்க்கட், காலி வீதி, பேருவளை. தொ.பே. 034 – 77586

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை எது என்பதை புரிந்து கொள்வீர்கள்

சுடர் ஒளி

மார்ச் 01 — 07, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஜனாதிபதியின் சமாதான கோஷம்

பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலமே இருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தனது பிரசாரக் கூட்டத்தை கடந்த வாரம் கண்டியில் ஆரம்பித்தது. ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனுராதபுரத்தில் நடத்தியது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் கடந்த மூன்று மாதகாலமாக அதிகாரப் போராட்டம் நிலவி வந்தது. அதன் உச்சமே தற்போதைய பொதுத்தேர்தல்.

ஆகவே, முன்பு இடம் பெற்ற எல்லாத் தேர்தல்களையும் விட இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. அது மட்டும் அல்ல, அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டின் எதிர்காலத்தை இந்தத் தேர்தல் பெருமளவு நிர்ணயிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலில் எப்படியும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்பதில் இரு பிரதான கட்சிகளுமே முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு வருடகாலமாக தாம் மேற்கொண்டுவந்த சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான சக்திகளை பிரதமர் ஒன்று திரட்டி தனது பிரசாரங்களை நடத்தி வருகிறார்.

மறுபுறம் ஜே.வி.பி அடங்கலாக ஒன்பது கட்சிகளின் கூட்டணி ஜனாதிபதி தலைமையில் பிரசாரங்களை நடத்திவருகிறது.

பிரதமர் தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தில் போரா, சமாதானமா? எது வேண்டும்? என்று நாட்டுமக்களைக் கேட்டிருக்கிறார். இது குறித்து நாட்டு மக்கள் தீர்மானிக்கும் காலம் வந்து விட்டது என்றும் கூறிஇருக்கிறார்.

இரண்டு வருடகாலமாக பிரதமர் கட்டி எழுப்பிய சமாதான முயற்சிகள் ஜனாதிபதியின் சமீபகால நடவடிக்கைகளினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி சமாதானம் பற்றி உறுதி மொழிகளை எப்படித்தான் வாரி வழங்கினாலும், ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றாவிட்டால் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்டு யுத்தம் மூளலாம் என்ற அச்சம் நாட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகிறது.

கடந்த காலங்களிலும் தற்போதும் ஜனாதிபதி கடைப்பிடித்த — கடைப்பிடித்து வரும் நிலைப்பாடுகள், அவரது கூட்டணியில் உள்ள கட்சிகளின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதான முயற்சிகளை ஆரம்பித்தாலும் அவற்றை அந்த முன்னணியால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

புலிகளுடன் பேச்சு நடத்தி சமாதானத்தை அடைய வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகிறார். ஆனால், புலிகளுடன் மட்டும் தான் பேச்சு நடத்த வேண்டும் என்று அவர் இன்னும் உறுதியாகக் கூறவில்லை. அதனைப் பகிரங்கமாக தெளிவாக அறிவிக்க முடியாத நிலைமை ஜனாதிபதிக்கு இருந்து வருகிறது.

மறுபுறம் ஜனாதிபதியின் கூட்டணியைச் சேர்ந்த பிரதான கட்சியான ஜே.வி.பி முழுதாக சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாடுகளையே கொண்டுள்ளது. வடக்கு — கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த புலிகள் தெரிவித்த யோசனைகளை ஜே.வி.பி. அடியோடு நிராகரித்துவிட்டது. தற்பொழுது அமுலில் உள்ள மாகாண சபைக் கட்டமைப்புக்கு உள்ளேயே நிர்வாகப் பரவல் என்று ஜே.வி.பி. கூறுகிறது. இப்படிக் கூறிக் கொண்டு புலிகளுடன் சமாதானப் பேச்சுக்குச் செல்லமுடியுமா?

ஜனாதிபதியின் கூட்டணியில் உள்ள அதாவுல்லா அணியும், கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான அலகு வேண்டும். சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்கிறது. இந்த விடயங்கள் தொடர்பாகவே ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டது.

ஆகவே ஜனாதிபதி சமாதானம் பற்றியும் பேச்சுவார்த்தை பற்றியும் எதை எதை எல்லாம் சொன்னாலும், அவரது பேச்சு வெறும் வாய்ப்பேச்சுடன் தான் நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏற்கனவே சமாதானத்தின் பேரில் தான் ஜனாதிபதி வடக்கு — கிழக்கில் யுத்தம் ஒன்றை நடத்தியவர். அதில் தோல்வியும் கண்டார். தற்பொழுது யுத்தத்தினால் சமாதானம் காணமுடியாது என்ற சுலோகத்தை முன்வைக்கிறார். இவை எல்லாம் தேர்தலில் மக்களின் வாக்குகளைச் சுருட்டவும், சமாதானத்துக்கு ஆதரவான அமெரிக்கா போன்ற வெளிநாடுகளை ஏமாற்றவும் தான். ஆகவே மக்கள் வாய்ப்பேச்சில் ஏமாந்து விடக்கூடாது. உண்மை நிலை அறிந்து செயற்பட வேண்டும்.

# பிக்குகளின் அரசியல் பிரவேசம் திருப்பம் ஏற்படுத்துமா?



இலங்கை அரசியலில் அதிரடித் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இனவாத, மொழிவாத பிரசாரங்களையும் கடந்து இப்போது மதவாத அரசியல் பிரசாரங்கள் ஆரம்பித்துவிட்டன.

ஆம், பௌத்தமதத்தைக் காப்பாற்றுவதற்காகவே நாம் தேர்தல் களத்தில் குதித்துள்ளோம் என்று வரிந்து கட்டிக்கொண்டு முதன் முறையாக பௌத்த மதகுருமார்கள் வாக்கு வேட்டையில் இறங்கிவிட்டனர்.

ஆரம்பத்தில் இந்த பிக்குமார்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது சிஹல உறுமய. ஆனால், சிஹல உறுமய இப்போது தன்னை நேரடியாக இனம் காட்டிக் கொள்ளாமல் உள்ளிருந்தே வேலை செய்கின்றது.

உண்மையாகவே பௌத்தமதத்தின் மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள், பிக்குமார் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்ததே சிஹல உறுமயவின் பின்னடிப்புக்குக் காரணம். எப்படித்தான் எவர் எதிர்த்தாலும் விட்டேனா பார் என்று ''ஜாதிக ஹெல உறுமய'' என்ற கட்சிப் பெயரில் பிக்குகள் தேர்தலில் குதித்து விட்டனர்.

இப்படி தேர்தலில் குதித்திருப்பவர்கள் யார்? கொலை கலாசாரத்தை அறிமுகப் படுத்தி இனக்குரோத வேகப் பிரசங்கிகளாக ஜே.வி.பி.யினது அரசியல் மேடைகளிலும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் அரசியல் மேடைகளிலும் பிரசாரப் பீரங்கிகளாக விளங்கிய பௌத்த பிக்குகளே இம்முறை நேரடியாகக் களம் இறங்கி விட்டனர்.

இந்த தீவிர — பிக்குகள் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் வழியை கடைப்பிடித்து அரசியலில் தடம்பதிக்க முனைகின்றனர் போலும்.

1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் மொழிவெறியை ஊட்டி ஆட்சியைக் கைப்பற்றினார்.

இப்போது இந்த பௌத்த பிக்குகள் மதத்தை வைத்து பிரசாரம் செய்து மக்களுக்கு மத வெறியை ஊட்டி ஆட்சிக்கு வரத்துடிக்கின்றனர். ஆனால் பெரும்பாலான பௌத்தர்கள் இதனைக் கண்டிக்கின்ற போதும் இவர்களை ஆதரிப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதனால் இவர்களுக்கு கிடைக்கும் வாக்குகள் ஜே.வி.பி.யில் இருந்தும், பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்துமே கிடைக்கும். ஆகவே ஜே.வி.பி — பொது ஜன ஐக்கிய முன்னணி வாக்கு வங்கியில் சரிவு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இதனால் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படலாம்.

ஆனாலும், ஜனாதிபதியே ''இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன், நாடு இரண்டு படுவதைத் தடுப்பேன், பௌத்தத்தையும் நாட்டின் இறைமையையும் பாதுகாப்பேன், சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பேன்'' என்றெல்லாம் உறுதிமொழிகளை வாரி வழங்கி வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினரும் சும்மா இருந்து விடவில்லை.

''இரண்டாகப் பிரிந்து கிடந்த நாட்டை ஒன்றாக்கினோம். 20 வருட யுத்தத்தை தடுத்து நிறுத்தினோம். அப்பாவி சிங்கள இராணுவத்தினரின் உயிர் இழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்தினோம்.

மூச்சும் பேச்சும் ஆயுதப் போராட்டம் தான், தனித்தமிழ் ஈழம் மட்டுமே தமது நோக்கம் என்றிருந்த புலிகளை சமாதானப் பேச்சு மேடைக்கு வரச் செய்தோம். தனிநாட்டு கோரிக்கையை கைவிடச் செய்தோம்.

அதள பாதாளத்தில் கிடந்த பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பினோம். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தோம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் தொழில் வாய்ப்புக்களுக்கும் வழியமைத்தோம். ஆனால், இந்த ஜனாதிபதி சந்திரிகா இவை எல்லாவற்றுக்கும் வேட்டு வைத்து விட்டாரே! இவருடைய பேச்சுக்களையும், உறுதி மொழிகளையும் எப்படி நம்புவது?''—என்கின்றனர்.

இப்படியான நிலையில் பிக்குகள் வேறு அரசியலுக்குள் நேரடியாக நுழைந்திருக்கிறார்கள். என்ன செய்வது என்று தெரியாது சிக்கித் தடுமாறுகின்றனர் நாட்டுமக்கள்.

—இராசிகா—

# புலிகளின் முழு ஆதரவுடன் களமிறங்கிய கூட்டமைப்பு

பொதுத் தேர்தல் பரப்புரைகள் யாழ்ப்பாணத்தில் முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் தேர்தல் களம் வெகுவாகச் சூடுபிடித்திருக்கின்றது.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இந்தமுறை எட்டு அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேச்சைக் குழுக்களுமாக பத்துமுனைப் போட்டி. இதில் பத்துமுனைகளும் சூடாக இருக்கப் போவதில்லை.

கடைசியாக 2001 டிசம்பரில் நடந்த தேர்தலில் பத்து அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவுமாக பதினொரு அணிகள் களமிறங்கி இருந்தன. இந்தமுறை ஒன்று குறைவாக பத்து அணிகள்.

இது தமிழர் விடுதலைக் கூட்டணி இல்லாத முதல் தேர்தல். ஆனாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னரிலும் பலம் பெற்று ஒரே நோக்கு— ஒரே கொள்கை—என்ற ஸ்திரப்பாட்டுடன் களத்தில் இறங்கியிருக்கிறது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பில் இடம் பெறும் நான்கு கட்சிகளுடன் ஈழமக்கள் ஜனநாயக முன்னணி (ஈ.பி.டி.பி), ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதராஜப்பெருமாள் அணி, புதிய இடதுசாரி முன்னணி, சுய ராஜ்ஜியக் கட்சி, ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி, ருகுணு மக்கள் கட்சி, தேசியஹெல உறுமய ஆகிய கட்சிகள் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றன. இவற்றில் ஈ.பி.டி.பிமற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகியன இணைந்து ஒன்றாக போட்டியிடுகின்றன.

இரண்டு சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளன. அதில் முக்கியமானது கூட்டணித்தலைவர் ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழு. அடுத்தது வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பல்லவராயன் கட்டைச் சேர்ந்த ஒரு சுயேச்சைக் குழு.

கடந்த தேர்தலில் யாழ்பாணத்தில் 36 ஆயிரத்து 217 வாக்குகளைப் பெற்று நாடளுமன்றத்துக்குத் தெரிவாகியவர் வீ.ஆனந்த சங்கரி.

இம்முறை கட்சி, சின்னம் இரண்டையும் பயன்படுத்த முடியாத இக்கட்டான நிலைமையில் சுயேச்சை அணி ஒன்றை உருவாக்கிப் போட்டியிடவேண்டிய நிலை அவருக்கு. ஆனந்த சங்கரியின் சுயேச்சைக் குழுவுக்கு சின்னமாக பூட்டு வழங்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைமையை ஏற்று தமிழர் ஐக்கியத்தை வலியுறுத்தி நிற்கும் தமிழ்க் கூட்டமைப்புடன் முரண்பட்டு — விலகி— தனியாக நிற்பவர் ஆனந்த சங்கரி.

புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஈபி.டி.பி தலைமையிலான அணியில் இந்தமுறை புளொட் அமைப்பு இல்லை. ஆக ஈ. பி. ஆர். எல்.எவ்.வரதர் அணியை மட்டும் இணைத்துக் கொண்டு களத்தில் நிற்கின்றது ஈ.பி.டி.பி.

தேர்தல் களத்தில் தமிழ்க்கூட்டமைப்புக்கு எதிரும் புதிருமான நிலைப்பாட்டுடன் நிற்கும் ஈ. பி. டி.பி தான் பிரதான எதிரணி என்றாலும் கூட்டமைப்புச் சிக்கல்களால் அதிக



மாவை சேனாதிராஜா

கவனத்தை ஈர்த்திருப்பவர் ஆனந்த சங்கரி தான்.

கட்சி அரசியல், ஜனநாயகம், பாரம்பரியம் என்பனவற்றுக்கு அப்பால்— தமிழ் மக்கள் ஓரணியாக ஒற்றுமைப்பட்டு, ஒன்று திரண்ட — பிரதிநிதித்துவத்தை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்காட்டும் அவசரமும் அவசியமுமான ஒரு வரலாற்றுக் கட்டத்தில், கட்சிப்பாரம்பரியம், ஜனநாயகம் என்பனவற்றுக்காக தனது தனித்துவத்தைப் பெரிதுபடுத்தி விடாப்பிடியாக நிற்பவர் ஆனந்த சங்கரி.

ஆயிரக்கணக்கான போராளிகளினதும் மக்களினதும் தியாகத்தின் மீது சத்தியம் எடுத்துக்கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலை எதிர் கொள்கின்றது தமிழ் இனம். இந்தக் கட்டத்தில் சுயலாப அரசியல் நோக்கங்களுக்கு இடமில்லை. அதை மக்கள் நிராகரிக்கவே செய்வர் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்ட பின்னரும் கூடவரிந்து கட்டிக்கொண்டு விடாப்பிடியாக நிற்கிறார் ஆனந்தசங்கரி.

ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டு ஒரே லட்சியத்துக்காக களம் இறங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தாங்கள் முழுமனதோடு ஆதரிப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர். இலங்கையின் அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் தேர்தலில் போட்டியிடுகின்ற தரப்பு ஒன்றுக்கு பகிரங்கமாகத் தங்கள் ஆதரவை புலிகள் தெரிவிப்பது இதுதான் முதல் தடவை. எனவே இந்தத் தேர்தலில் இது ஒரு விசேட அம்சம்

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இந்த முறையும் பதிவு செய்யப்பட்ட 6லட்சத்து 33 ஆயிரத்து 500 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர்

இவர்களை விட இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிளிநொச்சி பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் எண்பது ஆயிரம் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க உள்ளனர். இவர்களின் வாக்குகள், இந்த முறை தேர்தல் முடிவுகளில் பெரும் செல்வாக்குச் செலுத்தப் போகின்றன என்பது வெளிப்படை.

கிளிநொச்சியிலும், வடமராட்சி கிழக்குப் பகுதியிலுமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் இந்த வாக்காளர்கள் வாக்களிக்கப்போவது எங்கே என்பது இன்னமும் தீர்மானமாகத் தெரியாதபோதிலும் அவர்கள் அனைவரும் வாக்களிப்பதற்குத் தேவையான முழு ஏற்பாடுகளையும், ஒத்துழைப்பையும் வழங்க புலிகள் ஆயத்தமாக இருக்கின்றனர்.

—வலிகாமத்தான்—



# 74 வயதில் ஆண் குழந்தையா?

74 வயதான அப்பாவுக்கும் 63 வயதான அம்மாவுக்கும் ஆண் குழந்தை பிறந்துள்ளது. தாயும் சேயும் நலமாக இருக்கின்றனர். நம்பமுடியவில்லையா? நம்பித்தான் ஆக வேண்டும். இது தமிழகத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம்.

ஈரோடு குமலன் குட்டையைச் சேர்ந்தவர் 74 வயதான சுப்பிரமணியம். அவரது மனைவியான 63 வயதான பாப்பாத்திக்கு 45 ஆண்டுகளாக குழந்தை இல்லை.

இவர்கள் கடந்த 35 ஆண்டுகளாக இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளில் மருத்துவம் செய்தும் பயனில்லை.

இந்த நிலையில் மாருதி மருத்துவமனைக்கு கடந்த ஜூன் மாதம் சென்றனர். அங்கு பாப்பாத்தியை பரிசோதித்து பார்த்த போது அவருக்கு மாதவிடாய் நின்று 20 வருடங்களுக்கு மேல ஆனது தெரியவந்தது. இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டது.

பாப்பாத்தியை முழுவதுமாகப் பரிசோதித்து எல்லா நோய்களையும் கட்டுப்படுத்திய மருத்துவ நிபுணர்கள், சோதனைக் குழாய் மூலம் பாப்பாத்திக்கு குழந்தை பிறக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சுப்பிரமணியத்தின் உயிரணுக்களைக் கொண்டு ஐந்து நாள் கரு சோதனைக் குழாய் மூலம் உருவாக்கப்பட்டது. அந்தக் கரு பாப்பாத்தியின் கருப்பையில் வைக்கப்பட்டது. வயது முதிர்ச்சி காரணமாக வழக்கமாகச் சுரக்கும் ஹோர்மோன்கள் பாப்பாத்திக்கு சுரக்கவில்லை. எனவே, கருப்பைக்குள் செயற்கை முறையில் கரு வளர்க்கப்பட்டது.



சுப்பிரமணியத்துக்கு 74 ஆவது பிறந்த நாளான கடந்த 23 ஆம் திகதி அறுவைச் சிகிச்சை மூலம் பாப்பாத்திக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இது குறித்து குழந்தையின் தந்தை சுப்பிரமணியம் கூறியதாவது: "எங்களுக்குத் திருமணமாகி 45 வருடங்கள் ஆகின்றன. 35 வருடங்களாக பலவித சிகிச்சைகள் செய்தும் பயன் கிடைக்கவில்லை. ஈரோடு மாருதி மருததுவ மையத்தில் "பிளாஸ்டோசிஸ்ட் கல்ச்சர்" எனப்படும் சோதனைக் குழாய் மூலம் கருத்தரிக்கும் முறை வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதை அறிந்தோம். டாக்டரை அணுகி சிகிச்சை செய்ய ஒப்புதல் அளித்தோம். அதன் பின்பு இந்த சிகிச்சை எனது மனைவிக்கு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. எனது 74 ஆவது பிறந்த தினத்தில் எனக்கு ஒரு ஆண் வாரிசை டாக்டர்கள் உருவாக்கித் தந்துள்ளனர்". இப்படிச் சொன்னார் அவர்.

—ஆஷா—



# நெருக்கமாக அமர்வது மூலம் எயிட்ஸ் தொற்று சாத்தியமா?

**கேள்வி:** வயது 36. பெண். வெளிநாட்டில் வேலை செய்ய போகமுன்னர் மருத்துவப் பரிசோதனை செய்த போது இருகால்களிலும் இரத்த நாளங்கள் தெரிவதால் மருத்துவ தகுதி எனக்கு இல்லை என்று கூறி மறுத்து விட்டார்கள். இதற்கு பரிகாரம் உண்டா?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டுள்ளது VARICOSE VEINS எனப்படும் இரத்த நாளங்களில் வரும் குறைபாடு. இதனை சித்தவைத்தியத்தில் 'நரம்பு சிலந்தி' என்று அதன் தோற்றத்தை வைத்து குறிப்பிடுவர். இருதயத்தை நோக்கிச் செல்லும் இரத்தத்தை கொண்டு செல்ல நாளங்கள் (VEINS) உதவுகின்றன. கைகளிலும் கால்களிலும் இந்த நாளங்கள் மேற்புறமாகவும் உட்புறமாகவும் அமைந்துள்ளன. மேற்புறமாக உள்ள நாளங்கள் இரத்தத்தை சேகரித்து உட்புற நாளங்களுக்கு அனுப்புகின்றன. இப்படி உள்ளே அனுப்பப்பட்ட இரத்தம் திரும்பி வெளிப்புறம் வராது இருக்க இந்த உட்புற வெளிப்புற நாளங்களை இணைக்கும் நாளத்தில் வால்பு (VALVE) போன்ற அமைப்புகள் உண்டு.

இந்த வால்வு அமைப்புகள், அதிக நேரம் நின்று கொண்டே பணிபுரிபவர்கள், அடிக்கடி கர்ப்பம் அடையும் பெண்கள், நிறை அதிகம் உள்ள கொழுத்த மனிதர்கள் போன்றவர்களுக்கு பலவீனமடைந்து காலகெதியில் செயலிழந்து போவதால் -- வெளிப்புற இரத்தத்தை உள்ளே அனுப்பும் பணி செவ்வனே நடைபெறாது போகிறது. இதனால் நாளங்களில் இரத்தம் தேங்கும் நிலைமை உருவாகிறது. இந்த நிலைமையினால் நாளங்கள் புடைத்து வெளியே தெரிகின்றன. தொடர்ந்து ஏற்படும் இந்த தேக்க நிலையினால் தொடர்ந்து நின்று கொண்டு வேலை செய்வது கஷ்டம். இரவில் கால் உளைவு, எரிவு என்று ஏற்படும். அதிக தேக்க நிலை பின்னர் இருதயத்தை கூட பாதிக்கும். ஆரம்ப நிலையில் வெளியே தெரியும் நாளங்களை சுருங்க செய்ய நாளங்களுக்குள்ளே ஊசி மருந்துகளை ஏற்றுவதுண்டு. இதனை SCLEROSANT சிகிச்சை முறை என்று அழைப்பர். இந்த சிகிச்சை முறைக்கும் — குணம் தெரியாவிடின் — அரையிலும் — கால் கணுக்காலிலும் நாளத்தின் இரு முனைகளையும் துண்டித்து — நாளத்தை உருவி எடுப்பர். இதனை STRIPPING சிகிச்சை முறை என்று அழைப்பர். உங்கள் நிலைமை இதில் எந்த சிகிச்சை முறைக்கு ஏற்றது என்பதை சத்திர சிகிச்சை நிபுணர் மூலம் அறிந்து சிகிச்சை பெறவும். இந்த நோயினால் பீடிக்கப்பட்டோர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு மருத்துவர்கள் தெரிவதில்லை.

**கேள்வி:** வயது 25 பெண். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு படிக்க வந்து ஒரு வருடமாகின்றது. கடந்த சில மாதங்களாக எனது தோலில் வட்ட வட்டமாக வெளிர் நிறமாகிறது. அக்குளிலும் கறுப்பு கறுப்பாக தீட்டுகள் தெரிகின்றன. சரும வியாதி நிபுணரிடம் காட்டிய போது 'தேமல்' என்று சொல்லி பூச்சு மருந்தும், மாத்திரைகளும் தந்தார். உபயோகித்த போது சிறிது குணம் தெரிந்தது. சில சிநேகிதிகள் இது கொழும்பில் சாதாரணமாக வரும் சரும




வியாதி — 'அழகு தேமல்' என்கின்றார்கள் — ஆலோசனை கூறவும்.

**பதில்:** உங்கள் சருமநோயை அழகு தேமல் என்று சிலரும் அழுக்குத் தேமல் என்று சிலரும் குறிப்பிடுவர். ஆனால், இதில் அழகோ, அழுக்கோ எதுவுமே சம்பந்தப்படவில்லை. இது ஒரு பூசணத்தொற்று (FUNGAL DISEASE) ரீனியா (TINEA) வகை பூசணத்தால் ஏற்படுவது. கொழும்பில் வசிப்போர் குளோரின் கலந்த நீரை உபயோகிப்பதால் — அவர்களின் தோல் தன் பாதுகாப்பை இழந்து இவ்வகை பூசணநோய்களால் பாதிக்கப்பட ஏதுவாகின்றது. அது தவிர ஈரப்பதன் அதிகரித்த கொழும்பு போன்ற மாநகர சூழலில் — வியர்வை அதிகமாக இருப்பதால் இந்த பூசண வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலையும் ஏற்படுவதும் மற்றொரு காரணம். மேலும் பூசண நோயுள்ள ஒருவரின் ஆடைகளை மற்றொருவர் மாற்றி மாற்றி அணிவதும் பூசண தொற்று ஏற்பட வாய்ப்பாகிறது. இன்று இந்த நோய்க்கு பல வகையான மாத்திரைகளும் — பூச்சு மருந்துகளும் கிடைக்கின்றன. ஆனால், நூற்றுக்கு நூறுவீதம் குணம் காண்பது அரிது. அப்படி குணம் கண்டால் கூட — பூசண தொற்றின் வடுக்கள் பல மாதங்கள் மாறாமல் இருக்கும்.

**கேள்வி:** ஆண் — 30. நிறைய பீடி, சிகரெட் குடிக்கும் பழக்கம் 19 வயதிலிருந்து இருக்கின்றது. கடந்த சில மாதங்களாக கொஞ்சத் தூரம் நடந்தால் கணுக்கால் உளைந்து — பிடிப்பு உண்டாகி — சிறிது ஓய்வெடுக்காமல் தொடர்ந்து நடக்க முடியாது. பல மருந்துகள் எடுத்தும் பலனில்லை. சில விசேட வைத்தியர்கள் — அறுவைச் சிகிச்சை தான் உதவும் என்கின்றார்கள். விபரமாக ஆலோசனை தரவும்.

**பதில்:** உலகிலேயே கொடிய நஞ்சு புகையிலையில்தான் உண்டு. புகைக்கும் இளைஞர்களுக்கு வரக் கூடிய — இருதய குழாய் அடைப்பு, நுரையீரலழற்சி, நுரையீரல் புற்று என்பவற்றோடு இந்த கால்களுக்கு செல்லும் இரத்த நாடிகளின் அடைப்பும் ஒன்று. இதனை THROMBOANGITIS OBLITERANS அல்லது BUERGER நோய் என்று கூறுவர். கால் தசைகள் தொடர்ந்து இயங்கும் போது — இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்பினால் போதிய இரத்தம் கிடையாமல் ISCHAEMIA எனப்படும் இரத்த குறைவோட்டம் ஏற்பட்டு தாங்கொண்ணாத வலி ஏற்படும். இதனால் தொடர்ந்து நடக்க முடியாமல் போய்விடும். சற்று ஓய்வெடுத்தபின் தசைகள் மீண்டும் இரத்தோட்டத்தை பெற்று இயங்குகின்றன. காலம் செல்லச் செல்ல — ஓய்வு நிலையில் கூட குருதி குறைவு ஏற்படுவதால் — தூங்கும் போது கூட கால் தசைகளில் தாங்க முடியாத வலி ஏற்படும்.

இரத்தக் குழாய்களை விரிவடைய வைக்கும் மருந்துகள் ஆரம்பகாலங்களில் உதவினாலும் — பின்னர் சத்திர சிகிச்சை மூலம் இரத்த குழாய்களுக்கு செல்லும் குறிப்பிட்ட நரம்புகளை வெட்டி விடுவதன் மூலம் நிரந்தரமாக இரத்த குழாய்களை விரிவடைந்த நிலையில் வைத்துக் கொள்ள முடியும். எனினும் சிறிது காலத்திற்குப் பின்னர் மேலும் அடைப்புகள் ஏற்பட்டால் கால் பாகங்களுக்குரிய இரத்தோட்டம் முற்றாகவே நின்று காலை வெட்டி அகற்றவேண்டிய நிலை ஏற்படும். எனவே முதலாவது வேலையாக இன்றே புகைத்தலை நிறுத்துங்கள்.

**கேள்வி:** வயது 27. மணம்முடியாதவர். கடந்த மாதம் வெளிநாட்டு வேலைக்காக — நேர்முகப்பரீட்சைக்கு தோன்ற இரவு பஸ்ஸில் கொழும்பு வந்தேன். எனக்கு பக்கத்தில் ஓர் இளம்பெண்ணும் அமர்ந்து வந்தாள். அவளும் வெளிநாட்டு வேலை விஷயமாக கொழும்பு சென்று கொண்டிருந்தாள். நாங்கள் முழுப்பயணத்தின் போதும் மிகவும் நெருக்கமாக அமர்ந்திருந்தோம். வேறு எவ்வித நெருக்கமும் இருக்கவில்லை. குளிர்பானம் மட்டும் ஒரே போத்தலில் இருந்தது. இருவரும் பகிர்ந்து கொண்டோம். நேர்முகப்பரீட்சையில் மருத்துவ பரிசோதனையின் போது எனக்கு எவ்விதநோயுமில்லை என்ற தெரிந்து கொண்டு அடுத்த மாதம் வெளிநாடு செல்லத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். என்னோடு வந்த பெண்ணுக்கோ ''எயிட்ஸ்'' நோய் இருப்பதாக மருத்துவ பரிசோதனையில் தெரிய வந்தது. அப் பெண்ணின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது எனக்கு மிகவும் பயமாக உள்ளது. நெருக்கமாக உட்கார்ந்து பயணம் செய்ததால் எனக்கு ''எயிட்ஸ்'' நோய் தொற்றியிருக்குமோ? இங்கு மருத்துவரிடம் காட்டி அறிவுரை கேட்ட போது தொற்று ஏற்பட்டதா, இல்லையா என்று மூன்று மாதங்களின் பின்னர் தான் கண்டறிய முடியும் என்றார். உங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன்.

**பதில்:—** நீங்கள் நெருக்கமாக பயணித்ததை தவிர வேறு எவ்விதமான நெருக்கமான பாலியல் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லையென்றால் நிச்சயம் உங்களுக்கு ''எயிட்ஸ்'' தொற்று ஏற்பட்டிருக்காது.

''எயிட்ஸ்'' நோய் ஒரு பாலியல் நோய். பாலுறவு கொள்வதன் மூலமாகவே அது பரவுகிறது. மேலும் எயிட்ஸ் நோயாளியின் இரத்தம் நோயில்லாத இன்னொருவரின் இரத்தத்தோடு சேரும் சந்தர்ப்பங்களில் அதாவது இரத்த ஏற்றல்(BLOOD TRANSFUSION) விபத்துக்களில் இரத்தத் தொடர்பு ஏற்படுதல்(CONTAMINATION) என்பவற்றால் எயிட்ஸ் தொற்று ஏற்படலாம்.

எயிட்ஸ் நோயாளி ஒருவரின் எச்சில் படுவதாலோ, அவர் உபயோகித்த பாத்திரங்களை, பொருட்களை கையாளுவதாலோ, நெருக்கமாக உட்கார்ந்து பயணம் செய்வதாலோ எயிட்ஸ் தொற்று ஏற்படாது. நீங்கள் பயமின்றி உங்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லலாம்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்

நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாரச்சி மாவத்தை
கொழும்பு - 14

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | ஹிட்ஸ் மூவி | நகைச்சுவை நேரம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | ஸ்டார் சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலாம் பாடலாம் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | ஹிட் லிஸ்ட் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | டொப் 10 மூவிஸ் |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சொய்ஸ் | சின்னசின் ஆசைகள் |
| 12.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ரிலாக்ஸ்டைம் | சின்னசின் ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ்டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விவரண சித்திரம் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | இசை நிகழ்ச்சி |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சாய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | இன்றும் கலாட்டா | வீக் என்ட் மேட்னி | ஒப்போடு |
| 5.30 | திரையிசை | திரையிசை | திரையிசை | திரையிசை | திரையிசை | | |
| 6.00—6.15 | களம் | இளைய கானம் | ஒப்போடு | 6.00 பாடல்கள்/6.15 இளந்தளிர் | திரை வானம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்திசெய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | விசேட நிகழ்ச்சி |

# கோர்ட்டுக்குப் போன சங்கரியார் கோட்டைவிட்டார் கூட்டணியை!

'சங்கரி' என்பது சிவனின் மனைவியின் மறுநாமமல்லவா? சைவ சமயிகள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை 'சாத்தான்களை விட' மிக மோசமாகக் கருதுவர்.

அம் மும்மலங்களை அழித்து, பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு இறைவன் உறுதுணையாக உள்ளவர் என்பதனால் சிவனுக்கு சங்கரன் என்றும் உமைக்கு சங்கரி என்றும் ஆயிற்று என்பர் சைவர்கள். வேறு வேறு புராணரீதியான விளக்கங்களும் வியாக்கியனங்களும் கூட உண்டு.

'சங்கரித்தல்' என்றால் அழித்தல். ஆனந்த சங்கரி, தனது சொந்த ஆனந்தத்தை – அரசியல் பேரானந்தத்தை சங்கரித்துக் கொண்டார். இது ஒரு முரண்நகைதான்!

அரசியல் ஆணவம், வரலாற்றுக் கன்மம், கொள்கையில்லா மாயை ஆகிய மும்மலங்களையும் துடைத்தெறிய முடியாது என்று பிடிவாதக்காரராக நின்ற சங்கரிக்கு ஏப்ரல் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் தீர்ப்புச் சொல்லும்.

## என்றுமில்லாத கறை

லங்கா சமசமாஜியாக இருந்த சங்கரியார் சமதர்மத்தின், சோஷலிஸத்தின் அடிப்படையில் தமிழ் – சிங்கள ஒற்றுமைக்கு உழைத்து, வர்க்க ரீதியாகச் சிந்தித்து எல்லா இனங்களும் உரிமைகள் பெற்று விளங்கக்கூடிய அரசியல் ஒன்றுக்கு உழைத்தாரா? அதுவும் இல்லை. ஒரு போலிச் சோஷலிஸ்ட்டாகலங்கா சமசமாஜக் கட்சியில் காலங்கடத்தி இருந்தார்.

பின்னர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் காரராகி தமிழரசுக் கட்சியை தூற்று தூற்றென தூற்றிக் கொட்டினார். நாடாளுமன்றில் திட்டித்தீர்த்தார். வடக்கு – கிழக்குத் தமிழரின் உரிமைபற்றிய தமிழரசுக் கட்சியின் கோட்பாடுகளை எள்ளி நகையாடினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய போது அந்த இணைவுக்குள் தன்னை நிலை நிறுத்திக் கொண்டார்.

தாவித் தாவியே கடும் உபாயங்களோடு வாழ்ந்த அரசியல் சாணக்கிய மேறிய முதிர்த்தனத்தில் அரசியல் ஆணவம் கொண்டு தனது அரசியல் வரலாற்றில் என்றுமில்லாத கறையைப் படியவிட்டுள்ளார் சங்கரியார்.

கடந்த காலக் கசப்புக்களை மறந்து புரிந்துணர்வோடு பல தரப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஒன்று பட்டு ஒற்றுமையாகத் தேர்தலில் போட்டியிட முன்வந்த போது, "நான்" "நான்" என்ற ஆணவத்தோடு பித்தேறி பிதற்றினார் சங்கரி.

போராளிகளும் தமிழ் மக்களுமாக ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் போராட்டத்தில் மடிந்து கிடக்கும் போது – உலகம் முழுவதற்கும் தமிழினத்தின் ஏகோபித்த குரலைக் காட்ட வேண்டிய நேரத்தில் – ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலில் ஒரு 'அரசியல்' குருட்டுத் தனத்தோடு செயற்பட்டு வருகின்றார்.

மடிந்த மனிதர்கள், அழிந்த சொத்துக்கள் – சுகங்கள், தொலைந்த வரலாறு.... எல்லாவற்றையும் இலங்கைத் தமிழர்கள் நினைந்து நினைந்து ஏங்கும் போது – இன்னும் ஒரு பகுதி மக்கள் அகதி முகாம்களில் வாடிவதங்கும்போது – தனது சுயவரலாற்றையே நொண்டித்தனமாக்கி தமிழினத்தை நோகடித்துள்ளார் – சங்கரி.

ஆயிரமாயிரம் மாவீரர்களின் குடும்பங்களும் உறவுகளுமாக, ஆயிரமாயிரம் மாவீரர்களின் கல்லறைகளில் அழுது கிடக்கிறது தமிழ்த்தேசம். ஆயிரமாயிரம் போராளிகளின் பெற்றோர், உற்றார் சமாதானத்துக்கும்,



வேட்புமனு தாக்கல் செய்ய பலத்த பாதுகாப்புடன் ஆனந்த சங்கரி வருகிறார்.

உரிமைகளுடனான தீர்வுக்கும் காத்து விழி பூத்துக்கிடக்கின்றனர். புலிகளின் தலைமையும் தளபதிகளும் போராளிகளும் அரசியல் தளத்தில் ஓயாமல் உழைத்துக் கொண்டிக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் முப்பது வருட வரலாற்றை 'விடுதலை அரசியல்' தொடப்போகிறது: ஆனால், சங்கரியால் ஒரு 'சிறு துளி' தியாகத்தைச் செய்ய முடியாமற் போய்விட்டது.

சங்கரி அவர்களை கரும்புலியாகி வெடித்துச் சிதறி உயிரைக் கொடு என்றா எவராவது கேட்டார்கள்?

## சங்கரியாரின் லொஜிக்

புலிகளை ஏகப் பிரதிநிதிகள் என்று எவ்வாறு சொல்வது என்று கேட்டிருந்தார் சங்கரி. டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் எம்.பியாக நாடாளுமன்றத்தில் தெரிவாகியுள்ளபோது புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக எப்படிக்கூறுவது என்பதே அவரது 'லொஜிக்'!

புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகள் என்று இடித்து உரைத்து, சர்வதேசத்தின் மனச்சாட்சியை உசுப்பி உரிமைகளுடன் கூடிய தீர்வு ஒன்றைப் பிறப்பிக்க உதவவேண்டிய ஓர் இக்கட்டான வேளையில் சிங்களத்தின் வாய்க்கு சர்க்கரை போடுவது போல 'புளிச்சல் ஏவறை' லொஜிக் கதைக்கிறார் சங்கரியார்.

கடந்த இரண்டு தசாப்தகாலமாக அரசியல் – இராணுவ இயக்கமாக, தமிழர் உரிமைகளுக்காக உச்ச அளவான பேரம் பேசும் தகுதியோடு உள்ள விடுதலைப்புலிகள் அமைப்பின் இலக்குகளும் இலட்சியங்களும் அல்ல, தனது சுயேச்சைக்குழுதான் தமிழர் உரிமைகளை கொடுக்கப் போகிறது என்று 'பொரிமாத் தோண்டித்தனமாக' சங்கரி கனவு காண்கிறார்போலும்.

மாவீரர் கல்லறைகளில் வீழ்ந்து வணங்கி விட்டு, தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தந்தை செல்வாவின் ஆத்மாவின் ஆசீர்வாதத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கொள்கை இயக்கத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உலகுக்குப் பிரகடனம் செய்யும் மகாபெரும் நோக்கத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பாதுகாப்புடன் – அதாவது செம்மணியில் குமருகளை, இளைஞர்களை, தாயை, தந்தையை, சேயை கொன்று புதைத்த இராணுவத்தின் பாதுகாப்புடன் – தமிழ்த்தேசியத்தின் அரசியல் உந்தத்துக்கு 'எதிர்ப்புள்ளியாக' தேர்தலில் குதித்திருக்கிறார் ஆனந்தசங்கரி. சிங்களப் படைகளின் உச்சப்பாதுகாப்புடன் வேட்புமனுத்தாக்கல் செய்த சங்கரியின் மனச்சாட்சி பச்சோந்தித் தனமானது என்றே சொல்லவேண்டும்!

## பின்னணி குறித்து சந்தேகம்

அரசியல் குருட்டுத்தனம், வரலாற்று நொண்டித்தனம், அசல் பச்சோந்தித்தனம் ஆகியவற்றின் ஒட்டு மொத்த வடிவமாக பரிணமித்துள்ள சங்கரிக்கு, பிராந்திய வல்லாதிக்கமும் பௌத்த சிங்களப் பேரினவாதமும் பின்புலமாக உள்ளன என்பது ஐயத்துக்கிடமின்றிப் புலனாகிறது.

'தாய் முலை திருடியும் தான் வாழப்புத்தி' வகுத்த இந்த மனிதன் ஒரு மறைமுகமான அரசியல் அட்டவணையைக் கொண்டுள்ளார் என்றே சந்தேகிக்கவேண்டியுள்ளது.

சங்கரியின் பூச்சாண்டித்தனங்களுக்கும் ஏமாற்று வித்தைகளுக்கும் யாழ்ப்பாணம் நல்லதொரு தேர்தல் பாடம் படிப்பிக்கும்.

தனக்கு சுயலாப அரசியல் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட சங்கரி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை நீதிமன்றத்தில் முடக்கி வைத்துக் கொண்டு, செயலாளர் நாயகம் சம்பந்தனுக்கு எச்சரிப்புக்கள் செய்து கடிதங்கள் வரைந்தார்.

கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தாமல் தனது பதவியின் ஆபத்தைக் கருதி இழுத்தடித்து வந்த இந்த மனிதன், வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரவேண்டும் என்று 'நடிப்பு நடைமுறை' ஒன்றைப் பற்றி கூறி வந்தார்.

ரணில் அரசுடன், விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளும் புலிகளின் அரசியல் போராளிகள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களும் சர்வதேச நாடுகள் மத்தியில் இனப்பிரச்சினையின் ஒரு சரியான வடிவம் விளங்கப்படுவதற்கு ஏதுவான ஒரு சூழல் நிலவும் இக்காலத்தில் – தமிழர்களின் பிரதிநிதித்துவத்துக்கான அரசியல் பலம் எவ்வாறு மக்களின் வாக்குகள் மூலம் நிரூபணமாகப் போகிறது என்று சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் வேளையில் – 'குறுக்கே இழுத்திருக்கிறார்' சங்கரி. இந்தச் சுயநலத்துக்கான பின்னணி விரைவில் மக்களுக்கு வெளியாகலாம்.

## சடுகுடு விளையாட்டல்ல

எனினும், தமிழ்மக்கள் மிகவும் தூரநோக்குடன், தமிழர் பிரதிநிதித்துவத்தை உரக்கப் பலப்படுத்தும் வகையில், வரலாற்று முக்கியத்துவத்தையும், சர்வதேச அரசியல் பொருளாதார அம்சங்களையும் தென்னிலங்கை அரசியல் போக்கையும் நன்கு விளங்கியவர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தும் வகையிலேயே செயற்படவுள்ளனர்.

பொரிமாத் தோண்டித்தனமான கனவுகளுடன் தேர்தல்களத்துக்கு ஓடி வந்தவர், தமிழர்கள் எல்லோரும் தனக்காக 'பொன் முட்டைகள் இடும் பெட்டைக் கோழிகள்' என்றா நினைத்தார்?

பாவம் மனிதர்! அரசியல் ஞானமுள்ளவர் என்றால், தனது தவறுக்காக என்றோ ஒரு நாள் தமிழினத்திடம் மன்னிப்புக் கேட்பார்!

இது வரலாற்றுத் தேர்தல் – வெறும் 'சடுகுடு' விளையாட்டல்ல!

-யாழ். ஆத்மா-



"என் மனைவி சித்திரா படுத்துறபாடு தாங்க முடியல"

"சித்திர(ா)வதை என்று சொல்லு"

# பல்லில் புற்று நோய் வருமா?

புற்றுநோய் என்பது இன்றைய உலகில் மனிதர்களை பீதி கொள்ள வைக்கும் ஓர் அபாயகரமான நோயாகி விட்டது. இந்த நோய் மனித உடலின் பல்வேறு பாகங்களையும் பாதிக்கின்றது.



இந்த வகையில் எனாமலில் ஆன பற்களையும் புற்றுநோயின் கோரத் தாக்கம் ஆக்கிரமிக்குமா என சிலர் சிந்திக்கலாம். சாதாரணமாக பற்களில் புற்று நோய் வருவதில்லை. பல்லானதுஎனாமலிலானது என்பதால் பல்லில் புற்றுநோய் வராது.

ஆனால், பற்கள் சொத்தையாகக் காணப்பட்டாலோ, கூராக நீட்டி இருந்தாலோ அவை தாடைத் தசைகளில் பட்டு காயம் ஏற்படும் போதோ அவற்றைக் கவனிக்காது விடும் பட்சத்தில் அது முற்றி புற்று நோயாகலாம். அது போல புகையிலை போன்ற போதை வஸ்துக்களை உபயோகிப்பவர்களுக்கு கால ஓட்டத்தில் பற்கள் கோணல் மாணலாகி, கூர்மையாகி சுற்றியுள்ள தசைகளில் காயத்தை ஏற்படுத்தும் போது, இதுகூட நாளடைவில் புற்றுநோயாக மாற வாய்ப்புண்டு. இவை தவிர பொதுவாக பற்களில் புற்றுநோய் வருவது இல்லை.



"அந்த ஆளு நிஜமாகவே பெரிய ஜோசியர் தான்"

"எப்படி சொல்றீங்க...?"

"என்கிட்டே பணம் இல்லேன்னு ஜோசியத்தில தெரிஞ்சுகிட்டு எனக்கு ஜோசியம் பார்க்க மாட்டேனு சொல்லிட்டாரு."

# தலைமைத்துவப் போட்டியில் தலைவர்கள் தத்தளித்து தவிக்கும் தமிழர்கள்

தனிப்பட்டவர்களின் கோபதாபங்களுக்கும், போட்டி பொறாமைகளுக்கும் மத்தியில் மலையகம் இன்று சிக்கிச்சீரழிகின்றது. இதற்கு ஓர் உதாரணம் நுவரெலியா மாவட்டம்.

இம் மாவட்டத்தில் 51 சதவீதமானவர்கள் தமிழர்கள். ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபைகள் இன்று செயலில் இருந்திருந்தால் அந்த மாவட்ட சபையின் முழு நிர்வாகமும் தமிழர்களின் கையிலேயே இருந்திருக்கும். அப்படியான ஒரு சக்தி இங்கு இருந்தது. இப்போதும் இருக்கின்றது.

ஆனால், இந்த உன்னத சக்தியை சிதைத்து சின்னாபின்னமாக்கி விட்டனர் மலையக தொழிற்சங்கத் தலைவர்களும், அரசியல் வாதிகளும்.

இங்கு இ.தொ.கா.தலைவர் ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தலைவர் எஸ். சதாசிவம், இப்போது இ.தொ.கா.வுடன் ஒட்டிக் கொண்ட புத்திரசிகாமணி, தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் கந்தசாமிநாயுடு என பலர் மலையக மக்களை பங்குபோட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுள் வி. புத்திரசிகாமணியைத் தவிர ஏனைய அனைவரும் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பாசறையில் வளர்ந்தவர்கள். ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

ஆனால், இவர்கள் அனைவரும் இன்று கீரியும் பாம்புமாக மாறி ஆளை ஆள் அழித்துக் கொள்ள முற்பட்டுள்ளனர். ஒருவருக்கு ஒருவர் குழி தோண்டிப் புதைக்க முற்பட்டு விட்டனர். இதனால் இவர்களை நம்பிய மக்கள் செய்வதறியாது திக்குமுக்காடிப் போய் நிற்கின்றனர்.

வழமைக்கு மாறாக இப்போது மலையகத்தில் தேர்தல் காய்ச்சல் கடுமையாக வாட்டுகின்றது. தலைவர்கள் போக்கால் மக்கள் வாடி வதங்கிப் போய் நிற்கின்றனர்.

சரியோ பிழையோ ஆறுமுகம் தொண்டமான் ஆரம்பத்தில் எக் கட்சி வெற்றிபெறுகின்றதோ அக் கட்சியுடன் சேருவேன் என்று கூறினாலும், ஒருபடியாக ஐக்கிய தேசிய முன்னணியுடனேயே இணைந்து போட்டியிடுவோம் என்று தீர்மானித்து விட்டதோடு, தனக்கு வேண்டிய பங்கினைப் பேரம்பேசிப் பெற்றுக் கொண்டார்.

ஆனால், சந்திரசேகரனோ இரண்டும்கெட்டான் நிலையில் தள்ளாடிவிட்டார்.

தமிழ் கூட்டும் இல்லை, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கேட்டதும் கிடைக்கவில்லை.

இறுதி நேரம் வரை எந்த முடிவும் எடுக்க முடியாமல் திக்குமுக்காடிப் போனார்.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு 24 மணி நேர அவகாசம் மட்டுமே இருந்த போது மூடிய அறைக்குள் 18 மணி நேரம் மந்திர ஆலோசனை நடத்தினார். அப்போதும் கூட அவரால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் முதல் கட்சியின் செயலாளரையோ, அல்லது உயர் கவுன்சிலையோ கலந்தாலோசனை செய்யாமல் காலம் கடத்தி வந்தார் என்று கட்சி வட்டாரங்கள் குறை கூறுகின்றன.

இதனால் இதுவரை காலமும் ஒதுக்கப்பட்டிருந்தவர்களை அழைத்து ஒரே நாளில் முடிவுகாண வேண்டும் என துடித்தது சரியான பலனைத் தரவில்லை. இறுதியாக மண்வெட்டி சின்னத்தில் தனித்துப் போட்டியிட தீர்மானித்தனர்.

மேட்டுக்கு ஒன்றும் காட்டுக்கு ஒன்றுமாக இழுத்தடித்தன. எப்படியோ வேட்புமனுத்தாக்கல் செய்ய நான்கு மணி நேரம் மட்டுமே இருந்தபோதுதான் நுவரெலியா மாவட்டத்துக்கும், பதுளை மாவட்டத்துக்குமென வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன என்று கட்சி வட்டாரங்கள் சலித்துக் கொள்கின்றனர்.

இறுதி நேரத்தில் அவசரத்தில் தயாரிக்கப்பட்டதாலேயே பதுளை மாவட்டத்தில் இவர்களுடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டன என்று கட்சி அனுதாபிகள் குறை கூறுகின்றனர்.

இது இப்படி இருக்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொடியைப் பிடித்துக் கொண்டிருந்த எஸ். சதாசிவம் இம்முறை மீன்கொடியுடன் குதித்துவிட்டார்.

மலையக மக்கள் எதைக் செய்வதென தெரியாமல் திண்டாடுகின்றனர்.

தலைவர்களின் தலைமைத்துவப் போட்டியும், அடக்கி ஆளும் திறனும் அதிகார வெறியும் மலையக மக்களை பல்வேறு பிரிவுகளாக்கி விட்டன.

இவர்களுடைய ஏட்டிக்குப் போட்டியான செயல்களினால் அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்கள் துண்டாடப்பட்டு விடலாம். வன்முறை சம்பவங்களுக்கும் தூபம் இடப்படலாம்.

தமிழ் தலைவர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொள்வதால் மூன்றாவது பெரும்பான்மை இனம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படலாம்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் மலையகத்தில் இத் தமிழ்த் தலைவர்கள் தமிழர்களின் பலத்தை சின்னாபின்னமாக்கி விட்டனரே என்பது தான் வேதனை.

இவர்கள் எப்போது திருந்துவார்கள்?



## சொல்லாதே இது இரகசியம்!

டெவன் நீர்வீழ்ச்சிக்கு அருகே கொட்டிக்கிடக்கும் கலை என்ற பெயர் கொண்ட நகரில் இப்போது ஒரு மனிதர் மிடுக்காக நடமாடுகிறாராம்.

இவர் ஆசான்களுக்கு பயிற்சி அளிக்கும் அந்த கலாசாரப் பக்கம் அடிக்கடி விசிட் அடிக்கிறவராம்.

''இவ்வளவு வசதியான கட்டடம் எங்கள் தலைவரால் கட்டப்பட்டது. அதற்கு நீங்கள் எல்லோரும் நன்றி செலுத்த வேண்டும். தேர்தலுக்கு உதவ வேண்டும். இங்கே எங்கள் மத்திய நிலையம் இருக்கு. அடிக்கடி வர வேண்டும். எல்லா வசதிகளும் செய்வோம். தாய்க்குலங்கள் திரும்பிச் சொல்ல முடியாவிட்டால் இங்கேயே தங்கியும் சொல்லலாம். உங்களிடம் காசு பணம் கேட்கவில்லை. சரீர உழைப்புத் தான் கேட்கிறோம்'' என்று கூறி அந்த டிப்டொப் ஆசாமி வாட்டசாட்டமான டீச்சரின் பக்கம் திரும்பினாராம்.

''ஆமாங்க ஐயா நீங்க சொல்லுறதும் சரி தான். செய்நன்றி மறக்க முடியுங்களா? என்ன செய்யிறது? காலில இருப்பதும் புதுச செருப்பா இருக்கு. சூமேக்கர் கிட்ட தைக்க வச்சு இருந்தமே கிழிஞ்ச செருப்பு. அதை எடு, இவரிடம் கொடுப்போம்'' என்றாராம் ஒரு வாய்த்துடுக்கான அந்த டீச்சர்.

அவர் சொல்லி முடிக்குமுன் காரில் ஏறி மாயமாய் மறைந்துவிட்டாராம் டிப்டொப் ஆசாமி. என்ன செய்வது சாமி பேரை சொல்லிப் பூதங்களும் சாப்பிட கிளம்பிவிட்டார்கள் போலும் என்று அங்கலாய்க்கின்றனர் கொட்டாத கலைநகரின் மக்கள். இது எப்படி இருக்கு?



## டேஸ்ட்கடை தணிகாசலம்

இளைஞர்களும் யுவதிகளும் கோயிலில் பூஜை செய்துவிட்டுத் திரும்பினர். அப்போது தணிகாசலம் அண்ணனும் கோயிலுக்கு வந்துவிட்டார். அவரைக் கண்டதும் திலகா கையில் இருந்த பூஜைத் தட்டை தணிகாசலம் அண்ணனிடம் நீட்டி ''பிரசாதம் எடுத்துக் கோங்க அண்ணே'' என்றாள்.

பிரசாதத்தை ஏற்று திருநீற்றை நெற்றியில் பூசிக்கொண்ட பின் ''என்ன எல்லோரும் காலையிலேயே கோயிலுக்குப் போயிட்டு வாரீங்க'' என்றார் தணிகாசலம் அண்ணன்.

''அண்ணே! இப்ப எல்லாப் பக்கங்களும் தேர்தல் சூடு பிடிச்சி இருக்கு. போட்டி போடுறவுங்க எல்லாம் வேட்பு மனுவை தாக்கல் செஞ்சுப்புட்டாங்க.'' என்றான் சிவலிங்கம்.

''இது என்ன சிவா புதுமையா இருக்கு. போட்டி போடுறவங்க தானே தாங்க ஜெயிக்க வேணுமென்று பூஜை வைப்பாங்க. நீங்க எதுக்கு பூஜை வைக்கணும்'' என்று கேட்டார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! அவுங்க ஜெயிக்கணும் என்று பூஜை வைக்கிறாங்க. நாங்க வம்பு தும்பு இல்லாத அமைதியான தேர்தல் நடக்கணும் என்று வேண்டிக்கிட்டு பூஜை வைத்தோம்'' என்றான் இதுவரை அமைதியாக இருந்த நடராசன்.

''அடடே நம்ம நடராசன் கூட அமைதி வேண்டி பூஜை பண்ணிற அளவுக்கு மாறிப்புட்டான். ரொம்ப சந்தோஷம்.'' என்று நடராசன் முதுகில் தட்டிக்கொடுத்தார் தணி அண்ணன்.

''சும்மா சொல்லக்கூடாதுங்க அண்ணே! போன தடவை அந்த மந்திரியோட ஆளுங்க வானில வந்து சாராயப் போத்தல்களை இறக்கிப்போட்டு 'எல்லாத்துக்கும் கொடுங்க. நம்ம மந்திரிக்கு மட்டும் ஓட்டுப்போடுங்க' என்று சொன்னாங்க. அதுக்காக அவுங்களை எல்லாம் அடிச்சி விரட்டி கடைசியில அவங்களை கம்பி எண்ண வைத்ததை மறக்க முடியுமா?'' என்றாள் கோகிலா கிண்டலாக.

''கோகிலா என்னை வம்புக்கு இழுத்து வாங்கிக் கட்டிக்காத. அண்ணே இருக்கார்னு பார்க்கிறேன்.'' என கோகிலாவை செல்லமாகக் கோபித்துக்கொண்டான் நடராசன்.

''என்னப்பா இப்ப தான் வம்பு, தும்பு இல்லாத தேர்தல் நடக்கணும் என்று பூஜை வைச்சிப்புட்டு வாரீங்க. அதுக்குள்ள நீங்களே இப்படி போதிக்கலாமா?'' என்றார் தணி அண்ணன்.

''ஐயய்யோ! அப்படி ஒன்றும் இல்லீங்க அண்ணே, சும்மா தமாசுக்காக கோகிலாவை கிண்டினேன். அவ்வளவு தான்'' என்று பதறித்துடித்துக் கொண்டு சொன்னான் நடராசன்.

''என்ன நடராசு, என் பிள்ளைகளைப்பற்றி எனக்குத் தெரியாதா? நானும் சும்மா தான் சொன்னேன். அதுக்கு இப்படிப் பதறிப்போயிட்டியே'' என ஆறுதல்படுத்திவிட்டு தணி அண்ணனே தொடர்ந்தார்.

''தம்பி கோயில்ல பூஜை வைத்து விட்டால் மட்டும் போதாது. நாம வீடு வீடாப் போயி நம்ப ஆளுங்களுக்கு வெவரமா சொல்லிக் கொடுக்கணும்'' என்றார் தணி அண்ணன்.

''என்னங்க அண்ணே எங்களையும் தேர்தல் பிரசாரம் செய்யச்சொல்லுறீங்களா?'' என்று இடைமறித்தான் சிவலிங்கம்.



''என்ன சிவா நீ கூட அவசரப்படுறியே. இவ்வளவு காலம் நம்பலை எல்லாம் கண்டுக்காத அரசியல்வாதிகள் எல்லாம் வீட்டு வாசலுக்கே தேடி வருவாங்க. சாப்பாடும் சாராயப் போத்தலும் தருவாங்க. போஸ்டர் ஒட்டச் சொல்லுவாங்க. மத்தவுங்க அந்த போஸ்டரை கிழிக்கச் சொல்லுவாங்க. கைச் செலவுக்குக் காசு தருவாங்க. அதோட இன்னொரு விஷயமும் நடக்கும். தோட்டத்தில படிச்ச இளைஞர் யுவதிகளோட பேர் பட்டியல தயாரிப்பாங்க. வந்தவுடன் வேலை தான் என்பாங்க'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே இப்ப நம்ப நற்பணி மன்றத்தில் இருக்கிற ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளோட வெவரம் எல்லாம் கட்டுக்கட்டா எடுத்துக்கிட்டுப் போனாங்க. வெற்றி அடைஞ்சவங்களும், தோற்றுப்போனவங்களும் வெவரம் எடுத்தாங்க. ஆனால் தேர்தல் முடிஞ்ச பொறவு ஒரு நாயையும் காணோம்'' என்றான் நடராசன் சற்று ஆக்கிரோஷமாக.

''அதுவும் ஒரு வழியில நல்லது தானே! அவங்க ஜொப் வாங்கிக் கொடுத்து இருந்தா மாதம் ஒரு அஞ்சு, ஆறு ஆயிரம் ரூபா வாங்கிக்கிட்டு இருப்போம். ஆனால் இப்ப பாரு இப்ப எல்லாரும் ஒற்றுமையா சுய தொழில் மாட்டுப் பண்ணை, விவசாயம், ஆடை தயாரித்தல் என கூட்டா செய்யிறதால மாதம் பத்து பதினைஞ்சு ஆயிரம் கைநிறைய கிடைக்குது. யாருக்கும் தலைகுனிய வேண்டிய அடிமை வேலை இல்ல. அப்படியே அவுங்க வேலைவாங்கிக்கொடுத்து இருந்தாலும் இப்ப வாங்கடா போஸ்டர் ஒட்ட, எலக்ஷன் வேலை செய்ய என்று அதிகாரம் பண்ணுவாங்க இல்லியா?'' என்று நடராசனை அமைதிப்படுத்தினார் தணி அண்ணன்.

''அண்ணன் சொல்லுறதும் சரி தான். அப்படீன்னா வீடு வீடாப் போய் எதை சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சொல்றீங்க?'' என்று துடுக்கெனக் கேட்டாள் கோகிலா.

''கோகிலா தான் சரியான பொயிண்டுக்கு வந்து இருக்கா நான் என்னசொல்ல வந்தேன்னா, போன பொதுத் தேர்தல்ல நுவரெலியா மாவட்டத்தில மட்டும் பதினெட்டு இருபது ஆயிரம் ஓட்டு செல்லுபடி ஆகாம பொயிரிச்சி. நாம கஷ்ரப்பட்டு தியாகம் பல செய்து வாங்கின ஓட்டு. அதை வீணடிக்கக் கூடாது. நாம வீடு வீடாப் போயி ஒரு சிலேட்டுப் பலகையில எப்படி ஓட்டுப் போடுறது? எப்படி அடையாளம் போடுவது? ஒரு சீட்டுல எத்தனை பேருக்கு ஒட்டுப்போட முடியும்? என்பதை எல்லாம் தெளிவா சொல்லிக் கொடுக்கணும். ஒரு முறைக்கு பல தடவை போய் சரியா போடுறாங்களா என்றும் பார்த்து சரிப்படுத்தணும்'' என்றார் தணி அண்ணன்.

''அதோட சாப்பாட்டு பார்சலுக்கும் சாராயப் போத்தலுக்கும் அடிமையாகிவிடாமல், நமக்கொரு நல்லதை செஞ்சாங்களோ, நன்மை கிடைத்ததோ அவுங்க அவுங்க விருப்பப்படி போடுங்க. அவருக்கு போடுங்க. இவருக்கு போடாதீங்க என்று சொல்லக் கூடாது. என்னாங்க அண்ணே'' என்றாள் கோகிலா.

''நம்ப கோகிலாவும் வெவரம் புரிஞ்ச பொண்ணு இல்லையா? வேலை நேரம் போக இதை ஒரு சேவையா செய்யணும்''

''அது மட்டும் இல்லீங்க அண்ணே! நம்ப அப்பாமாரையும், அண்ணன்மாரையும் கவனமாப் பார்த்துக்கணும். இப்ப ஒற்றுமையா இருக்கவுங்களை ரெண்டு படுத்திப் புடுவாங்க இந்த அரசியல்வாதிங்க. மேல் வலிக்கு கொஞ்சம் போட்டுக்குங்க என்று தண்ணியை ஊத்தி, போஸ்டர் கிழிக்கவும், சாணி அடிக்கவும் வச்சிப்புட்டு ஓடிப்போயிடுவாங்க. ஒன்னா இருந்த நாம வெட்டிக்கிட்டும், குத்திக்கிட்டும் ரெண்டுபட்டும் போவோம்''

''இப்படியான ஒரு நிலை வரக்கூடாது. அப்ப தான் அமைதியான தேர்தல் நடக்கும். இல்லாட்டி நீங்க வைத்த பூஜைக்கும் பலன் கிடைக்காது'' என்று கூறிவிட்டு கோயிலுக்குள் சென்றார் தணி அண்ணன்.



# தாய்வானின் துரிதகெதியில் விண் உயர கட்டடங்கள்



தாய்வான் துரிதகெதியில் தனது தாய் நாடான சீனாவை மிஞ்சிவருகிறது. மேல்நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றும் தாய்வான், நாகரீகத்தின் உச்சிக்கே சென்றுவிட முயற்சிக்கிறது. அதனால், விண்ணை முட்டும் கட்டடங்களை நிர்மாணிப்பதில் தாய்வானியர் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். 2007ஆம் ஆண்டுக்குள் தனது இலக்கை அடைந்துவிட தாய்வான் திட்டமிட்டு காரியமாற்றிவருகிறது.


# டிஸ்னியின் மிக்கிமௌஸ் பெற்றிருக்கும் கௌரவம்



அமெரிக்க கார்ட்டூன் கலைஞர் வால்ட் டிஸ்னி உருவாக்கிய 'மிக்கி மௌஸ்' எனும் எலிப்பாத்திரம் உலகப் பிரசித்தி பெற்றது. அந்த 'மிக்கிமௌஸ்' உருவத்தைக் கொண்ட பொம்மை என்றால் அதனுடன் விளையாடுவதற்கு குழந்தைகள் போட்டியிடுவார்கள். டிஸ்னி விற்பனை நிலையத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் மிக்கி மௌஸ் பொம்மைகள் மத்தியில் விரைந்து செல்லும் பொம்மை பெண் விற்பனையாளரைப் படத்தில் காணலாம்.

மசாலா மிக்ஸ்

# பனிக்கட்டியில் உருவான ஆலயத்தின் கம்பீரம்



டோக்கியோவில் இப்து கடுமையான பனிக்காலம். ஆறுகள் குளங்கள் எல்லாம் பனியால் உறைந்து போய்விட்டன. உறைந்துபோய்விட்ட பனிப்பாறைகளை ஒதுக்கிடாது அவற்றைக் குடைந்து கலைவடிவங்களாக்கி விட்டார்கள் ஜப்பியக் கலைஞர்கள். ஸைஷோ நகரில் நடைபெறும் பனிக்கட்டியிலை வடிக்கும் கண்காட்சியில் பனியில் வடித்தெடுக்கப்பட்ட சுவாஷா ஆலயத்தின் கம்பீரத் தோற்றம் இது.

# முதலாவது உலக யுத்தம் ஏற்படுத்திய பாடம்



முதலாவது உலக யுத்தம் ஏற்படுத்திய சேதம் அவ்வளவு மோசமானதல்ல. இரண்டாவது உலக யுத்த அழிவுகளுடன் ஒப்பிடுகையில் அது மிகவும் சாதாரணம் தான். ஆனால், உலகநாடுகள் பலவற்றில் நிகழ்ந்த யுத்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது முதலாவது உலக யுத்தமே. அதனால், அதனை இன்றும் தேசிய விழாவாகக் கொண்டாடுகிறார்கள் பெல்ஜியம் நாட்டவர்கள். அங்குள்ள முதலாவது உலக யுத்த மயானத்தின் அமைதியான தோற்றம் இது.

# 'அலங்கோல' பொம்மை உருவாக்குவதில் ஆர்வம்



கண்ணைக் கவரும் பொம்மைகளை உருவாக்குவதில் தான் பொம்மை உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டுவார்கள். ஆனால், அமெரிக்காவில் அலங்கோல பொம்மைகளை உற்பத்திசெய்யும் நிறுவனங்களும் இருக்கின்றன. இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொம்மைகளைக் காட்சிக்கு வைக்கும் வழக்கமும் அங்கு இருக்கிறது. "அழகுள்ள அலங்கோல பொம்மை கம்பனி" என்னும் பெயருள்ள நிறுவனம் தயாரித்த 'அலல' பொம்மை ஒன்றைப் படத்தில் காணலாம்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



பெப்ரவரி 21, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் இசையமைப்பாளர் தேவா உடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

*1.இ.ஜெயந்தன் இல.2 உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. 2.ர.டினேஸ், சாம்பல் தீவு, திருகோணமலை. 3.மை.புருனோ, அட்டன் வீதி, தலவாக்கலை. 4.ச.திவாகரன், கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி. 5.சினேகா, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் சார் நகைச்சுவை நடிகராக பல காலம் இருந்து இருந்து வருகிறார்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# பித்தன் பதில்கள்

*சுபா ஜெகநாதன் – யாழ்.பல்கலைக்கழகம்.*

கேள்வி:– கடி ஜோக்ஸ் எல்லாம் உங்களுக்கு நன்றாக வருகிறதே! எனக்கொன்று கூறுங்களேன் பித்தா?


பதில்:– மனைவி:– இஞ்சேருமப்பா பிள்ளைக்கு கொடுக்க என்று வச்சிருந்த பாலை ராத்திரி நான் நித்திரையா கிடக்கேக்க பூனை குடிச்சுப்போட்டுது.

கணவன்:– அதுக்குத் தான் நான் அடிக்கடி சொல்லுறனான் பிளவ்ஸுக்கு ஊசி குத்திக்கொண்டு இரவில படுக்கச் சொல்லி.

*பிரதீஸ் – யாழ்ப்பாணம்.*

கேள்வி :– பக்கத்து வீட்டுக் கோழி என் வீட்டுக்கு அடிக்கடி வருகிறதே! என்ன செய்யலாம் பித்தா?

பதில்:– உரித்துச்சாப்பிடலாம்.



*அன்ரன் ஸ்டீபன் – வட்டக்கச்சி.*

கேள்வி :– அன்புள்ளம் கொண்ட பித்தன் அங்கிள்! அறுபது வயதிலும் பெயர் அன்ட் லவ்லி சோப்பும் – கிறீமும் பாவிக்கும் தாத்தாக்களைப் பார்க்கும் போது என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:– ஓடி விளையாடு தாத்தா – நீ ஓய்ந்திருத்தல் ஆகாது தாத்தா – கூடி விளையாடு தாத்தா – ஒரு குழந்தையை வையாதே தாத்தா என்று பாட்டுப்பாடுவோமா என்று நினைப்பேன்.

கள்.

*ந.சஜீவன் – கரம்பொன்.*

பித்தா அன்றைய பெண்ணுக்கும் இன்றைய லேடிக்கும் என்ன வித்தியாசம்?

பதில்:– அன்றைய பெண் கணவன் தூங்கிய பின் தூங்கி முன் எழுவாள். இன்றைய லேடி கணவன் தூங்கு முன் தூங்கி பின்



எழுவாள்.

அன்றைய பெண் அழகாக சேலை கட்டி அங்கங்களை மறைத்துக்கொண்டு திரிவாள்.

இன்றைய லேடி அரை யார் துணியால் சட்டை போட்டு அதையும் ஆங்காங்கே கிழித்துக் கொண்டு திரிவாள்.

அன்றைய பெண்ணுக்கு சமையலறையே கதி – இன்றைய லேடிக்கு தொலைக்காட்சிப் பெட்டியே கதி.

அன்றைய பெண் கணவனை மதித்து நடப்பாள். இன்றைய லேடி கணவனை ஏறி மிதிப்பாள்.

*செ.தர்ஷினி – வைரவப்புளியங்குளம்.*

கேள்வி:– ஐயா! எமது தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுசெய்யும் செயல்களால் தமிழர்களின் மரியாதை நாறுவதாக அங்கிருந்து வரும் சிலர் சலித்துக் கொள்கிறார்களே உண்மையா?

பதில்:– இவர்கள் செய்யும் செயல்களால் தமிழர்களின் மரியாதை நாறுகிறது சரி. ஆனால் இவர்கள் விட்டுவிட்டு வந்துவிட்டால் கிளீனிங் வேலைக்கு ஆள் இல்லாமல் அந்த நாடுகளே நாறுமே... பரவாயில்லையா?

*வி.விஜிதா – கற்சிலைமடு.*

கேள்வி:– அன்புக்குரிய பித்தா! மக்களின் ஆணையை பெற்றுக்கொண்டு மக்களையே ஏறி மிதிக்கும் தலைவர்களைப் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:– ஏப்ரல் 3ஆம், 4 ஆம் திகதிகளில்

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை மார்ச் 07 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

*வி.அஜந்தினி – மட்டக்களப்பு*

கேள்வி: நாகரீக ஆடை அணிவதால் சமூகத்தில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களா? ஆண்களா?



பதில்: நாகரீக ஆடைகளை பெண்கள் அணிவதால் ஆண்களின் மனங்களுக்குத்தான் பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு– 14.

*சிந்து – பருத்தித்துறை.*

கேள்வி:– வேலை தேடும்போது பட்டதாரிகளுக்கான கேள்வி ரூபா போலவும் – திருமண வியாபாரத்தில் அதற்கான கேள்வி டொலர் போலவும் இருக்கிறதே ஏன் பித்தா?

பதில் :– கஷ்டப்பட்டு ரூபாவுக்கு வாங்கிய வேலையை – விற்கும்போது டொலர் கணக்கில் விற்றால் தானே லாபம் கிடைக்கும் சிந்து...

*வே. சாந்தி – தம்புராய், பூநகரி.*

கேள்வி:– காதல் திருமணமா ? பேசிச் செய்யும் திருமணமா நல்லது பித்தா?

பதில்:– பேசிய பின் – கொஞ்ச நாள் காதலித்து இருவருடைய மனப் பொருத்தத்தையும் பார்த்து பின் செய்யும் திருமணமே நல்லது.

*வெ.வரோதயன் – வெல்லம்பிட்டிய.*

கேள்வி:– ஒரு நாளைக்கு ஒரு அப்பிளும் – ஒரு உள்ளித் துண்டும் சாப்பிட்டு வந்தால் டாக்டரை தேடிப் போக வேண்டிய தேவையே இல்லையாமே! உண்மையா பித்தா?

பதில்:– ஆம். ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் சாப்பிட்டால் டாக்டரைத் தேடிப் போக வேண்டியதில்லை. ஒரு உள்ளி சாப்பிட்டால் உங்களைத் தேடி யாரும் வர மாட்டார்

தெரிந்துவிடும்.

*தனுஷ் – ஆனைக்கோட்டை.*

கேள்வி:– பித்தா! ஒரு தொழிலும் இல்லாமல் வீட்டிலே இருக்கும் பலர் கையிலே செல்



போனுடன் திரிகிறார்களே – செல்போனுக்கு காசு கட்ட என்ன செய்வார்கள்?

பதில்:– அப்படியானவர்களை பார்க்கும் போது, எனக்கு கீழே உள்ள கதை தான் நினைவுக்கு வரும். ஒருவர் புதிதாக

பிண்ணாக்கு வியாபாரம் செய்யும் கடை ஒன்றை ஆரம்பித்தார். அவரைத் தேடி ஒருவர் வந்திருந்தார். வந்தவரை பார்த்தால் பெரிய மாட்டுப் பண்ணையே அவரிடம் சொந்தமாக இருக்கும் போல் தெரிந்தது பிண்ணாக்கு வியாபாரிக்கு. உடனே தானும் எப்பொழுதும் சுறுசுறுப்பான வியாபாரி என்று அவருக்கு காட்ட வேண்டும் என்று விரும்பினான். அங்கேயிருந்த ரெலிபோனை எடுத்து காதிலே வைத்துக் கொண்டு "நான் பிண்ணாக்குக் கடையில இருந்து பேசுகிறேன். உங்களுக்கு ஏற்கனவே நூறு மூட்டை பிண்ணாக்கு அனுப்பி வைத்துவிட்டேன். வந்து சேர்ந்ததா? இன்னும் நூறு மூட்டை வேண்டுமா? ஐய்யோ கையிருப்பு கைவசம் இல்லையே? தற்போது ஒரு வாடிக்கையாளர் வந்திருக்கிறார். அவருடன் பேசிவிட்டு அடுத்த கட்டமாக எப்படியாவது உங்களுக்கு நூறு மூட்டைகளை அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு போனை வைத்தார். பின்னர் வந்திருந்தவரைப் பார்த்து ஐயா களஞ்சியத்திலே பிண்ணாக்கு முடிந்துவிட்டது. உங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்று சொன்னால் உடனடியாக தொலைபேசி மூலம் ஓடர் கொடுத்து எடுத்துத் தர முடியும் என்றார்.

வந்தவர் சொன்னார். ஐயா நான் தொலைத்தொடர்பு திணைக்களத்தில் இருந்து வருகிறேன். நேற்றைய தினம் இந்தத் தொலைபேசியை இங்கே பொருத்திவிட்டுப் போனோம். ஆனால் இணைப்புக் கொடுக்கவில்லை. அது தான் இனிமேல் இணைப்பை கொடுப்பதற்காக வந்திருக்கிறேன் என்றார்.



*து.திவ்யா – அலம்பல்.*

கேள்வி:– பித்தா நான் ஒருவரை காதலிக்கிறேன். அவர் என்னை கைவிடாமல் இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்:– இரண்டு கைகளிலும் பத்து – பத்து பவுனில் காப்பு போட்டுக்கொள்ள வேண்டும்.

*க.சாந்தி, வள்ளிபுனம்.*

கேள்வி: பித்தா! தன்னை விட இந்த உலகில் யாரும் இல்லை என்று தலைக்கனம் பிடித்த பெண்களுக்கு, ஒரு உதாரணம் கூறுங்களேன்!

பதில்: சாந்தி! தாங்கள் அவ்வாறு இல்லையா என் ஊர்ஜிதமானால் பின்னர் மற்றையதை யோசிக்கலாம். இதற்கு உதாரணமாக எமது நாட்டின் ஜனாதிபதியை எடுத்துக்கொள்ளுங்களேன்.

*ஐங்கரன் – வெள்ளாங்குளம்.*

கேள்வி:– பித்தா! தனுஷின் புதுக்கோட்டையிலிருந்து சரவணன் படம் பார்த்தீரா? எப்படிப் படம்?

பதில்:– பாதிக்குப் படமும் – மீதிக்கு தியேட்டரில் கதிரையிலிருந்த மூட்டைப்பூச்சியும் கடித்து எடுத்துவிட்டது. அது படம் அல்ல பப்படம். தனுஷிற்கு கஷ்ட காலம் தொடங்கிவிட்டது போலும்.

செ. நிலுக்ஷி – கொட்டாஞ்சேனை.

கேள்வி:– பித்தா! எனக்கு தலையிலே சரியான பேன். ஒரு ஆயுள் வேத டாக்டரிடம் காட்டினேன். அவர் ஒரு எண்ணெய் தந்தார். அந்த எண்ணெயை தலையிலே தடவினால் பேன் எல்லாம் செத்துப்போய் விடும் என்று சொன்னார். ஆனால் அது போலி எண்ணெய். பேன் எதுவுமே சாகவில்லை. என்னை ஏமாற்றிய அந்த டாக்டரை என்ன செய்யலாம்?

பதில்:– நிலுக்ஷி எதற்கும் மறுபடி அந்த டாக்டரை சந்தித்து அந்த எண்ணெயை எப்படிப் பூசுவது என்று விலாவாரியாக விசாரியும். அவர் எண்ணெயை தலையில தடவச் சொன்னாரே அது உமது தலையிலா அல்லது பேனைப்பிடித்து அதன் தலையிலா?

*கை.மயூரன் – வத்தளை.*

பித்தா! ஆபாசம் – கவர்ச்சி இவை இரண்டுக்கும் இடையில் என்ன வித்தியாசம்?

பதில்:– எல்லா அங்கங்களையும் வெளியே காட்டினால் அது ஆபாசம்.

காட்டியும் காட்டாமல் இருப்பது கவர்ச்சி.

*சி.குமரன், கோண்டாவில்.*

கேள்வி: பித்தா! சாதனையாளர்கள் ஆண்களா? பெண்களா?

பதில்: எமது நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் சாதிப்பதில் இருந்து உங்களுக்குத் தெரியவில்லையா சாதனையாளர் யார் என்று. (சக்தி இல்லையேல் சிவம் இல்லை)

*க.சுசீலாதேசி, அச்சுவேலி.*

கேள்வி: அன்பின் டியர் பித்தா! நமது நாட்டில் சண்டையா? சமாதானமா? நிலையாக இருக்கும்?

பதில்: என்னை வம்பில் மாட்டிவிடப் பார்க்கிறீர்கள் போல இருக்கிறதே.

*தமிழ்ஒளி, கல்[illegible]டி.*

கேள்வி: ஆண்கள் பெரிய வீடு வைத்துக் கொண்டு ஏன் சின்ன வீடு பார்க்கிறார்கள்?

**பித்தனின் கேள்வி**

**கேள்வி:– இம்முறை தேர்தலில் ஆட்சி அமைக்கப் போகிறவர்கள் யார்?**

**வாசகர் பதில்கள்**

*க.நிமலன் – இணுவில்.*

பிரதமரின் ஐ.தே.க வோ அல்லது ஜனாதிபதியின் கூட்டமைப்போ நிச்சயம் தனித்து ஆட்சி அமைக்க முடியாது.

*க.துஷ்யந்தி – சங்கானை.*

யார் வென்றாலும் தமிழனின் தலைவிதி மாற்றமடையப் போவதில்லை. எனவே நாம் ஆக வேண்டியதைப் பார்க்க வேண்டியதுதான்.

*எம்.சுரேன் – வவுனியா.*

சிறுபான்மை கட்சிகளிடம் கையேந்தாமல் எந்தக் கட்சியும் நிச்சயம் ஆட்சி அமைக்கப் போவதில்லை.

*த.தமிழ்ராணி – ஹட்டன்.*

ஏப்ரல் 3 ஆம் திகதி அதிகாலை தெரியவரும் தானே! அதற்கு ஏன் இந்த விவாதம். எப்படி இருந்தாலும் இரண்டு கட்சிகளில் ஒன்றுதான் ஆட்சி அமைக்கப் போகின்றது.

*சி.வரதன் – மன்னார்.*

நாம் என்ன நினைத்தாலும் அது நடைபெறப் போவதில்லை. யார் அதிக அளவில் கள்ள வோட்டுக்களைப் போடுகின்றார்களோ அவர்களே நிச்சயம் ஆட்சி அமைப்பார்கள்.

பதில்: பெரிய வீடு பராமரிப்பது கடினம். சின்னவீடு பாதுகாப்பானதும், பராமரிப்பது சுலபமானதும்.

*மு. சர்மிலா – வேப்பங்குளம்.*

கேள்வி: – பித்தா! அலுவலகங்களில் மேலதிகாரிகள் சிலர் தங்களுக்கு கீழே வேலை செய்யும் பெண்கள் மீது தொட்டுப்பேசி – சிலுமிஷங்கள் செய்கிறார்களே... இவர்களுக்கு எவ்வாறு பதிலடி கொடுக்கலாம்?

பதில்: – அம்மணி உங்கள் தோற்றத்திலிருந்து தான் மற்றவர்கள் உங்களை மதிப்பதும் – மிதிப்பதும் – கும்பிடுவதும் –



சாப்பிடுவதும். அடக்கமாக – ஒடுக்கமாக அலுவலகம் சென்றால் அனைவரும் உங்களை மதிப்பார்கள். அதனை விட்டு அங்கே இங்கே கிழித்துவிட்டு – அங்கங்களின் பரிமாணங்களை வெளியே தெரியக்கூடியதாக ஆடைகளை அணிந்துகொண்டு அலுவலகங்களுக்குச் சென்றால் அது தவிர்க்க முடியாதது தானே?

*சி.குயிலினி – மட்டுவில்.*

கேள்வி: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவள் என்னை ஏமாற்றிவிட்டு வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவரை திருமணம் செய்துவிட்டாள் என்ன செய்யலாம்?

பதில்: தாடி வைக்காமல் அவளுக்கு தங்கை இருக்கா என்று முதலில் கேட்டறியும்.

# கறுப்பு ரோஜா

அதிகாலையில் சீக்கிரமாகவே எழுந்து வீட்டு வேலைகள் அனைத்தையும் ஒருவித பரபரப்புடன் கவனிக்கத் தொடங்கியிருந்தாள் கமலாம்பாள். காரணம், அவளது ஒரே மகள் விந்தியாவை இன்று பெண் பார்க்க வரப்போகிறார்கள் என்ற செய்தி தான். விந்தியாவுக்கோ தாயை நினைத்துப் பார்க்கையில் ஒருவித கவலை தான் தோன்றியது. விந்தியா தன்னை பெண் பார்க்க ஆட்கள் வருவது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. விந்தியாவை இரு தடவைகள் பெண் பார்க்க வந்தவர்கள் ''பெண் கறுப்பாக இருக்கிறாள்''என்று காரணம் சொல்லி கல்யாணப் பேச்சையே முடித்து விட்டுப்போயிருந்தார்கள். இது மூன்றாவது தடவை.

இம் முறை மட்டும் என்ன? என் கறுப்பு நிறம் கண்ணுக்கு உறுத்தாமலா இருக்கப் போகிறது? என்று அவளது உள் மனம் எண்ணியது. அவள் எண்ணம் சரி என்பது போலவே இந்தத் தடவையும் மாப்பிள்ளை வீட்டார் நம்ம பையனுடைய படிப்புக்கும் அழகுக்கும் இந்த இடம் சரிப்பட்டு வராது. பெண் நிறமாக இருந்தாலும் பரவாயில்லை. கறுப்பாக இல்ல இருக்கிறாள்' என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார்கள். விந்தியா எதிர்பார்த்தது தான். ஆனால் தாய் கமலாம்மாள் தான் நொருங்கிப்போனாள்.

''கேட்டீங்களா அம்மா? இதுக்குத் தான் நான் முதலிலேயே வேண்டாம் என்று சொன்னனான். பிளீஸ் அம்மா. இனிமேல் இந்தக் கல்யாணப் பேச்சையே எடுக்காதீங்க. எல்லோரும் வெளி அழகை மட்டும் விரும்புறவங்க தான். மனசை யார் பார்க்கிறாங்க. சே...! என்ன மனிதர்கள் இவர்கள்....'' வெறுத்துக்கொண்டாள் விந்தியா.

''என் மகளுக்கென்று ஒருத்தன் பிறக்காமலா இருந்திருப்பான்?'' மனதை தேற்றிக்கொண்டாள் கமலாம்மாள்.

விந்தியா கறுப்புத் தான். ஆனால் நல்ல அழகி. துறுதுறுவென்ற அவளது கருவிழிகளும் எந்த நேரமும் புன்னகை சிந்திய முகமும் அவளது வசீகரத்துக்கு போதுமானவையே. விந்தியாவுக்கு இரண்டு அண்ணன்மார்கள். இருவரும் வேலை தேடி வெளிநாட்டுக்குச் சென்று அங்கேயே உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிறு வயது முதலேயே தந்தையை இழந்த விந்தியா தாயுடனேயே தனது சொந்தக் கிராமத்தில் வசித்து வருகிறாள். இரண்டு அண்ணன்மாரின் உழைப்பே அவளது குடும்பத்துக்கு கூடுதல் வருமானத்தைத் தந்தது. இருந்தாலும் அவளுக்கு வீட்டில் சும்மா இருந்துகொண்டு பொழுது போக்க விருப்பமில்லை. எனவே தான் படித்த படிப்புக்கேற்ப தனியார் கம்பனி ஒன்றில் கணக்காளராக வேலைக்குச் சேர்ந்தாள். தான் தேடிக் கொண்ட வேலை மூலம் திருப்தியான சம்பளம் கிடைத்ததுடன் கூடவே பொழுதும் மிகவும் சந்தோஷமாகவே கழிந்தது. அந்த மட்டில் விந்தியாவுக்குத் திருப்தியே.

இவ்வாறு நாட்கள் நகர்ந்தன. இப்பொழுது கமலாம்மாள் விந்தியாவின் திருமணப் பேச்சையே எடுப்பதில்லை. ''இப்பொழுது தான் கொஞ்சம் சந்தோஷமாக திரிகிறாள், அந்தப் பேச்சை எடுத்து ஏன் வீணாக மகள் மனதை புண்படுத்துவான் என்று அதை தவிர்த்துக்கொண்டாள்.

விந்தியாவின் கலகலவென்ற பேச்சும், எல்லோரையும் மிகவும் சகஜமாய்ப் பழகும் அவளது சுபாவமும் அவளது கம்பனியில் அவளுக்கென்று ஒரு தனியான நற்பெயரை உருவாக்கிக் கொடுத்தன.

இந்த நிலையில் தான் அந்தக் கம்பனியின் விற்பனைப்பிரிவின் புதிய முகாமையாளராக வந்து சேர்ந்தான் பிரதீஸ். பிரதீஸின் கம்பீரமான தோற்றம், உயரம் பார்ப்போரை மீண்டும் ஒரு முறை பார்க்கத் தூண்டும்.


அன்று வேலைக்குச் சென்ற விந்தியா புதிய மனேஜரைக் கண்டதும் '' இவனா...? என்று முணுமுணுத்தாள். முன்னய நாள் நிகழ்வு அவளது கண் முன் நிழலாடியது.

விந்தியா ஞாயிற்றுக்கிழமை விடுமுறைகளில் கிராமத்தின் வயல்வெளிகளை சுற்றிப் பார்ப்பது வழமை. தோழிகளோடு சேர்ந்து அரட்டை அடித்துக்கொண்டு வயல் வரம்பு ஓரங்களில் காலாற நடந்து இயற்கை அழகை ரசிப்பதில் அவளுக்கு தனிப்பிரியம். அன்று ஞாயிற்றுக்கிழமையும் வழமை போலவே வீட்டில் இருக்கப் பிடிக்காமல் கிளம்பிவிட்டாள். ஆனால் ஏற்கனவே அவளது தோழிகள் சினிமா பார்க்கச் சென்றுவிட்டனர். எனவே தனியாக வயலை சுற்றிப்பார்க்க புறப்பட்டுச் சென்றாள்.

பச்சைப்பசேலென்ற வயல்வெளிக் காட்சிகளிலும், பரந்து விரிந்த வெண்மேகக் கூட்டங்களிலும் அவள் மனம் லயித்து நின்றாள். ''ஆ...! என்ன அழகு ''என்ற குரல் கேட்கவே திடுமெனத் திரும்பிப் பார்த்தாள்.

எதிர்முனையில் கம்பீரமான தோற்றத்துடன் புதியவன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். '' இயற்கை அன்னையின் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு மாதிரியானவை. மிகவும் அற்புதம். சுத்தமான இயற்கைக் காற்றும் அமைதியான இந்த சூழலு மனதுக்கு மிகவும் உற்சாகத்தைத் தருகின்றன. ரம்மியமான இந்த சூழலும் எனக்கும் பிடிக்கும். நீங்களும் அதே போல் தான் தெரிகிறது.'' பேசியவன் அந்த புதிய முகத்துக்குரியவன்.

விந்தியாவின் இதயம் வேகமாகத் துடித்தது. அவளுள் இனம்புரியாத உணர்வு. அது பயமா?




ஆத்திரமா? வெட்கமா? காதலா? எதுவுமே புரியவில்லை அவளுக்கு.

''ஓ என்னை யாரென்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால நானே சொல்கிறேன். என்னுடைய பெயர் பிரதீஸ். இவ்வளவு நாளும் வெளியூரில் தங்கி நின்று படித்துவிட்டு இன்றைக்குத் தான் என்னுடைய பாட்டி வீட்டுக்கு வந்திருக்கேன். அங்கே எல்லாமே இயந்திர மயம். இங்கே என்றால் எங்கும் இயற்கை மணம் கொஞ்சிக் குலவுகிறது. அது தான் வீட்டில் இருக்காமல் அந்த வயல்காட்சிகளைப் பார்த்து ரசிக்கலாம் என்று புறப்பட்டு வந்தேன். வந்த இடத்தில் கறுப்பு ரோஜா ஒன்றைச் சந்திக்க நேர்ந்தது. என் அதிஷ்டம்'' என்று சொல்லி புன்முறுவல் செய்தான்.

தன்னை அறிமுகம் செய்துவிட்டு எங்கோ முடித்தான் அந்தப் புதியவன். இன்னும் அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தால் ஏதேதோ அலட்டுவான் என்று எண்ணியவாறே அவள் விரைந்து சென்றாள் அவ்விடத்தை விட்டு.

இன்று அவனையே புதிய முகாமையாளராக் காணவும் கொஞ்சம் பயந்து தான் போனாள் விந்தியா. ஆனாலும் தனக்கென்ன? என்பது போல அவள் தன் வேலையில் மீண்டும் மூழ்கிப் போனாள். அவனும் வேலை நேரங்களில் அவளைக் கண்டு கொள்வதே இல்லை.

ஆனால் கொஞ்ச நாட்களாக பிரதீஸ் நடந்துகொண்ட விதம் அவளுக்குப்பிடிக்கவில்லை. விந்தியாவின் வீடடுக்கும் வேலை செய்யும் இடத்துக்கும் கொஞ்சத் தூரமே. ஆகையால் அவள் எப்பொழுதும் பொடிநடையாகவே வேலைக்குச் சென்று வருவாள். அவள் பேசுவதற்கு இடம் கொடாமலே அவள் பின்னால் பேசிக் கொண்டு அவன் வருவான்.

வழமை போலவே அன்றும் தொடர்ந்து வந்தவன், அவள் வந்த வழிக்குக் குறுக்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தினான். என்ன? என்பது போல முறைத்தாள் விந்தியா. ''பிளீஸ் விந்தியா உங்களோடு கொஞ்சம் பேச வேணும்'' என்றான் பிரதீஸ். '' எதுவாக இருந்தாலும் சீக்கிரமாகச் சொல்லுங்கள். இருட்டுவதற்கு முன்பாகநான் வீடு செல்ல வேண்டும்.''

''விந்தியா எனக்கு எதையுமே மறைக்கத் தெரியாது. எதுவாக இருந்தாலும் வெளிப்படையாகப் பேசுவது தான் என்னுடைய இயல்பு. நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்.'' அவன் முடிக்கு முன்பே விந்தியா அதிர்ந்தாள்.

''திருமணமா...? நீங்களா..? என்னை? '' அவள் குரலில் விரக்தி.

''ஏன் விந்தியா என்னைப்பிடிக்கவில்லையா?''

''பிடிக்கவில்லையா? உங்களைப் பார்த்தால் யார் தான் அப்படிச்சொல்வார்கள்?'' மனதுக்குள் சொல்லிக்கொண்டாள் விந்தியா.

''என்ன ? ஏன் மௌனமாகிட்டீங்க?''

''இல்லை பிரதீஸ்! எப்பவுமே விரலுக் கேற்றபடிதானே வீக்கம். உங்க படிப்புக்கும் அழகுக்கும் ஏற்ற மாதிரி எத்தனையோ பெண்கள் கிடைப்பார்கள். நான் எம் மாத்திரம்? ''சொல்லும்போதே மனது பாறையாக கனத்தது விந்தியாவுக்கு.

''வருவாங்க தான். ஆனால் என் மனதுக்கு பிடித்தவள் நீ மட்டும் தானே!''

''இன்னுமா என் கறுப்பு நிறம் உங்க கண்ணுக்கு தெரியலை?''

''இல்லை விந்தியா. நீ நினைக்கிறது தப்பு. கறுப்புத் தான் அழகு. ஏன் நான் படித்த இடம், வேலை பார்த்த இடம், அங்கெல்லாம் பெண்கள் இல்லையா? அவர்களுடன் பழகும்போது எனக்கு இப்படி ஓர் உணர்வு வரவே இல்லை. உன்னை முதன் முதலாக வயல் வரம்பு ஓரத்தில் பார்த்தவுடனேயே 'இவள் தான் உன் இதய தேவதை' என்று என் உள் மனம் சொல்லியது. அப்பவே முடிவு செய்துவிட்டேன். எனக்கு மனைவி என்று ஒருத்தி வந்தால் அது நீயாகத் தான் இருக்க வேண்டும் என்று தனது முடிவை அவன் சொல்லிவிட்டான். நீங்க இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். நாளைக்கு இதே இடத்தில் இந்த நேரம் காத்திருப்பேன். உங்க நல்ல முடிவுக்காக.''

கூறி முடித்தவன் பதிலுக்குக் காத்திராமல் சென்றுவிட்டான். வீடு சென்று விந்தியாவுக்கு ஒரே குழப்பம். அவளுள் எத்தனையோ கேள்விகள். அத்தனைக்கும் விடை கண்டவளாக தாயிடம் சென்று அனைத்தையும் கூறி தனது முடிவையும் சொன்னாள்.

கமலாம்மாளுக்கு மிகவும் சந்தோசம். இப்பவாவது என் மகளுக்கு நல்ல வழியை காட்டிட்டியே தாயே'' என்று மானசீகமாக தன் குல தெய்வத்துக்கு நன்றி சொன்னாள்.

அடுத்த நாள் பொழுது விந்தியாவுக்கு மிகவும் சந்தோஷமாகவே புலர்ந்தது. அன்று மாலை மிகவும் குதூகலத்துடனேயே பிரதீஸை எதிர்கொண்டாள். '' என்ன அம்மணி என்ன முடிவு செய்தீங்க?'' கேட்டான் பிரதீஸ்.

''அம்மா உங்களை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் சொல்லிட்டாங்க''

''போச்சுடா... அம்மா மட்டும்தானா? அப்ப உங்களுக்கு சம்மதமில்லை. அப்படித் தானே? ''

''இ...இல்ல...அது...அது வந்து நானும் உங்களை விரும்புகின்றேன். ஆனால் நீங்க என்னை காதலிப்பீர்களா என்று தான் தயங்கினேன் . ஏன் என்றால் என்னுடைய நிறம் தான் காரணம். ஒவ்வொரு தடவையும் என்னை பெண் பார்க்க வருகிறவர்கள் என்னை கறுப்பு என்று சொல்லிவிட்டு போய்விடுகிறர்கள். அப்படி இருக்க நீங்க அழகானவர். நல்ல வேலை எப்படி என்னை காதலிப்பீங்க. அதனால் தான்....''என்று இழுத்தாள். இதைக் கேட்ட பிரதீஸ் வாய்விட்டுச் சிரித்தான். புரியாத தன்மையுடன் அவனை பார்த்தாள் விந்தியா.

''விந்தியா நாங்கள் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்க நிறம் தான் முக்கியமா? இல்ல பணம், அந்தஸ்து, படிப்பு தான் முக்கியமா? இரண்டு பேரோட ஒத்த மனசு தான் முக்கியம். அழகு நிலை இல்லாதது. ஆனால் நாங்கள் இரண்டு பேரும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கின்ற அன்பு,பாசம்,காதல் என்றுமே அழியாதவை. '' பேசிக் கொண்டே போனான் பிரதீஸ்.

ஆனால் விந்தியாவின் கண்களில் கண்ணீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன. ''ஏய்? ஏன் அழுகிறாய்?'' சிறு அதட்டலுடன் கேட்டான் பிரதீஸ்.

''இல்லை பிரதீஸ் ஒவ்வொரு தடவையும் என்னை பெண் பார்க்க வருகிறவர்கள் என்னை கறுப்பு என்று சொல்லிவிட்டு அவர்கள் பாட்டில் போய்விடுவார்கள். ஆனால் நானும் அம்மாவும் எவ்வளவு வருத்தப்படுவோம் தெரியுமா? அந்த நேரம் வாழ்கையே வெறுத்துபோகும். ஆனால்....நீங்கள்.... உங்களைக் கணவனாக அடைய நான் கொடுத்து வைத்திருக்க வேணும்.'' விந்தியாவுக்கு இதற்கு மேல் வார்த்தைகள் வர மறுத்தன.

நன்றியோடு அவனை நோக்கினாள் விந்தியா. ''உண்மையில் நன்றி சொல்ல வேணும். ஏன் தெரியுமா? அவர்கள் அன்று மறுத்துவிட்டால் இந்த கறுப்பு ரோஜா இன்று எனக்கு சொந்தமாகி இருக்காதே'' என்று அவளது கன்னத்தை தட்டி முறுவலித்தான் பிரதீஸ். இவளும் பதிலுக்குப் புன்னகை செய்தாள்.

(யாவும் கற்பனை)



சத்திய ராஜ்

# முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் விஜய்

'திருமலை' வெற்றியை தொடர்ந்து 'கில்லி' படத்தில் நடித்து வரும் விஜய் அடுத்து நடிக்கும் படம் 'மதுர'. இந்தப்படத்தில் இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் நடிக்கிறார் விஜய். முதல் முதலாக தன் தோற்றத்திலும், ஒப்பனையிலும் பல புதுமைகளை செய்யவிருக்கிறார் அவர்.

இதுவரை விஜய் நடித்த படங்களிலேயே அதிக பொருட் செலவில் பிரமாண்டமாக உருவாகும் இப்படத்தை ஆர்.மாதேஷ் தயாரித்து இயக்குகிறார். இவர் 'ஜென்டில்மேன்' 'காதலன்', 'இந்தியன்' 'ஜீன்ஸ்' ஆகிய படங்களுக்கு இணை இயக்குநராகப் பணியாற்றியவர். மிகப் பிரமாண்டமாக அதே சமயம் இந்திய அளவில் இந்தப்படம் பேசப்படும் அளவிற்கு, கிராஃபிக்ஸ், ஸ்பெஷல் எஃபெக்டஸ் என உயர் தொழிநுட்பத்திலும், காட்சியமைப்பிலும் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராமல் உழைத்து வருகிறார்.

விஜய்க்கு ஜோடியாக இன்றைய இளைஞர்களின் கனவு நாயகி சோனியா அகர்வால், 'தம்' படக் கதாநாயகி ரக்ஷிதா நடிக்க இவர்களுடன் தேஜாஸ்ரீ, வடிவேலு, சீதா, ராஜ்கபூர், இளவரசு, மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

இதற்காகப் பிரமாண்டமான முறையில், சுமார் 2கோடி ரூபா செலவில், சென்னையில் பரபரப்புமிகுந்த பகுதியில் 5ஏக்கர் பரப்பளவில் மார்கெட் நகரம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த மார்க்கெட் நகரத்தை நிர்மாணிக்க 200 பேர் ஒரு மாத காலாமாகப் பணியற்றியுள்ளார்கள். 'சாக்லெட்' என்ற மாபெரும் வெற்றிப் படத்தை தயாரித்த ஆர்.மாதேஷின் மூவி மஜிக் நிறுவனம் இதைத் தயாரிக்கின்றது.



பிரபு

# 'ஆட்டோக்கிராப்'பை சுட்டுவிட்டார்களாம்

மிகுந்த எதிர்பார்ப்பை உண்டாக்கி இருக்கும் படம் 'ஆட்டோக்கிராப்'. இந்நிலையில் பேரெழில் குமரன் என்பவர் தன் நாவலின் கதையைக் சுட்டுவிட்டார்கள் என்று போர்க் கொடி தூக்கி இருக்கிறார். இது பற்றி ஆட்டோக்கிராப் குழுவினரிடம் கேட்டபோது, ''அந்த நாவலை அவர் வெளியிட்டதே போன மாதம்தான். நாங்கள் கடந்த வருடம் பெப்ரவரியிலேயே படத்தை ஆரம்பிச்சுட்டோம்'' என்கிறார்கள். இப்படி எல்லாப் படங்களுக்குமே பிரச்சினை செய்வதற்கென்று ஒரு கோஷ்டி அலைகிறது. இதைச் சட்ட ரீதியாக எதிர் கொள்ள ஒரு வழக்கறிஞர் குழுவை தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் சங்கங்கள் உருவாக்க போகிறனவாம்.



ரம்யாகிருஷ்ணன்

# கொந குத்தாட்டம்

மன்மதராசா பாடல் வெற்றி பெற்றதில் இருந்து ரசிகர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும் மன்மதராணியாக தெரிகிறார் சாயாசிங். சூப்பர் ஹீரோ விக்ரம் – டைரக்டர் ஹரி கூட்டணியில் உருவாகும் படத்திற்கே இந்த சாயாசிங் தேவைப் படுகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆம்! விக்ரம், ஹரி இணையும் 'அருள்' படத்தில் நடிக்கிறார் சாயாசிங். அப்போ ஜோதிகா? அட! ஜோ, விக்ரமுக்கு ஜோடி. சாயாசிங் மன்மதராசா மாதிரியான ஒரே ஒரு பாட்டுக்கு குத்தாட்டம் போடுகிறார். இப்படி ஒரு பாட்டுக்கு ஆட்டம் போட்டா அப்புறம் அதே போன்று ஒரே மாதிரி வாய்ப்புதானே கிடைக்கும்? தான் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும் மன்மதராசடைப் குத்தாட்டம் வைக்கச் சொல்லி கண்டிஷன் போடுகிறாராம் சாயாசிங். அப்படி வைக்கலேன்னா தன் ரசிகர்கள் அந்தப்படத்துக்கு எதிராகக் கோஷம் போட்டு குத்தாட்டம் ஆடிப் புடுவார் என்று எச்சரிக்கை பல்பும் எரியவிடுகிறார். இதனால் சாயா நடிக்கும் 'கவிதை' படத்தில் திடீரென ஒரு பாட்டை சேர்த்துள்ளனர்–மன்மத ராசா டைப்பில் !அதுவும் எப்படி?

''காத்தவராயா...க்ாத்தவராய

என்னைக் கட்டிக் கொள்ளேன்டா...'' என்று போகிறது அந்தப் பாட்டு.



ராதிகாசௌத்ரி

நடிகர் தியாகராஜனின் சொந்தப் பட நிறுவனமான லக்ஷ்மி சாந்தி மூவிஸ் ஏற்கனவே ''கொம்பேறி மூக்கன்', 'சேலம்', 'விஷ்ணு', 'பூவுக்குள் பூகம்பம்', மற்றும் பல பிரமாண்டமான வெள்ளிவிழாப் படங்களை எடுத்த... ஏராளமான பொருட்செலவில் ... கதாநாயகனாக நடித்து வெற்றிகர... கொண்டிருக்கும் 'ஜெய்' படத்தி... தது. அதனைத் தொடர்ந்து மீண்(... பிர... கதாநாயகனாக நடிக்க 'ஷாக்' எ... லும் நீளத் திகில் படத்தை தயாரிக்க ...ள்ளார்க...

பிரசாந்த் வித்தியாசமான பாத்திரத்தில் நடிக்க அவருக்கு ஜோடியாக லைலா மற்றும் ஆசீன் ஆகியோரோடு சரிதா, குஷ்பு, ரம்யா கிருஷ்ணன் இன்னும் பிரபலமான நடிக நடிகைகள் இதில் நடிக்க உள்ளனர்.

மயிர்கூச்செறியும் திகில் காட்சிகள் நிறைந்த 'ஷாக்' படத்தின் பின்னணி இசை லண்டனில் பதிவாக உள்ளது. சலீம் சுலைமான் இசை அமைக்க பாடல்களை பா.விஜய் எழுதுகிறார். 'ஷாக்' படத்தை திருட்டு வீடியோவில் பதிவு செய்ய முடியாத புதிய உத்தி கையாளப்படவுள்ளது. அப்படியே பதிவு செய்ய முயற்... ம் பாதி படம் மட்டுமே பதிவாகும்..

'தியேட்டரில் இந்தப் படத்தைத் தனி... க் காதீர்கள்!' என விளம்பரப்படுத்த உ...

'ஷாக்' படம் தமிழ் சினிமாவுக்(... முயற்சியாகும். ஒரு நடுத்தரக் குடும்... கும் சராசரிச் சம்பவங்கள் யதார்த்தமா...ச்செ... லப்படவிருக்கின்றன. இது பேய்க் கதையல்ல. ஒரு பெண்ணின் சோகக் கதை... 'ஷாக்' படத்தை துரித காலத்தில் ஒரே மூச்சில் தயாரித்து விரைவில் திரைக்குக் கொண்டுவர அதிரடியாக வேலை நடந்து வருகிறது. பிரஷாந்தை வைத்து 'ஆணழகன்' படத்தை இயக்கிய தியாகராஜன் 'ஷாக்' படத்தின் மூலம் ஒரு வித்தியாசமான பிரஷாந்தை அடையாளம் காட்ட உள்ளாராம்.

## சினி டிப்ஸ்

கழுத்துக்குக் கீழே சதைப்பற்று தூக்கலாகத் தெரியப்படுத்தும் உடைகளை அணிந்து கலக்கியவர் பொலிவுட் ஹீரோயின் ப்ரீத்தி ஜிந்தா. அந்த போட்ட 'மொட மொட' காட்டன் சாரியிலும் சல்வார் கமிசிலும் ப்ரீத்தியை ஸ்கூல் டீச்சர் ரோலில் நடிக்க வைக்கிறார் 'காக்க காக்க' டைரக்டர் கௌதம்.

* * * * * *

'ஜே ஜே' படத்தில் செரண்டிபிட் படத்தின் பாதிப்பு இருப்பதாகப் புலம்புகிறவர்களை அலட்சியப்படுத்தியிருக்கிறார் டைரக்டர் சரண். அஜித் உடன் இணையும் 'அட்டகாசம்' படத்திற்காக பிஸியாக இயங்கி கொண்டிருக்கிறார் இவர்.

* * * * * *

கார்த்திக் உடன் 'காஷ்மீர்' படத்தில் இணைந்த ஹீரோயின் சாரலதா, புதுப் படங்களில் 'புக்' ஆன உடனே முழுச் சம்பளத்தையும் கேட்டு தயாரிப்புப் பார்ட்டிகளை நச்சரிக்கிறாராம்.

* * * * * *

வித்தியாசாகரின் இசையில் இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா ஒரு பாடலை பாடியுள்ளார். எந்தப் படத்துக்குப் பாடியிருக்கிறோம் என்பதே அவருக்குத் தெரியாதாம்.



# தமிழ் சினிமாவுக்கு 'ஷாக்'

# வதந்தி சினேகாவுக்கு பொருந்தி!


ரஜனி

அதென்னவே சினேகாவுக்கும் வதந்திகளுக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது போலும். அவர் விட்டாலும் வதந்திகள் அவரை விடமாட்டோம் என்று துரத்துகின்றன. 'அது' என்ற படத்தில் பார்வையற்ற பெண் பாத்திரத்தில் நடிக்கும் அவர், இதில் டாக்டராக நடிக்கும் ஃபைவ் ஸ்டார் நாயகன் பிரசன்னாவுடன் சேர்ந்து நடிக்க மாட்டேன் என்று முரண்டு பிடித்தார் எனவும் பிரசன்னாவுக்குப் பதிலாக ஸ்ரீகாந்த் நடித்தால் நன்றாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார் எனவும் ஒரு வதந்தீ. உண்மையா என்று விசாரித்தபோது சிரித்தார் சினேகா.

''என் மேல் அக்கறை கொண்ட சில பேர் ரொம்ப அழகா இந்த மாதிரி வதந்திகளை திட்டமிட்டே பரப்பிக்கிட்டு வார்றாங்க. அந்த மாதிரி நான் சொல்வேனான்னு யோசிச்சுப் பாருங்க!'' என்ற அவர், 'போஸ்' என்ற படத்தில் ஸ்ரீகாந்த் ஜோடியாக நடிக்க வந்த வாய்ப்பை முதலில் ஏற்றுகொள்ள நிறையத் தயக்கம் காட்டினாரம். பிறகு அவர் மூளையில் ஓர் எண்ணம் உதிக்கவே, மூட்டைப்பூச்சிக்குப் பயந்து தன் வீட்டைக் கொளுத்துவானேன் என்று துணிந்தாரம். கிசுகிசுக்கள் பிசுபிசுத்துப்போக மீண்டும் ஸ்ரீகாந்த் ஜோடியாகிவிட்டார்.

''தண்ணீர் மெத்தை மாதிரி குலுங்க வைத்த என் மார்க்கெட்டை அவுட்டாக்கிப்புட்டாங்க...நடிக்க சான்ஸே தரல...'' என்று தன் மனேஜரிடம் மனதை அவிழ்த்து விட்டு புலம்பியுள்ளார் கிரண்.


ரோஜா

# சதாவின் சதை காட்டாக் கொள்கை!

மார்க்கட்டில் முன்னணி நாயகி இப்போது இவர்தான். முதல் படம் ஜெயமும் சரி, இரண்டாவது படமான வர்ணஜாலமும் சரி வெற்றிப்படங்கள். ஆனாலும் சதாவை ஒப்பந்தம் செய்ய தயாரிப்பாளர்கள் தயங்குகிறார்கள். காரணம் 'கதைக்கு ஏற்றாற்போல் நவீன உடை போட்டுக் கொள்கிறேன். ஆனால் அது செக்ஸியாக இருக்கக் கூடாது' என்று கட்டளையிடுகிறார். கவர்ச்சியைக் காசாக்க முயற்சி செய்யும் தயாரிப்பாளர்களோ 'என்ன பொண்ணும்மா நீ....' என்று அங்கலாய்க்கிறார்கள். இந்நிலையில் உலக அழகி ஐஸ்வர்யா ராயை ஒப்பந்தம் செய்யப்போன ஷங்கர் கூட இந்த சதாவை நாயகியாக்கி இருக்கிறார். விக்ரமை வைத்து ஷங்கர் டைரக்ட் செய்யப்போகும் 'அந்நியன்' படத்தில் இந்தப் பொண்ணுதான் ஹீரோயின் !

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் உருவாகும் 'எதிரி' படத்தில் மாதவனுடன் ஜோடி போடும் சதா அங்கேயும் தன் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் இருக்கிறாராம். 'வளர்க சதாவின் சதை காட்டாக் கொள்கை.





# ஜோதிகாவை வீழ்த்த சாதிகா!

மீண்டும் ரவுண்டு கட்டி அடிக்கத் துவங்கியிருக்கிறார் ஜோதிகா. மன்மதன்,பேரழகன்,அருள் என்று மளமள புக்கிங். அதனால் இப்போது ரொம்பவே பிகு பண்ணத் தொடங்கிவிட்டார் ஜோ. விளைவு....? ஜோதிகாவுக்கு எதிராக சாதிகா என்ற இம்மணியை இறக்குமதி செய்ய ஜரூராகி வருகிறது கோடம்பாக்கம். தெலுங்கில் சூப்பர் ஹிட் பார்ட்டி சாதிகாதான். சிம்ரன்–ஜோதிகா இருவரின் கலவையாக இருக்கும் இவருக்கு,ஜோவின் ட்ரேட் மார்க்கான தொப்பைக்கும் பஞ்சமில்லை. பார்த்துவிடுவோம்... சாதிக்க போவது ஜோதிகா தொப்பையா, சாதிகா தொப்பையா என்பதை! அம்மைக்கு அமர்களம் ஆக்கிப்படை, எனக்கு அமர்களம் பொங்கிப்படை!

'தம்மடிக்கிறேன், தண்ணியடிக்கிறேன்' இதுதான் என்மீது வரும் புகார்? அது இரண்டும் என்ன ஆண்களுக்கு மட்டுமா?.. அவ்வப்போது சும்மா ஜாலியாக கப்புன்னு புகை விட்டு ஜிவ்வுன்னு ஒரு பெக் போட்டா என்ன கொறஞ்சா போகுது?

— சோனியா அகர்வால்

# மத அடிப்படை வாதத்தின் மற்றொரு தோற்றம் ஜனநாயக பண்புகளில் பரவும் அபாயம்

ஜனநாயக மறுப்பின் உயர்ந்த தளமாக இருக்கக் கூடிய தன்மை பாஸிசத்துக்கே உண்டு. பாஸிசத்தின் உள்ளார்ந்த நிலையானது தனியாள், தனிச்சமூகம், தனிஇனம் என்ற அடிப்படைக்குள் சர்வாதிகாரத்தை ஊக்குவிப்பதாகக் கொள்ளலாம்.

இந்த கோட்பாடுகளூடாக நாம் இன்றைய இலங்கையை நோக்கும் போது—

பேரினவாத மேன்மைக்காக பேரினம், தனி இனம் என்ற தன்மைக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டு மதச்சமூகம் என்ற பெரும் போக்கின் ஊடாக பாஸிசத்தை நிலை நாட்ட முற்படுவதை காணலாம்.

ஆண்டாண்டு காலமாக இந்த தனிஇன தத்துவம், மத சமூகத்தின் ஊடாக வெளிப்பட்டுள்ளதன் காரணமாகவே பௌத்த மதம் இந்த நாட்டின் பிரதான மதமாக்கப்பட்டது.

பல்லின மக்கள் வாழும் இலங்கை என்பதை நகர்த்தி மதச்சமூக தத்துவம் தனிச் சிங்களத்தை நடைமுறைப்படுத்தியது சர்வாதிகாரத்தின் முதல் தொடுகை ஆகும்.

இந்தச் சட்டத்தின் மூலமாகவே, ஜனநாயகக் கோட்பாடுகளிலுள்ள பெரும்பான்மை என்ற பலத்தை முதன்மை படுத்திபேரினம் தனது தனிஇன தத்துவத்தை முன்நிலைப் படுத்தியது.

நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களது முதன்மை தனத்தை அழிக்கவும், கல்வி ரீதியான தகமை புறக்கணிப்புகளை உருவாக்கம் செய்யவும் அரச இயந்திரங்களுக்குள்ள சிறுபான்மை செறிவை குறைப்பதற்கும் இவை காள்கோலாகின.

இந்த செயற்பாடுகளின் உயர் அழுத்தமாகவே பண்டா — செல்வா, டட்லி — செல்வா ஒப்பந்தங்கள் கூட உருவாக்கம் பெறவில்லை.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கூட மத அழுத்தத்தின் அரசியல் தலையீடு காரணமாகவே தளம்பல் நிலை கண்டது.

இந்த வரலாற்று சுவடுகளின் வடிகாலாக சிஹல உறுமய என்ற பாஸிசக் கட்சியின் தோற்றம் இன்று ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியாக வலுவாதிக்கம் பெற்றதை நாம் பார்க்கலாம்!

இலங்கை வரலாற்றில் இம் முறை முதன் முதலாக பௌத்த மத பிக்குகள் கட்சி ஒன்றின் ஊடாக தேர்தல் களத்தில் குதித்துள்ளதை பார்க்கிறோம்.

தனி இனம், மதச்சமூகம் என்ற சர்வாதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக எடுக்கப்பட்ட உச்சக்கட்ட நடவடிக்கையின் அவதாரமாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

அரச இயந்திரங்களின் நிர்வாக மட்டங்களின் ஊடாக தமது சர்வாதிகார தன்மைகளுக்கு உரமூட்டிவந்த சிஹல உறுமய படிப்படியாக தனது பரவலாக்கல் நடைமுறைகளை செவ்வனே வழி நடத்தி வருகின்றது.

இந்த வழி நடத்தலுக்குத் தேவையான உயர்ந்த அதிகார பலம் இல்லாத நிலையே இன்று அவர்ளுக்குள்ள தாமத நிலையாகும்.

இந்ததாமத நிலையை போக்கிக்கொண்டு தமது அதிகாரபலத்தை முன்னெடுப்பதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தே சிஹல உறுமய, ஹெல உறுமயவாக மாற்றம் கண்டுள்ளது.

இந்தப் புதிய வரவு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டினை காலப்போக்கில் உடைத்தெறியும் என்பதில் ஐயமில்லை. முளைவிட்டுள்ள இந்த சக்தியை இனங்கண்டு முளையிலேயே கிள்ள வேண்டிய பொறுப்பு சர்வாதிகாரத்தை எதிர்க்கும் ஒவ்வொரு இலங்கை பிரஜையின் முக்கிய கடமை ஆகும்.

தேர்தல் வியூகங்களோடு இந்த கட்சியின் வரவை நோக்காமல், அது நாடாளவிய ரீதியில் போட்டியிட துணிந்துள்ள உள்ளார்ந்த நோக்கத்தின் தாற்பரியம் என்ன என்பதை உணர்ந்து செயற்பட வேண்டியது ஜனநாயகத்தை விரும்புகின்ற பேரின மக்களின் பிரதான கடமை என்பதை கோடிட்டுக் காட்டுகிறோம்.

**நாச்சியூரான்.**

---

# கவிதைப் பூங்கா

## ஏமாற்றம்

திரும்பிப்பார்த்தேன்.
சரிகை சருசருக்க
நடக்கிறார்கள்.
எத்தனை வீடுகள்
ஏறி இறங்கியிருப்பார்கள்?
என் அகராதியில்
எழுதப்பட்டுவிட்டது
எனக்கு ஏமாற்றம் தானென்று.
இருந்தும் ஒரு நப்பாசை,
என்னையும் ஒருவனுக்கு
பிடிக்கும் என்று.
என் உழைப்பில் தான்
எங்கள் குடும்பம் .
ஒவ்வொரு முறையும்
தட்டங்கள் நிரப்பவே
சேமித்த பணம்
செலவளிந்துவிடும்.
சிரித்த முகத்துடன்
வாசல்படி ஏறிவந்து
கதைபலபேசி
பலகாரங்கள்
தின்று விட்டு
பசுமையான எங்கள்
குடும்பம் போன்ற
வெற்றிலையை
கையிலெடுத்து
என் வாழ்கை போன்ற
பாக்கை
அதற்குள் போட்டு
வெள்ளை மனசு
சுண்ணாம்பை
மெதுவாகத் தடவி
ஓரே சுருட்டுச் சுருட்டி
வாய்க்குள் போட்டு அரைத்து விட்டு
போகும் போது வாசலில் துப்பிடுவர்
சிவப்பாய் – என்
வாழ்க்கையையும் சேர்த்து!

*யாழவன்,*
*சபரகமுவ பல்கலைக்கழகம்.*

## என் இதயம்

இது நீ இருக்கும்
நெஞ்சம்.
இதில் யாருக்கும் இல்லை
தஞ்சம்.
இது யாருக்கும் செய்யாது
வஞ்சம்.
இதில் நீ இருக்கும் வரை
அன்புக்கு இல்லை
பஞ்சம்.

*எம். அமிதாப்,*
*எகலியகொட.*

## பதில்

துறக்க முடியவில்லை
நினைவை .
தொடர முடியவில்லை
உறவை .
அறிய முடியவில்லை
மனதை.
மூடி மறைக்கிறாய்
அன்பை.
விரைந்து அனுப்பிவிடு
உன் பதிலை.

*துகி.*

## பாலை வனமாய்...

கதிரவனை கண்ட
பனித்துளிகள்
புல் துனியை விட்டு நகருமே –
அது போலத்தான் பெண்ணே
நான் உன்னைக் கண்ட நேரம்.
என்னை விட்டுத் துன்பங்கள்
தூரப் போனது – உன்
நினைவுகளை மீட்பதிலேயே – நான்
நித்தம் சுகம் கண்டேன்.
உனைப் பற்றி எழுதாமல்
என் பேனா கூட
உறங்குவதை தவிர்த்துக் கொண்டது.
உன் வருகையால் நான்
வசந்தம் அடைந்தாலும்,
பின்னர் வாழ்வை
வெறுக்கவும் நேரிட்டது.
என் இதயப்பரப்பில்
தோன்றிய கற்பனைகள்
உன் மௌனம் கண்டு
நனைந்து போயின.
இன்பத்தின் எல்லை
என எண்ணிய வேளை
துன்பத்தின்
தொடக்கம்தான் இது
என புரியவைத்தாய்.
சுகமாக இருந்த
என் வாழ்வில்
சுமைகள் சுடியதால் – என்
இலட்சியங்களை
இழக்க நேரிட்டது.
மழைக்காக ஏங்கும்
பயிர்கள் போல் –
ஏங்குவது என் மனது.
ஆம் பெண்ணே,
பசுமையாய் இருந்த
என் வாழ்வு
உன் பதில் காணாததால்
பாலையாய் மாறியது.

*ரீ.ஜெயந்தராஜ்*
*பருத்தித்துறை.*

## சீக்கிரம் ஓடிவா

வாழ்கை என்னும்
மைதானத்தில்
நீயும் நானும்.
அவனைப்பிடிக்க
நானும் –
என்னைப் பிடிக்க
நீயும்.
பொருளாதார
ரீதியான
ஓட்டம்.
போட்டிகளும்
பொறாமைகளும் – என்
சதி வலைகளையும் கூட
தாண்டித்தான் ஓட்டம்.
வயதுக்கு வந்த வேளை
சீதனக் தடங்க
உனக்கு.
அத்தை மகள்
எனக்கு.
அசைக்க முடியாத
சுவர்களாக அல்ல.
சீக்கிரம் தாண்டி
ஓடிவா
எம்மை எல்லாம்
முந்தி – எமது
வயதை சுட்டிக் கொண்டு
உலகம் ஓடுகிறது
துரத்திப்பிடிக்க வேண்டாமா?

*ரீ.றமேஸ்*
*வட்டக்கச்சி.*

## நீ வருவாய் என...!

மலைபோல் இருந்த
என்னை
அலைபோல் வந்து
அள்ளிச் சென்றவளே,
இதயத்தை திருடிவிட்டு உன்
நினைவுகளையல்லவா
விட்டுச் சென்றாய்!

*அ.சிந்துயா*
*மல்லாவி.*

## ஒரு தலை இராகம்

அன்னமவள்
நடையைக் கண்டு
கண்ணாலே
கணையை விட்டான்.
அணங்கு அவள்
கண்ணை கண்டு
கயலென
வலையை விட்டான்.
காரிகையின்
கூந்தல் கண்டு
சூட்ட வென
மென்மலர் எடுத்தான்.
நங்கையவள்
நாணம் கண்டு
நல்லினிய
கவிதை கண்டான்.
கன்னியவளை
காதலனொடு கண்டு
காளை காயமே பட்டு விட்டான்.

*எஸ்.கேமன்*
*முல்லைத் தீவு.*

## உன் சிரிப்பு

நீ சிரித்தாய்.
இன்னும் தான்
சேகரிக்க முடியவில்லை.
முத்துக்களை அல்ல –
சிதறிப்போன
என் சிந்தனையை!

*வாசுகி,*
*விசுவமடு.*

## தண்டனை போதும்

நினைவிலும்
கனவிலும்
நிலைத்திடும் சிலையே,
இடையிலும் உடையிலும்
ஈர்த்திடும் கலையே – நீ
எட்டாக்கனியா எனக்கு?
மூன்று முடிச்சிட்டு
முழுதாய் உனைப் பெற
மீண்டும் வருவேன்
உன்னிடம்.

*த.விவேகானந்தராஜா*
*கிழக்குப்*
*பல்கலைக்கழகம்.*

## விலகிட வா...?

கலையாத கனவுகளுடன்
உனைக் கைப்பிடித்தேன்.
அலையாக எழும்
என் காதல் –
ஆருயிரே
உன்னை
தொடவில்லையா...?
நிலையான சொந்தம் என
நினைத்தே ஓடிவந்தேன்.
விலைபோக நீ
விரைந்திட்ட போது
நான் விலகிடத் தான்
வேண்டுமா...?

*எஸ்.கயு,*
*விசுவமடு.*

## நேசி

இயற்கையை நேசி!
இருதயம் சுத்தமாகும்.
கன்னியை நேசி
கவிதை கிடைக்கும்.
உன்னை நேசி
உண்மைகள் புரியும்.
நாட்டை நேசி
நாளை உனதாகும்.

*மு.ஜெயந்தி*
*கிளிநொச்சி.*

## காதலித்துப்பார்!

காதலித்துப்பார்
கவிதை வடிப்பாய்
என்றவனே,
கண்ணீரை வடிக்கவிட்டு
கடல் கடந்ததென்ன...?

*செல்வி.சுபா*
*தெப்பேனட்டன்.*

## சமாதானம்

வெண்புறா வானிலே உயிர் துறக்க,
வெண்ணிலா வெளிச்சமதை
முகில் மறைக்க,
வேதனைக் குரல்களைசெவி மடுக்க
மரணத்தின் ஓலங்களால் கவிபடிக்க,
மயங்கிக் கிடக்கிறது சமாதானம்.

*கா.குகராசா*
*கோளாவில் – 03.*

## மின்மினி

இருள் வலையில்
சிக்கிடாத
விசித்திரமே – நீ
வானக் கடையிலா
வாங்கினாய்
இந்த வண்ண மேனியை?

*கு.தவசீலன்*
*விசுவமடு.*

## சீதனம்

உழைக்கத் தெரியாத – மன
ஊனமுள்ள ஆணுக்கு
மங்கையவள் கொடுக்கும்
மாங்கல்யத்திற்கான பிச்சை.

## அவளுக்கென்று...

அவளுக்கான
என் காத்திருப்புக்கள்
வீணடிக்கப்பட்டது
அவள்
கிடைப்பாளென்ற
நம்பிக்கையில்
வாழ்ந்து கொண்டதால்...!
அவளுக்கென்று
என் கால்கள்
தடுமாறிக்கொண்டது
நித்தமும்
அவள் வருகையினை
எதிர்பார்த்து நின்றதனால்...!
அவளுக்கென்று
என் விரல்கள்
முகாரி இசைத்தது
அமைதியாக
என்னுள்ளம்
உறங்கிவிட நினைத்ததால்...!
அவளுக்கென்று
என்னிதயம்
தாஜ்மகால் கட்டியது
அவள் ஞாபகத்தை
என்றும் மீட்டிவிட
முனைந்ததனால்...!
அவளுக்கென்று
என் மூச்சு
உள்வாங்கிக் கொள்கிறது
அவள் இல்லாத
உலகத்திலே
வாழ்ந்துகொள்ள
வெறுத்ததனால்...!

*செயின்தம்பி சியாம்*
*கல்முனை.*

# சிந்தியுங்கள் பெண்களே!

இன்றைய காலத்தில் பெண்கள் வேலைக்குப் போவதென்பது வழமையாகிவிட்டது. வேலைக்குப் போக நினைக்கும் பெண்கள் முதலில் நல்ல வேலையைத் தேர்ந்தெடுக்கிறார்களா என்று கேட்டால் அதில் தான் பிரச்சினையே ஆரம்பம்! அதனால் நாம் இன்று சிறந்த வேலையைத் தெரிவு செய்வதற்கான சில வழிமுறைகள் பற்றிப் பார்ப்போம் .

*அவசரப்பட்டு எந்த வேலையையும் தெரிவு செய்யாதீர்கள்.

* ஒரு வேலையின் வெளிப் பகட்டைப் பார்த்து அதைத் தெரிவு செய்யாதீர்கள்.

*எந்தத் வேலையையும் தெரிவு செய்ய முன், உங்கள் தனிப்பட்ட குணத்தையும் பொருளாதார வளத்தையும், நீங்கள் வாழும் சமுதாயத்தைப் பற்றியும் கவனத்தில் கொள்ளுங்கள்.

*எந்த வேலையைத் தெரிவு செய்கிறீர்களோ, அதற்கான தகுதி உங்களிடம் இருக்கின்றதா என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

*நீங்கள் தெரிவு செய்யும் வேலையால் உங்களுக்கு மனத் திருப்தி கிடைக்குமா என்று சிந்தித்து முடிவெடுங்கள்.

*உங்கள் இலட்சியங்களை நீங்கள் வாழும் இடம், அங்கேயுள்ள மக்கள் மற்றும் உங்களுக்கு சமமானவர்கள் ஆகியோருடன் இணைத்துப்பார்த்து முடிவெடுங்கள்.

*ஒரே வேலையைத் தெரிவு செய்யாமல், வேறுபட்ட மாதிரியான வேலைகளை ஏற்பதற்கும் ஆயத்தமாக இருங்கள்.

*எந்த வேலையைத் தெரிவு செய்ய விரும்புகிறீர்களோ, அந்த வேலையில் உங்களுக்கு முன்பே அனுபவம் உண்டா என்றும், அந்த வேலையில் உள்ள நன்மை தீமைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

*மற்றவர்களைப்பார்த்து அல்லது மற்றவர்களின் பேச்சில் மயங்கி முடிவு எடுக்காதீர்கள்.

*நிதானமாக சிந்தித்து எடுத்த முடிவை அடிக்கடி மாற்றிக்கொள்ளாதீர்கள்.

என்ன சகோதரிகளே, படித்து முடிந்து வேலை தேடத் தயாராக இருக்கும் உங்களுக்கு இக் குறிப்புகள் பயன் தரும் அல்லவா? எனவே, முயற்சி செய்யுங்கள். வெற்றி உங்கள் கையில்!

* * * * * * * * * * * * * *

# கானல் நீர் மீன்களா?



திருமணம்என்பது ஆயிரம்காலத்துப்பயிர். அந்தத் திருமண பந்தத்தில் இணைந்துவிட்ட இருவரில் இளவயதிலேயே விதி வசத்தால் ஓர் உயிர் பறிக்கப்படுகிறபோது இங்கு சமூக நீதி தடம் மாறிப் போகிறது.

கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே என்கிற வேத வாக்கு இன்னமும் தூக்கிஎறியப்படாததால் பெண் பல துன்பங்களுக்கு ஆளாகிறாள். தனித்தே காலத்தைக் கடத்துபவளாக – உணர்வுகள், உணர்ச்சிகள், சமூகம் என்கின்ற பார்வைக் குள் சின்னாபின்னமாக்கப்பட்டு பலதுன்பங்களுக்கு ஆளாகி வாழ்க்கையையே அழித்துக் கொள்கிறாள்.

இது எமது சமூகத்தின் ஓர வஞ்சக சிந்தனையே! ஓர் ஆண் மனைவியை இழக்கும் போது அந்த ஆணின் மறு திருமணத்தை செய்ய முண்டியடிக்கும் இந்த சமூகம், பெண்ணின் விடயத்தில் பின்நிற்பது வேதனைக்குரிய விடயமே! பெண்கள் விழிப்புப் பெற்று கலர் புடவையை உடுத்தாலும் அதற்கு அப்பாலும் உணர்வு இருப்பதை பார்க்க மறந்து போகிறோம்.

ஆணின் உணர்வுகள் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு எமது சமூகம் தைரியமாக மறு திருமணத்தைச் செய்து வைத்துவிடுகிறது. ஆனால் அதே சமூகம் பெண்ணுக்கும் உணர்வுகளும் உணர்ச்சிகளும் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாமல், அதற்கு வெவ்வேறு அர்த்தங்களும் பட்டங்களும் கொடுத்துவிடுகின்றது.

எமது சமுகத்தில் மனைவியை இழந்த ஆணைத் திருமணம் செய்ய முன்வரும் பெண்களைப்போல் கணவனை இழந்த பெண்ணை திருமணம் செய்ய வரும் ஆண்கள் மிக மிகக் குறைவே!

மனைவியை இழந்த ஆணைத் திருமணம் செய்த பெண்கள் பலர் இன்பமாக வாழ்கிறார்களே ! எப்படி? அந்த ஆணின் மனதை புரிந்து கொண்டு அத்தனை துன்ப துயரங்களிலும் பங்கெடுத்து சாதுரியமாக வாழ்கிறார்கள்.

திருமணமாகி குழந்தைகள் இருந்தால், இங்கு பிள்ளைகளின் மனநிலை என்பது மற்றுமொரு முக்கிய காரணமாக அமையலாம். பிள்ளைகளுக்கு விடயத்தை விளக்கமாக எடுத்துரைத்தால், நிச்சயமாக புரியும் பக்குவம் அவர்களுக்கு வரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் நடைமுறை வாழ்க்கையில் இது சாத்தியமா என்பது கேள்விக்குறியே! ஆனாலும் மனைவியை இழந்த ஆண் மறுமணத்துக்குத் தயாராகும் போது, பிள்ளைகளின் மனநிலையை பார்த்தா மணம் முடிக்கிறார்கள் என்பதும் இங்கு பெரியதொரு கேள்விக்கணையாக மனதில் எழுகிறது. காலபோக்கில் குழந்தைகளின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கிறபோது புரிதல் என்பது சாத்தியமே! எனவே கணவனை இழந்த பெண்ணுக்கு மறு மணம் என்பது அத்தியவாசியமாகின்றது.

வாழ்க்கை வாழ்வதற்கே! அதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சித்து – விட்டுக்கொடுத்து வாழப்பழகிக் கொண்டால் வாழ்க்கையில் ஏது துன்பம்?

# தாய்ப்பாலின் தனித்துவம்!

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான, சகல சத்துக்களும் நிறைந்த, எளிதில் செரிக்கும் தன்மை கொண்டது தாய்ப்பால். சிறந்ததாக மட்டுமன்றி ஒரு முழுமையான இயற்கை உணவாகவும் இது காணப்படுகிறது.

குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புரதம்,மாச்சத்து, கொழுப்புச் சத்து, தாது உப்புக்கள், உயிர்ச்சத்துக்கள் அனைத்தும் சம நிலையில் அடங்கியிருப்பதோடு, நோயை எதிர்க்கும் சக்தி கொண்ட புரதங்களும் தாய்ப்பாலில் உள்ளன. இவை சளி, இருமல், வயிற்றுப்போக்கு, ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா போன்ற பல வியாதிகளிலிருந்து குழந்தையின் உடலைப் பாதுகாக்கும் சக்தி நிறைந்தவை.

தாய்ப்பால் பருகுவதன் மூலம் இதமான அரவணைப்பும், பாதுகாப்பும் கிடைப்பதைக் குழந்தை உணர்கிறது. தாய்க்கும்பிள்ளைக்கும் அதிக பிணைப்பு உண்டாகிறது. தாயும் பிள்ளையும் எவ்வளவுக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக அவர்களிடம் பிணைப்பு ஏற்படுகின்றது.

குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு விரைவாகத் தாய்ப்பால் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் தாய்ப்பாலைக் கொடுக்க ஆரம்பிப்பது சிறந்தது.

அறுவைச்சிகிச்சை மூலம் பிறந்த குழந்தைக்கு உடனே தாய்ப்பால் கொடுப்பது சிறந்ததல்ல. அறுவைச்கிச்சைக்காக தாய்க்குக் கொடுக்கப்பட்ட மயக்க மருந்து உணவுகள் தாயின் உடலில் இருந்து முற்றிலும் மறைந்த பின்னரே குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.


குழந்தை பிறந்த பின்பு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு குறைந்த அளவில், மஞ்சள் நிறத்துடன், தடிப்பாக சுரக்கும் பால் சீம்பால் ஆகும். இது அதிக சத்துக்கள் கொண்டது. நோயை எதிர்க்கும் சக்தி வாய்ந்த பொருட்கள் நிறைந்தது. சீம்பால் குழந்தைக்கு மிகவும் இன்றியமையாதது . அதிக பயன் உள்ளது. குறைந்த அளவில் சுரக்கப்பட்டாலும் முதல் மூன்று நாட்களுக்குக் குழந்தையின் எல்லாத் தேவைகளுக்கும் போதுமானது.

எனவே தாய்ப்பாலின் மகத்துவத்தை உணர்ந்த தாய்மாரே, குழந்தைகளின் ஆரோககியம் உங்கள் கையில் மட்டுமே என்பதைப் புரிந்து செயற்படுவீர்களாக!






# நிம்மதி உங்கள் தெரிவு



நாம்எல்லோரும் சந்தோஷமாக வாழ்கிறோமா? இந்தக் கேள்வியை தனிப்பட்ட முறையில், உங்கள் மனதைக் கேட்டுப் பாருங்கள். நிச்சயமாக "இல்லை" என்ற பதில் தான் வரும். வீட்டுக்கு வீடு வாசல்படி. எத்தனையோ பிரச்சினைகள் – அதிலும் எம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் !

இந்தப்பிரச்சினைகள் எல்லாம் எங்கிருந்து உள்ளே நுழைகின்றன என்று சிந்தித்தால், எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைவது எமது மனம் தான் என்பது தெளிவாகும். உள்ளது போதும் என்ற எண்ணம் எம்மில் எவருக்கும்இருப்பதில்லை.

இப்படி இருந்துவிட்டாலும் வாழ்க்கையில் பிடிப்போ அல்லது முன்னேற்றமோ இருக்காது.

"நாம் உண்மையில் வாழ்வதே இல்லை. வாழ்வோம் என்ற நம்பிக்கையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்." என்பது ஒரு பேரறிஞர் கூற்று. பெயரளவில் நாம் எமக்காக வாழ்கிறோமே தவிர உண்மையில் நாம் எம்மைக் கண்டுகொள்வதில்லையே! எம்மில் பலர் மற்றவர்கள் வாழ்க்கை முறையைப்பார்த்துப் பொறாமைப் பட்டுக் கொண்டிருப்பர். ஆனால் அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளை பார்ப்பதில்லை. வெளிப்பகட்டைப் பார்த்து ஏன் மயங்க வேண்டும்? உங்களுக்கு அன்பான கணவர் அமைந்திருக்கிறாரா? அழகான, அளவான குழந்தைகள் உண்டா? இவை இருந்தால் போதுமே நிறைவான ஒரு வாழ்க்கைக்கு. உங்கள் நிறைவான வாழ்க்கையை எண்ணி சந்தோஷப்படுங்கள். இப்படி நிறைவைக்கொடுத்த இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள்.




அடுத்தவர்களைவிமர்சிப்பதை நாம் நிறுத்திவிட்டாலே எம்மை நாம் பார்க்க ஆரம்பித்து விட்டோம் என்று அர்த்தம். முதலில் மனதில் உள்ள குறைகளை மாற்ற முயற்சிப்பதே எமது வளர்ச்சிக்கு முதல்படி.

கொஞ்சம் கொஞ்சமாய், எமக்கு நாமே கட்டளையிட்டுக் கொண்டு தவறுகள் செய்யாதவாறு இருக்கப் பழகிக்கொண்டால், உள்ளம் அமைதியால் நிறையும். அதுவே ஓர் அழகைக் கொடுக்கும். பார்ப்பவர் எம்மை மரியாதையாய் நடத்தும் ஒரு பாவனையை ஏற்படுத்தும்.

சிடுசிடுப்புக்கும் கடுகடுப்புக்கும் காரணம் எத்தனையோ சொல்லலாம். இதையெல்லாம் மாற்ற முடியுமா என்று நீங்கள் கேட்பது புரிகிறது? பிரச்சினைகள் எதுவும் நிரந்தரமானது இல்லை. ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரு தீர்வு உண்டு. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாமதமானால் அதுவே ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கிவிடும்.

ஜன்னல் வழியாக நாம் தெருவைப் பார்ப்பது போல் எதிலும் ஒட்டாத பாவனைக்கு எம் உள்ளத்தை நாம் பண்படுத்திக் கொண்டால் எந்தப்பிரச்சினையும் எம்மை நெருங்காது. எம்மைக் கலங்கடிக்கவும் முடியாது. எதிரில் நின்று பயமுறுத்துவதை காலில் போட்டு மிதித்துவிட்டால் அது கரைந்தே போய்விடும்.

இதில் முயற்சி ஒன்றே எமது பலம். முயன்றால் முடியாதது என்று எதுவும் இல்லை. முடியாது, இயலாது என்ற சொல்லை மறந்துவிடுங்கள். முடியும், முடிப்பேன் என்ற வாசகத்தை ஹம்மிங் செய்து பாருங்கள். வெற்றி வாசலில் முதல் ஆளாக – முதல் பெண்ணாக நீங்கள் தான் நிற்பீர்கள்!



# அறிவியல் கருத்து

* குளிர்சாதனப் பெட்டியிலிருக்கும் வாயு - அமோனியா
* நைதரசன் ஏராளமாக அடங்கியுள்ள உரம் - யூரியா
* இயந்திரத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - 1861 ஆம் ஆண்டு
* யாழ்ப்பாண அரசு வெளியிட்ட நாடகத்தின் வடிவம் - சேது
* உடலின் இரத்தம் பாயாத உறுப்பு - கண்ணின் கருவிழி
* அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - 1455 ஆம் ஆண்டு
* மின் காந்தம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - 1824 ஆம் ஆண்டு
* சூரிய ஒளி புவியை அடைய எடுக்கும் நேரம் - 8 நிமிடம் 20 வினாடிகள்
* வ ாசனை வீசும் தபால் தலையை வெளியிட்ட நாடு - தென்னாபிரிக்கா
* செ.சவ்விளநீரின் தாவரவியற் பெயர் - கொக்கோஸ் நியுசிபிரா

*எஸ். சர்மிலா*
*தரம் 10*
*கிளி/பூநகரி மகா வித்தி.*

# சிறார்களின் கைவண்ணம்



வெ.சுரேந்திரன்
சாந்தன் குடியிருப்பு.



ம.சிவகௌரி
தரம் 6
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.



ந.கௌசிகன்
தரம் 1
கிளி/பூநகரி மகா வித்.



இ.ராஜன்
கிளி/வன்னேரிக்குளம் மகா வித்.

# பொது அறிவு

1. பாலைவனக் கப்பலின் வாழ்க்கைக் காலம் யாது?
   *40 வருடங்கள்*
2. ஜப்பானின் புதிய பெயர் யாது?
   *நிப்பொன்*
3. இலங்கையில் நெல் உற்பத்தி கூடிய மாவட்டம் யாது?
   *அம்பாறை*
4. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு யாது?
   *நோர்வே*
5. உள மருத்துவத்தின் தந்தை யார்?
   *சிக்மன் புரோயிட்*
6. சமாதானத்தைக் குறிப்பிடும் மரம் யாது?
   *ஒலிவ்*
7. சாரணர் இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?
   *பேடன்பவல்*
8. இன்சுலின் மருந்தினை கண்டுபிடித்தவர் யார்?
   *பான்டிங்*
9. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு என அழைக்கப்படுவது யாது?
   *சுவீடன்*

*யோ.லூட்ஸ்சுஜிதா*
*தரம் 9*
*கிளி/தருமபுரம்.ம.வித்.*

# ஞானம் வேண்டும்

முல்லாவுக்கு மீன் சமைத்துச் சாப்பிட ஆசை வந்தது. சந்தைக்குச் சென்று நிறைய மீன் வாங்கிக் கொண்டு வந்தார். வழியில் நண்பர் ஒருவரைப் பார்த்து மீனை எப்படியெல்லாம் சமைப்பது என்று கேட்டு ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்தார்.

வரும் வழியில் அவர் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த நேரம் பார்த்து ஒரு பருந்து மின்னலாகப் பாய்ந்து வந்து அவரிடமிருந்த மீனைக் கொத்திக் கொண்டு பறந்து விட்டது.



பார்த்துக் கொண்டிருந்தவர்கள், ''என்ன முல்லா, உங்க மீனைப் பருந்து கொத்திக் கொண்டு போய்விட்டதே?'' என்று துக்கம் விசாரித்தனர்.

தனது ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாத முல்லா, ''முட்டாள் பருந்து. அந்த மீனை என்ன செய்ய முடியும்? அதைச் சுவையாகச் சமைக்கும் குறிப்பு எழுதிய காகிதம் என்னிடம் தானே இருக்கு. வெறும் மீனுடன் சென்று அது எப்படி சமைத்து சாப்பிட முடியும்?'' என்று கூறிக் கொண்டே ஏமாற்றத்துடன் நடந்து சென்றார்

# வினா விடைகள்

1. மண் எண்ணையில் அடங்கியுள்ள பொருள் யாது?
   *காபன், ஹைட்ரஜன்*
2. மண் எண்ணையில் வைக்கப்படும் இரண்டு உலோகங்கள் எவை?
   *சோடியம், பொட்டாசியம்*
3. ரேடியோ கதிர்களின் அலகு என்ன?
   *'குரி'*
4. நீரில் ஏன் பனிக்கட்டி மிதக்கின்றது?
   *நீரின் அடர்த்தியை விட பனிக்கட்டியின் அடர்த்தி குறைவானதால் மிதக்கின்றது.*
5. புகையிலையில் உள்ள இரசாயனப் பொருள் எது?
   *நிக்கொட்டின்*
6. இரசம் பூசப்பட்ட கண்ணாடியை கண்டுபிடித்தவர் யார்?
   *ஆக்ஸ்பர்க்*
7. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் யார்?
   *ஜான் வால்கர்*
8. கைக்கடிகாரத்தை கண்டுபிடித்தவர் யார்?
   *பர்த்தோலோமியூ மேனபிரிஸ*
9. டைப்ரைட்டரை கண்டுபிடித்தவர் யார்?
   *டெல்லி கிரின்டாரி*

*அ.கறோலின்,*
*யாழ்ப்பாணம்.*

# தெரியுமா உங்களுக்கு

* சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை
* சந்திரனில் வாயு மண்டலம் இல்லை
* யானையின் தும்பிக் கையில் என்புகள் இல்லை
* நாய், சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை
* கோலா கரடி நீர் அருந்துவது இல்லை
* மலைப் பாம்புக்கு நஞ்சு இல்லை
* பாம்பின் கண்களுக்கு இமைகள் இல்லை
* வட துருவத்தில் நிலப்பரப்பு இல்லை

*அ.கெசிறினோவா*
*தரம் 6*
*யாழ்ப்பாணம்*

# அறிவியல் கருத்து

குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு வத்திக்கான்
மிகச் சிறிய கண்டம் அவுஸ்திரேலியா
டெங்கு நோயை பரப்பும் காரணி வைரஸ் கிருமி
நோர்வே நாட்டின் தலைநகரம் ஒஸ்லோ
உலகில் மிகவும் வரண்ட பகுதி சகாராப் பாலைவனம்.
மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா

*ம.நிமலினி*
*தரம் 5*
*யா/இளவாலை க.ம.ம.வித்.*



# துஷ்பிரயோகம்!



ஜோன் கசி. கோழிகளை ரோஸ் பண்ணி விற்பனைசெய்யும் வியாபாரி. இவனுக்கு தினமும் நல்ல வருமானம் இருந்த வந்தது. இந்த வருமானம் நாளடைவில் இவனைப் பணக்காரனாக்கியது. அந்தஸ்து கூடியது. நகரின் முக்கிய புள்ளிகளில் ஒருவனாக இவன் மதிக்கப்பட்டான்.

திடீரென்று ஒருநாள் இளம் பையன் ஒருவனுடன் இவன் தகாத முறையில் நடக்க முற்பட்டான் என்ற செய்தி ஒன்று வெளிப்பட்டது. இச்செய்தியை எவரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், வேறுஒருவனும் அவன் மீது இது போன்ற குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்தான். இதனால், விடயம் விவகாரமாக மாறியது.

ஊரிலுள்ளவர்கள் எல்லாம் கசி மீது தமது கசப்புணர்வை வெளிகாட்டினர். சொந்த மனைவியும் இவன் மீது வெறுப்புக்கொண்டாள். இருந்தபொழுதிலும் இக்குற்றச்சாட்டுகள் அபாண்டமானவை என்ற முறையில் கசி தனது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்ட வந்தான்.

இவன் வசித்த இங்கிலாந்தின் 'வோடலோ' நகரில் ஐஸிஸ் என்ற வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிருந்தது. அதில் 16 வயது மதிக்கத்தக்க எட்வேர்ட் என்ற இளைஞன் வேலை பார்த்து வந்தான். அவனது திறமையைக் கண்ட கசி அவனை தனது கோழிப் பண்ணையில் வேலைக்கு வருமாறு அழைத்தான். நல்ல சம்பளம் கிடைக்கும் என்ற காரணத்தினால் அவன் ஐஸிஸ் நிறுவனத்தை விட்டு இவனிடம் வேலைக்கு சேர்ந்தான்.

இந்த வேளையில் கசியின் மனைவி பிள்ளைப் பேறுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். அவள் வைத்தியசாலையில் நிறுத்தப்பட்ட அன்று எட்வேர்ட்டை வீட்டுக்கு வருமாறு கசி அழைத்தான்.

'கசி தனிமையில் இருப்பாரே அவருக்கு நாமும்கூட துணையாக இருப்போம்' என நினைத்த எட்வேர்ட் அவரது வீட்டுக்குச் சென்றான்.

''வா எட்வேர்ட் நானும்



நீயும் பூல் விளையாடுவோம்'' என கசி அழைத்தான். அழைத்ததுடன் நிபந்தனையும் இட்டான்.

''இந்த விளையாட்டில் நான் தோற்றால் நீ சொல்லுகிறபடி நான் செய்வேன். நீ தோற்றால் நான் சொல்லுகிறபடி நீ செய்ய வேண்டும்.'' என்பதுவே நிபந்தனை.

இதனை ஏற்று விளையாடியபோது எட்வேர்ட் தோல்வி அடைந்தான். இதனை பயன்படுத்தி கசி தனது தகாத ஆசைகளை நிறைவேற்ற முயன்றான். எட்வேர்ட் இதனைத் தடுத்தான்.

அப்போது கசி விடவில்லை. கலர்கலராக இருந்த பல ஆபாசப்படங்களை அவனுக்குக் காட்டினான். இதன் மூலம் மெல்ல தன் இஷ்டத்துக்கு அவனை தயார்படுத்தி கசி அவனை தனது இச்சைக்கு உட்படுத்தினான்.

''பின்பு நான் இப்படி செய்யவேண்டும் என்று நினைக்கவில்லை. என்னை மன்னித்துவிடு உன்னை வீட்டுக் கொண்டு போய்விடவா'' என எட்வேர்ட்டை சமாதானப்படுத்தினான். கொஞ்ச நாட்களின் பின்பு எட்வேர்ட், தொழிலிருந்து நீக்கப்பட்டான்.

கசியின் கூட்டளியின் மகன் டொனால்ட் வோஷிஸ் 15 வயதுச் சிறுவன். இவனுக்கு ஆபாசப்படங்களைப் பார்ப்பதில் ஆசையிருந்தது. இவனது ஆசையை தெரிந்து கொண்டான் கசி. அவனையும் வீட்டுக்கு அழைத்து வந்து இந்த படங்களைக் காட்டி தனது இச்சைக்கு உட்படுத்திக் கொண்டான். இந்த ஆசைக்கு உட்பட்டதினால் தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கசியை சந்தித்து வந்தான் வோஷிஸ். அவனும் இவனுக்குள்ள படம்பார்க்கும் ஆசையை தூண்டிவிட்டு தனது இச்சைகளை தீர்த்துவந்தான்.

கசியின் இந்த தப்பாசைகளில் வெறுப்புற்ற வோஷிஸ் ஒருநாள் தனது தகப்பனிடம் நடந்தவைகள் எல்லாம் சொன்னான். உடனே அவனது தகப்பன் பொலிஸில் கசி மீது முறைப்பாடு செய்தார்.

கசி முதலில் எல்லாவற்றையும் மறுத்தான். எந்த வித பரிசோதனைக்கும் தான் தயார் என்றான்.

பொலிஸார் இருமுறை பரிசோதனை செய்த போதும் இக்குற்றத்தை அவர்களால் நிருபிக்க முடியாமல் போய்விட்டது.

''நான் ஒரு அப்பாவி தேவையில்லாத விடயங்களில் சிலர் வேண்டுமென்று என் மீது குற்றம் சுமத்துகிறார்கள் என்று கசி ஊராருக்குச் சொல்லி வந்தான். ஊர் மக்களும் இவன் மீது அனுதாபப்பட்டனர்.

இருந்தும் பொலிசார் வோஷியின் வாக்கு மூலத்தைக்கொண்டு கசியைத் துருவித்துருவி ஆராய்ந்தனர். கசியின் கோழிப் பண்ணையில் வேலைசெய்யும் பையன்களையும் பொலிஸார் விசாரித்தனர். அப்போது அங்கு வேலைபார்த்துக்கொண்டிருந்த ரிச்சர்ட் வெஸ்ட்பல் என்ற இளைஞன் தனக்கு நிகழ்ந்த சம்பவங்களை பொலிசாரிடம் சொன்னான்.

''ஒரு நாள் இரவு வேலை முடியும் போது நேரம் சென்றுவிட்டது. என்னை தனது வீட்டில் தங்கும்படி கசி கூறினார். நானும் அதனை ஏற்றுக்கொண்டு தங்க நேர்ந்த போது – பின் இரவு வேளையில் கசி தனது இச்சையை என் மீது தீர்த்துக்கொண்டார்.'' என்றான் அவன்.

தான் 33 பாலியல்கள் சம்பந்தப்பட்ட நூல் ஒன்றை எழுதுவதாகவும், இதற்கான ஆய்வுகளுக்காவே தான் இப்படி நடந்துகொண்டதாகவும் கசி பொலிசாரிடம் தெரிவித்தான்.

இவற்றை எல்லாம் விசாரித்த பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். கசி சிறைக்குள் தள்ளப்பட்டான். 10 வருடங்கள் சிறைவாசத் தண்டனை கிடைத்தது.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்'**

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சாரம் செய்வது நல்ல பலனைத் தரும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் கேது ராசியில் ராகு திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். மன அமைதி இருக்காது. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழிற் கிரகம் சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ஆறுக்குரிய புதன் 12இல் இருப்பதில் கடன் தீரும். குரு, சுக்கிரனின் இருப்பு நல்ல பலனைத் தரும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிநாதன் சுக்கிரன் 12இல் இருப்பதால் அலைச்சல் மிகும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். அச்சுவினி, பரணி ஆகிய நட்சத்திரங்களில் சஞ்சரிப்பது ஆரம்பத்தில் தீய பலனையும் பின்பு சந்திரனின் நட்சத்திரமான பரணியில் நல்ல பலனையும் தரும். (2,5) உரிய புதன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தியளிக்கும். 4க்குரிய சூரியன் 10இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. 10இல் சூரியனும் 10க்குரிய சனி பண பரஸ்தானமான இரண்டாம் வீட்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் தொழில்ஸ்தானமான பத்தில் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல பலனைத் தரும். வீடு, வாகனம் வாங்க, விற்க ஏற்ற காலம். மேலும் சனியின் நட்சத்திரமான உத்தரட்டாதியில் சஞ்சரிப்பது நல்லதல்ல. மேலும் சனி ராசியில் இருப்பது மனச் சஞ்சலத்தைத் தரலாம். இரண்டாம் வீட்டைச் செவ்வாய் நோக்குவதால் கையில் பணம் இருக்காது. (7,10) உரிய குரு மூன்றாம் வீட்டில் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பது நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியை செவ்வாய் பார்ப்பது நல்லது. செவ்வாய் யோகக்காரனாக இருப்பதால் (4,11) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் உதவுவர். 4இல் கேது இருப்பதால் மாதாவுக்கு நல்லதல்ல. 7க்குரிய சனி 12இல் இருப்பது திருமண வாய்ப்பு தாமதமாகலாம். குடும்ப அமைதி பாதிக்கலாம். ஆனால் குரு இரண்டில் இருப்பு சில சமயம் திருமண வாய்ப்பு பிரகாசமாகலாம். கையில் பணம் இருக்கும். 10ஆம் வீடு பலம் பெறுவதால் தொழில்துறை முன்னேறும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**

ராசிநாதன் சூரியன் 7இல் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சரிப்பது மேலும் நல்ல பலனைத் தரும். (2,11) உரிய புதன் 8இல் இருப்பது கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லையுண்டு. (3,10) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது தொழில்துறை முன்னேறும். சகோதர உதவியுண்டு. (4,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 11 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும்.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் | சுக்கிரன் செவ்வாய் ராகு | | சனி |
| சூரியன் | | | |
| | | | குரு |
| | | கேது | |

மாசி 24 முதல் மாசி 30 வரை

செவ்வாய் மேடம் முதல் இடபம் வரை
சந்திரன் சிங்கம் முதல் விருட்சிகம் வரை

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் இருப்பது மிகவும் நல்லது. ஆனால் சனியின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. மேலும் சனியால் பார்க்கப்படுவதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். (2,9) உரிய சுக்கிரன் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்லதல்ல. (4,7) உரிய குரு 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 10இல் சனி இருப்பதால் தொழில்துறையில் ஏற்றம் இறக்கம் இருக்கக்கூடும். குரு, சுக்கிரன் மறைவது நல்லதல்ல.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது விசேஷம். ஆரம்பத்தில் கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியிலும் பின்பு தான் சொந்த நட்சத்திரமான பரணியிலும் சஞ்சரிப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. ராகு, கேதுக்களின் தொடர்பு இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். குடும்ப அமைதியைப் பாதிக்கலாம். (4,5) உரிய சனி 9இல் இருப்பது நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். பூர்வ சொத்து சேரும். தொழில் ஸ்தானம் சுத்தமாக இருப்பதும் செவ்வாயைப் பார்ப்பதும் தொழிற்துறை முன்னேறும்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் செயற்படுவது நல்ல பலனை எதிர்பார்க்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். சகோதரர்களுக்கும் நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்ப அமைதி சீர்குலையலாம். நித்திரைக்குறைவு இருக்கும். பத்துக்குரிய சூரியன் 4இல் இருப்பதும் 10இல் குரு இருப்பதும் தொழிற்துறை முன்னேறும். அரச உதவி இருக்கும்.

**தனு: முலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் செயற்படுவதும் நல்லது. ஆனால் வக்கிரகதியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். சகோதரர்களுக்கும் நல்லது. (7,10) உரிய புதன் 4இல் இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். குடும்பத்தில் அமைதி நிலவும். வீடு, வாகனம் லாபம் தரும். (5,12) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பூர்வீக சொத்து சேரும். சயன சுகம் உண்டு. சனி ராசியையும் ராசிநாதனையும் பார்ப்பது கூடாது.

**மகரம்: உத்தராடம் 2,3,4,. திருவோணம் அவிட்டம் 1,**

ராசிநாதன் சனி 6இல் இருப்பது நல்லது. ஆனால் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் செயற்படுவது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். சனி இரண்டாம் வீட்டுக்கும் உரியவர் ஆனபடியால் கையில் பணம் இருக்காது. (4,11) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்களால் உதவி இருக்கும். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் குடும்ப அமைதி இருக்கும். குரு 8இல் மறைவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (5,10) உரிய சுக்கிரன் 4இல் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் சிறப்படைவர்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5இல் இருப்பது நஞ்சுச் சனியென்பர். மேலும் சனி திருவாதிரை நட்சத்திரத்தில் சஞ்சரிப்பது கூடாது. காரணம் ராகுவின் நட்சத்திரமாகையால் உடல் ரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். ஆனால் ராசியில் சூரியன் இருப்பதும் குரு பார்ப்பதும் பலனில் மாறுதல் இருக்கும். (2,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய சுக்கிரன் 3இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7இல் குரு இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. தொழில் ஸ்தானத்தை சனி பார்த்தாலும் குரு பார்ப்பதால் தொழிற் துறை முன்னேறும்.

**மீனம்: பூரட்டாதியில். உத்தரட்டாதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் செயற்படுவது நல்லது. ஆனால் வக்கிரகதியில் இருப்பது கூடாது. (2,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பது கையில் பணம் இருக்கும். தகப்பனுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். (4,7) உரிய புதன் ராசியில் இருப்பது வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு இருப்பினும் குரு 6இல் மறைவது நல்லதல்ல. ராசிநாதன் 10ஆம் வீடு, ராசி ஆகிய இடங்களை சனி பார்ப்பது நல்லதல்ல. தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு.

# பணம் கொழிக்கும் கிரிக்கெட்


கங்குலி

கனவான்கள் விளையாட்டு கிரிக்கெட். அதைவிளையாடுவதற்கு அதிக பணம் செலவழிக்க வேண்டும். பந்து, துடுப்பு, கையுறை, கால் கவசம், தலைக் கவசம் என்று ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ஆயிரமாய்க் கொட்டிஅழ வேண்டும்.

ஆனால், அதே கிரிக்கெட் பணம் காய்க்கும் மரமாகவும் இருக்கிறது.

அதற்கு, முதலில், குறைந்தது தேசிய மட்டத்துக்கேனும் கிரிக்கெட்டில் உயரவேண்டும்.

ஒரு நாணயத்தைச் சுண்டிப் பார்ப்பதோடு தான் பல விளையாட்டுக்கள் ஆரம்பிக்கின்றன. ஆனால், நமது பிரதேச நாடுகளின் விளையாட்டுக்களில் நாணயச் சத்தம் அத்தோடு அடங்கிவிடுகிறது.

ஆனால், கிரிக்கெட்டில் அப்படியல்ல. தேசிய மட்டத்துக்கு உயர்ந்துவிட்டால் வெறும் துடுப்பைத் துழாவினாலும் பணம் ஆகாயத்திலிருந்து கொட்டும்.

விரைவில் நடக்கப்போகும் இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டித் தொடரும் ஆட்டப் பெறுபேறுகளிலும் வீரர்களின் சாதனைகளிலும் சாதனை படைக்குமோ இல்லையோ, பணத்தைக்கொட்டுவதில் மட்டும் நிச்சயம் சாதனை படைக்கப்போகின்றது என்பது உறுதி.

மற்றைய நாடுகளில் ரக்பி, கால்பந்து, குத்துச் சண்டை, டென்னிஸ் போன்றவை பணத்தை ஈட்டித் தரும் கற்பக விருட்சங்களாக இருந்தால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் ஒரே ஒரு ஆட்டத்தின் ஆட்சிதான் நடக்கின்றது – அதுதான் கிரிக்கெட்.

இந்த நாடுகளில் கிரிக்கெட்டுக்கு இருக்கும் வரவேற்பை – புகழை – பிரபலத்தை – தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள தொலைக்காட்சி நிறுவனங்களும், அவற்றைப் பயன்படுத்தித் தங்களை உயர்த்திக்கொள்ள வர்த்தக நிறுவனங்களும் கடுமையாகப் போட்டி போடுவதை நிறுத்தும்வரை கிரிக்கெட்டின் ஆட்சி அசைக்க முடியாதது.

இது ஒருபுறமிருக்க –

இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் தங்களுக்கு இடையிலான இந்தத் தொடர் குறித்து மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கின்றன. அதுவும் பாகிஸ்தானுக்கோ தலைகால் புரியாத புளுகம்.

ஏன் தெரியுமா?

இதுவரை நஷ்டத்தில் ஓடித் துவண்டு போயிருந்த அந்த அமைப்புக்கு இந்தத்தொடரினால் 120 கோடி ரூபா வருமானம் கிடைக்கப்போகிறது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின்தலைமை நிர்வாகியான ரமீஸ் ராஜாவே ஒப்புக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் அல் – குவைதா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலின் பின்னர், பாகிஸ்தானுடன் விளையாடுவதற்கு அவுஸ்ரேலியா, மேற்கிந்திய தீவுகள்போன்ற நாடுகள் மறுத்துவிட்டன. நியூஸிலாந்து கூட பாதியில் தனது பயணத்தை முடித்துக்கொண்டது. பொது இடமான சார்ஜாவில் விளையாடுவதற்குக்கூட மறுப்பு.

இதனால் பாக். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நஷ்டத்தில் மூழ்கியது.

எனினும், சார்ஜா கிரிக்கெட் தலைவர் புகாதீருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் பாகிஸ்தானுக்கு கொஞ்சம் நிதி கிடைத்து வந்தது.

இப்போது கற்பகதருவாக இந்தத் தொடர் பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளது.

இந்தத் தொடரில் வீரர்கள் செய்யப்போகும் சாதனையை விட, விளம்பரங்கள் செய்யப்போகும் சாதனை தான் 'அதிர'வைக்கிறது.

இந்திய – பாகிஸ்தான் ஒரு நாள் போட்டிகளின் போது, தொலைக் காட்சியில் விளையாட்டுக்கு நடுவே விளம்பரம் ஒளிபரப்புவதற்கு பத்து விநாடிகளுக்கு கட்டணம் என்ன தெரியுமா? இந்தியப் பணத்தில் நாலரை லட்சம் ரூபா. அம்மாடியோவ்....!

இதுவே டெஸ்ட் போட்டியானால் ஒரு லட்சம் ரூபாவாகக் குறைந்துவிடும்.

அண்மையில் நடந்த ஆஸி. – இந்திய ஒரு நாள் போட்டிகளின்போது கூட இந்த 10 விநாடிக் கட்டணம் 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒருலட்சம் ரூபாதான். டெஸ்ட் ஆட்டங்களின்போது ஆக 40 ஆயிரம் ரூபாயே.

அதற்கு முன்னர் இன்னும் மேலாக – ஆக உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியின் போது தான் இந்திய –பாகிஸ்தான் ஆட்டத்தினிடையே 'செட்மேக்ஸ்' சானல் 10 விநாடிகளுக்கு 2 லட்சத்து 37 ஆயிரம் ரூபாவைக் கட்டணமாக அறவிட்டது. இப்போது இந்திய – பாக். தொடர் காரணமாக ''டென் ஸ்போர்ட்ஸ்'' சானல் இந்தியப் பயணத்தில் இருநூறு கோடி ரூபா சம்பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு பாகிஸ்தான் அணி இந்தியா செல்லும். அதற்கு அடுத்த ஆண்டு இந்திய அணி மீண்டும் பாகிஸ்தானுக்குப் போகும். இவற்றைக் கருத்தில் வைத்துக் கொண்டு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அடுத்த ஐந்து வருடங்களுக்கு தனது நாட்டில் நடைபெறும் ஆட்டங்களை ஒளிபரப்பும் உரிமையை 375 கோடி (இந்திய) ரூபாவுக்கு விற்பதற்குத் தயாராகி வருகிறது.

கிரிக்கெட் – பணம் காய்க்கும் மரந்தான் போங்கள்!

இந்தப் பின்னணியில் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் உறவை ஒரு நோட்டம் விடுவோமா?

நடக்குமா? நடக்காதா? என்று இழுபறிப்பட்டு வந்து இந்திய கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுலா இப்போது நடைபெறுவது ஓரளவு உறுதியாகிவிட்டது.

மார்ச் 10 இல் இந்திய அணி பாகிஸ்தான் புறப்படுகின்றது.

ஐந்து ஒருநாள் போட்டிகளிலும், மூன்று டெஸ்ட் ஆட்டங்களிலும் இந்திய – பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்தச் சுற்றுலா குறித்து நாளொரு செய்தியும் பொழுதொரு தகவலுமாகப் பரபரப்பான விவரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் தொடரை எதிர்கொள்வதற்கு இருதரப்பு வீரர்கள் மட்டுமல்ல – இருதரப்புக் கிரிக்கெட் நிர்வாகிகள் மட்டுமல்ல – இருதரப்பு ரசிகர்கள் மட்டுமல்ல – இரண்டு நாடுகளுமே முழு அளவில் தயாராகி வருகின்றன.

இந்திய–பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே கிரிக்கெட் போட்டி என்றால் அது எப்போதுமே பரபரப்பின் உச்சக்கட்டம்தான். இரு அணிவீரர்களும் அனல் பறக்க மோதிக் கொள்வார்கள்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட பின்னர், இரு அணிகளும் முதன் முதலில் 1952–53ஆம் ஆண்டுதான் மோதின. அதன் பின் இதுவரை இந்திய அணி 12 தடவை பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடர்களில் விளையாடியுள்ளது. இரு அணிகளும் மொத்தம் 47 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளன.

இதில் இந்திய அணி 5 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான் 9 வெற்றிகளைக் கண்டுள்ளது .33 ஆட்டங்கள் வெற்றி – தோல்வியின்றி முடிந்துள்ளன.

இதில் ஒரு முக்கிய செய்தி என்னவென்றால், பாகிஸ்தானுக்குச் சென்ற இந்தியா அங்கு ஒரு டெஸ்ட் போட்டியில் கூட வென்றதில்லை. அதேசமயம் இந்தியா வந்து விளையாடிய பாகிஸ்தான் 4 டெஸ்ட் போட்டிகளில் வென்றுள்ளது.

கடைசியாக இந்தியக் கிரிகெட் அணி, தமிழகவீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தலைமையில் பாகிஸ்தானுக்கு 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுற்றுப்பயணம் சென்றது. அப்போது பாகிஸ்தானின் அணித் தலைவராக இருந்தவர் பிரபல வேகப்பந்து வீச்சாளர் இம்ரான்கான். இந்திய அணி 4 டெஸ்ட்போட்டிகளில் அங்கே ஆடியது. இந்த நான்கு போட்டிகளுமே வெற்றி – தோல்வியின்றி முடிந்தன

ஒரு நாள் போட்டித் தொடரில் நான்கு கட்டங்களில் இந்தியா விளையாடியது. இதில் இந்திய அணி 0–2 என்ற கணக்கில் பாகிஸ்தானிடம் தொடரை இழந்தது. இந்தச் சுற்றுப் பயணத்தின் போதுதான் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் அறிமுகமானார்.

அதன் பின் 10 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் அணி, வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் தலைமையில் 1999ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தியாவுக்குச் சென்று விளையாடியது. அப்போது இந்திய அணிக்குத் தலைவராக இருந்தவர் அஸாருதீன். இந்தத் தொடர் இரண்டே இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்டதாக இருந்தது.

சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்று விட, டெல்லியில் நடந்த 2ஆவது போட்டியை இந்தியா கைப்பற்றியது. 202 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி கண்டு போட்டித் தொடரைச் சமன் செய்தது. இந்தப் போட்டியில்தான் அனில் கும்ப்ளே ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இங்கிலாந்தின் ஜிம் லேக்கரின் உலக சாதனையைச் சமன் செய்தார்.

இதன் பின் ஐந்து ஆண்டுகளாக இந்திய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் உலகக் கிண்ணப் போட்டிகள் தவிர, நேரடியாக ஒரு நாள் போட்டிகளோ, டெஸ்ட் தொடரோ நடைபெறவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.


இன்ஸமாம்

கடந்த நான்கு உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பாகிஸ்தானை இந்தியா வென்றுள்ளதால் இம் முறை இந்திய அணியை எப்படியும் வீழ்த்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது இன்ஸமாம்– உல்–ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அணி.

சௌரவ் கங்குலியின் இந்திய அணியோ,



அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு 3 மாதச் சுற்றுப்பயணம் சென்று டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவிற்கே தண்ணி காட்டி விட்டுத் திரும்பியிருக்கின்றது. அதனால், பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்திவிடும் என்ற எதிர் பார்ப்பும் இந்திய ரசிகர்களிடம் உருவாகியிருக்கிறது.

## இருவருமே கில்லாடிகள்

இந்திய – பாகிஸ்தான் ஆகிய இரண்டு அணிகளுக்கும் தலைமை தாங்கும் கங்குலியும், இன்ஸமாமும் டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள் இரண்டிலுமே பலே கில்லாடிகள். கங்குலி இதுவரை 72 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 4,509 ஓட்டங்கள் சேர்த்து 11 சதங்களும் கண்டவர். 244 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 9,144 ஓட்டங்கள் குவித்திருக்கிறார். இவற்றில் 22 சதங்கள் அடங்கும். இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர்களில் அதிகமான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வெற்றியைத் தேடித் தந்தவர் என்ற பெருமையும் கங்குலிக்கு உண்டு.

கங்குலியை விட அதிகமானடெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் விளையாடியவர், இன்ஸமாம். 91 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் அவர் 6,680 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். 18 சதங்கள் அடித்தும் உள்ளார். 309 ஒரு நாள் போட்டிகளில் ஆடி 9,456 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். ஆனால், அடித்தசதங்களின் எண்ணிக்கை எட்டுதான். அரைச்சதங்களின் எண்ணிக்கை சற்று வியக்க வைக்கும். மொத்தம் 68 அரை சதங்கள் அடித்திருக்கிறார்.

அணித்தலைவர் பதவிக்கு இன்ஸமாம் அண்மைக் காலத்தில்தான் வந்திருக்கிறார். இதனால் இவரது வியூகம் எப்படியிருக்கும் என்று கணிப்பது கடினம். கடந்த 5 வருடங்களில் இந்திய அணி டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள் இரண்டிலுமே பல படிகள் முன்னேறியுள்ளது. எனினும் 15 வருடங்களுக்குப் பின்பு பாகிஸ்தான் செல்வதாலும், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாலும், இந்திய அணி இறுக்கமானதொரு சூழ்நிலையில்தான் அங்கே விளையாட வேண்டியதாயிருக்கும். இந்தச் சவாலை இந்திய அணி சமாளிக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

---



# அரசியல் அம்பலம்

## அம்மணியின் கோட்டைக்குள் அதிர்வேட்டுக்கள்

கொழும்பு கச்சேரியில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய அதிகார அம்மணியின் சகாக்கள் வெகு ஆரவாரமாக வந்தனர். அப்போது போஸ்டர் மன்னன் விமலனின் கையில் இருந்த செல்போன் ஒலித்தது. ''ஆகா நல்ல சகுனம். மணி அடிக்கிறதே'' என்று ஆசையாகக் காதில் வைத்தார். அடப்பாவமே திடீரென அவரது முகம் கறுத்துவிட்டது. அப்படியே செல்போனை புதிய கூட்டின் செயலரான பிரேமனிடம் கொடுத்துவிட்டாராம்.

நல்ல சகுனமாக மணி அடிக்கின்றது என்று பார்த்தால் இது அபாய மணியாக அல்லவா அடித்துவிட்டது என்று பேயறைந்தது போல் அசந்து போனாராம் பிரேமானவர்.

''அப்படி என்ன நடந்துவிட்டது? இப்படி ஏன் ஆள் ஆளுக்கு முணுமுணுக்கின்றனர்? என்பதை அறிய கூட்டத்துக்குள் மூக்கை நுழைத்தார் நண்பர்.

என்ன செய்வது வேட்பாளர் பட்டியல் மிகவும் இரகசியமாகவே தயாரிக்கப்பட்டது. கடைசி நேரத்தில் எப்படியோ விசயம் கசிந்து விட்டதாம்.

பட்டியலில் பலபெரும் தலைகள் மொட்டையடிக்கப்பட்டிருந்தனவாம். இதனால் மூத்த தலைவர்கள் அதிகார அம்மணியின் இல்லத்தின் முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டனராம். இதைத்தான் ஒரு விசுவாசி இவர்களுக்கு செல்போனில் கூறியுள்ளார். அது தான் பதற்றம் என அறியமுடிந்ததாம்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் அம்மணியின் காலத்தில் அரலிமர நாயகனாக இருந்த களுத்துறை வீரரின் பெயர் மாவட்டப் பட்டியலிலும் இல்லையாம். தேசியப்பட்டியலிலும் இல்லையாம். இவருக்கே இந்தக் கதி என்றால் ஏனையவர்களின் நிலை எப்படியோ?

இதனால் கோட்டைக்குள் ஒரே குத்துவெட்டாம்.

மேடைக்கு வரமாட்டோம், பிரசாரம் செய்யமாட்டோம் என்றும் போர்க்கொடி தூக்கிவிட்டனராம்.

அம்மணியின் கோட்டைக்குள் இப்படி திடீர் அதிர்வேட்டுக்கள் கிளம்பிவிட்டதால் அம்மணி தலையைப் பிய்த்துக் கொள்கிறாராம். என்ன செய்வது? தப்புச்செய்தவர் உப்பைத் தின்று தானே ஆக வேண்டும் என வேதனைப்படுகின்றார் ஒரு மூத்த அரசியல்வாதி.

## சம்போ மகா தேவா என்றார் அன்று ஆனால் சங்கூதி விட்டார் இன்று.

நண்பர் மிகவும் அவசரமாக எழுதிக் கொண்டிருந்தார். அப்போது தான் வரவேண்டுமா இந்த அனுதாபி. வந்தவர் சும்மா இருக்க வேண்டாம்.

''என்ன சார் போன முறை சங்கர சங்கர சம்போ என்று எழுதினீர்களே, இப்போ உண்மையாகவே சங்கூதிவிட்டாரே? உங்களுடைய பேனா பயங்கரமானது சார்''என்று பீடிகையும் போட்டார்.

''என்னப்பா இது கோவிலிலும் சங்கூதுகிறார்கள். செத்தவீட்டிலும் சங்கூதுகிறார்கள். நீங்கள் எதைச் சொல்லுகிறீர்கள்? என நண்பரும் தெரியாதது போல் கேட்டார்.

''நீங்க ஒரு பக்கம், இவர்களுக்கு எப்படி சார் கோயிலில் சங்கூத இடம் கிடைக்கும்? செத்த வீட்டில் சுண்ணம் இடிக்கத் தான் இவர்கள் சங்கூதுவார்கள். இப்போ மயானத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்து விட்டனர்'' என்றார் அனுதாபி. ''என்னய்யா இது வேலை நேரத்தில் வந்து மண்டையை குழப்புகின்றீர்கள், கொஞ்சம் விவரமாத்தான் சொல்லுங்களேன்!'' என்றார் நண்பர் எரிச்சலுடன்.

''ஆமாம்சார் அதிகார அம்மணியின் ஆசீர்வாதத்துடன் அயல்வீட்டாரின் நன்கொடையுடன் பென்சன் போற காலத்தில சில ''நைன்டீ' '(90) களைச் சேர்த்துக்கொண்டு தெருத் தெருவாக பஜனை பாட ஆரம்பித்து விட்டாராம். வெளியே எட்டிப் பார்த்த சனங்கள் ''மார்கழி மாதத்தில் தானே திருவெம்பாவை பஜனை. இப்போ என்ன இரண்டும் கெட்ட வேளையில் பஜனை விடுக்கின்றனர். எல்லார் கைகளிலும் சங்குகள் வேறு காணப்படுகின்றனவே'' என அச்சப்பட்டனராம்.

''ஆம்மா இது நாட்டுக்கும் நமக்கும் நன்மை தேடித்தரும் திருவெம்பாவை பஜனை இல்லை. புராணம் பாடி சங்கூதி கோஷ்டிகானம் இசைத்துக்கொண்டு தெருவில் வம்பாகப்பாடி மயானம் நோக்கிச் செல்லும் பஜனை'' என்றாராம் பெரியவர்.

அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு வேடிக்கை பார்க்கப்புறப்பட்டவர்கள் ''இது என்னடா விசயம் தெரியாமல் நாமும் கதவைத் திறந்துவிட்டோமே, வாழ வேண்டியவர்களின் பின் சென்றால் தானே நாட்டுக்கும் நன்மை நமக்கும் நன்மை, நமக்கு என்ன தலைவிதியா மயானப் பயணம்போக'' என்று அதே அவசரத்தில் கதவுகளையும் ஏன் ஜன்னல்களையும் கூட முடிப் பூட்டை மாட்டி விட்டனராம்.

சங்கூதிக்கொண்டு பின்னால் வந்தவர்கள் கூட கொஞ்சம் கொஞ்சமாக கையில் இருந்த சங்குகளை மறைத்துக் கொள்கின்றனராம். பாவம் இந்த ஆனந்தமானவர் மட்டும் வாய்கிழிய தனிமையில் இப்போ சங்கூதுகின்றாராம்.

என்ன சார் செய்வது சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியின் கதை மாதிரி விட்டதே என்று கவலைப்படுகின்றார்களாம் அனுதாபிகள். என்ன செய்வது படவேண்டியதைப் பட்டுத் தானே மாய வேண்டும்?

# நெட் குறும்பு



"பொம்பளைங்க காதலைத் தான் நம்பிவிடாதே" என்ற பாட்டைப் பாடிய கவிஞன் இந்தப் படத்தைப் பார்த்துத் தான் பாடியிருப்பானோ?

## ஜோக்

அந்த தியேட்டரில் ஒரு திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது.படமோ அறுவைப் படம். மக்களைக் கவரக்கூடிய எதுவுமே அதில் இல்லை. படத்தை நூறு நாட்கள் ஓட வைக்க முடியும் என்று படத்தை எடுத்த தயாரிப்பாளர் நினைத்திருந்தார். ஆனால் ஒரு வாரத்துக்கு ஓட வைப்பதே கஷ்டமாக இருந்தது. நாளுக்கு நாள் படத்தைப் பார்ப்பவர்களின் கூட்டம் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் படம் திரை விடப்பட்ட நாள் முதல் ஒவ்வொரு நாளும் எல்லாக் காட்சிகளுக்கும் ஒரு ரசிகர் தவறாது வந்து படத்தைப் பார்த்துவிட்டுச் சென்றார். படம் தோற்றுவிட்ட கவலையில் இருந்த தயாரிப்பாளருக்கு தனதுபடத்தை ஒருவராவது தவறாது ரசித்துப் பார்க்கிறாரே என்பதில் பரம சந்தோஷம். தொடர்ந்து இந்த ரசிகரை அவதானித்து வந்த தயாரிப்பாளர் ஒருநாள் அவரை அணுகிக் கேட்டார். "தம்பி இந்தப் படம் நன்றாக இல்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதனால் நான் பெரும் கவலையில் இருக்கிறேன். ஆனால் நீ தினமும் ஒரு காட்சி கூட தவறவிடாது எல்லாக் காட்சி நேரங்களுக்கும் வந்து எனது படத்தை பார்த்துச் செல்கிறாய்.எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. எனது படத்தில் உன்னை இவ்வளவுக்கு கவர்ந்த காட்சி என்ன?" என்று கேட்டார்.

அந்த ரசிகர் சொன்னார்..."ஐயா... இந்த திரைப்படத்தில் ஒரு காட்சியில் கதாநாயகி குளக்கரையில் குளித்துவிட்டு ஆடைகளை மாற்றத் தொடங்குகிறாள். அப்போது ஒரு





ரயில் கதாநாயகியை மறைத்தபடி செல்கிறது. ரயில் சென்ற பின்னர் பார்த்தால் கதாநாயகி எல்லா ஆடைகளையும் அணிந்தபடி குளக்கரையில் ஏறுகிறாள். நான் தினமும் தவறாமல் வந்து இந்தத் திரைப்படத்தில் எல்லா காட்சிகளையும் பார்க்கிறேன், ஒரு நாளாவது அந்தப் ரயில் கொஞ்சம் பிந்தியோ - அல்லது கொஞ்சம் முந்தியோ வராதா என்ற ஆதங்கத்துடன். ஆனால் அந்தப் பாழாய்ப் போன ரயில் தினமும் அதே நேரத்தில்வந்து தொலைக்கிறதே ஐயா" என்றான் கவலையுடன்.

# நெட் கற்பனை



ஐயய்யோ... குளோனிங்கில் பூனையை உருவாக்கப் போக அது இப்படி ஆகிவிட்டதே என்று விபரீதமாக சிந்தித்து விடாதீர்கள். பூனை ஒன்றுக்கு எம்மைப் போல் 32 பல்லுகளும் நாக்கும் இருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தோம். அவ்வளவு தான்.

# நெட் குழப்பம்




மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 12பேர்நிற்பது தெரிகிறது. இந்தப் படம் A,B,C எனப்பிரிக்கப் பட்டுள்ளது. இந்தப் படத்தின் A ஐயும் B யையும் C யையும் தனித்தனியாக வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் C பகுதியை அப்படி வைத்துக்கொண்டு A இருந்த பகுதியில் B யையும் -B இருந்த பகுதியில் A யையும் வைத்து இணைத்துப் பாருங்கள். நிற்கிற 12 பேரில் சிலர் வேறு தோற்றத்தில் காட்சியளிப்பார்கள்.

# மென்டலின் மென்டல் வேலை



அண்மையில் காதலர் தினத்தை உலகமே ஜோடி ஜோடியாக கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்த போது உலகின் பிரபல்யம் பெற்ற அன்பு நண்பர்கள் இருவர் பிரிவதான அறிவிப்பு வெளியாகி அனைவரையும் கவலைக்குள்ளாக்கி விட்டது. அது மட்டுமல்ல காதலர் தினத்தையும் 'சப்' அடிக்க வைத்து விட்டதாம்.

இந்த செய்தியை இணையத் தளம் ஒன்றில் பார்த்து விட்டு யாரந்த பிரபலப் புள்ளிகள் என்று ஆவலுடன் விடயத்தை ஆராய்ந்தால்.. அடடா... நாம் எவ்வளவு ஒரு பைத்தியக்கார உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று தெரியவந்தது.

உலகின் குழந்தைகள் அனைவரையும் கொள்ளை கொண்ட பெண் பொம்மையான பர்பியும் - அதனது ஆண் துணையான கென்றும்தான் பிரியப்போகும் ஜோடிகளாம். உலகிலே எவ்வளவோ பிரச்சினைகள் கவலைப்பட இருக்கும் போது இந்த கற்பனைப் பொம்மைகளைப் பிரித்துவைத்து அதனை பெரிய விடயமாக்கி தானும் கவலைப்பட்டு தனது வாடிக்கையாளர்களையும் கவலைப்படுத்தியிருக்கிறது இந்தப்பொம்மைகளை உருவாக்கிய மெட்டல் நிறுவனம். இதன் நடவடிக்கைகளைப் பார்த்தால் இந்த நிறுவனத்தின் பெயர் மெட்டல் நிறுவனமா அல்லது மென்டல் நிறுவனமா என்று சந்தேகம் வருகிறது.


கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு பர்பி என்ற பெயரில் பெண் பொம்மை ஒன்றை வடிவமைத்த இந்த நிறுவனம் அதனை 150 நாடுகளில் விற்று பணத்தை வாரிச் சுருட்டியது. தொடர்ந்து 1961 இல் இந்த பார்பியுடன் - கென்ற் என்ற ஒரு **Boy Friend**ஐ உருவாக்கி இருவரையும் உலகில் வலம் வரவிட்டு காசை அள்ளிக்கொண்டது.

தற்போது இவர்கள் பிரிந்து விட்டதாக அறிவித்துள்ள.. மெட்டல் ஒருகிசுகிசுப்பையும் பரவ விட்டுள்ளதாம். அதாவது பர்பி - கென்ற் பிரிந்து விட்டாலும் தொடர்ந்தும் நண்பர்களாக இருப்பார்கள் என்றும், ஆனால் பர்பிக்கும் - அவுஸ்திரேலியன் தயாரிப்பு பொம்மையான பிளேய்னுக்கும் இடையில் காதல் மலர்ந்துள்ளதாகவும் கிசுகிசுவை ஏற்டுத்தி விட்டுள்ளனராம்.

உயிரில்லாத பொம்மைகளுக்குள் காதல் - பிரிவு.. என்ன நடக்கிறது... இங்கே... எதுவுமே புரியமாட்டேன் என்கிறது.

படத்தில் பழைய காதலர்களும் இப்போதைய நண்பர்களுமான பர்பியும் - கென்றும்.

# கண்ணாமூச்சி



இந்தப் படத்திலே அலை அலைபோல கோடுகள் தெரிகின்றன. அவைகளுக்கு மத்தியில் இரண்டு புள்ளிகள் தெரிகின்றன. இந்த புள்ளிகள் இந்த அலை அலை கோடுகளின் மேடான பகுதியில் இருக்கிறன் அல்லவா? பள்ளமான பகுதியில் இருக்கின்றனவா கொஞ்சம் ஆராய்ந்து சொல்லுங்கள்.



நற்பிட்டி முனை அல்அக்ஸா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வித்தியாரம்ப விழாவில் இடம் பெற்ற இஸ்லாமிய அபிநயப் பாடல் காட்சி.

# தமிழ் நிகழ்வுகள் பிறக்க கழகங்கள் வழி திறக்குமா?

கொழும்பில்பலகலைஇலக்கியஅமைப்புகள் இயங்கி வருகின்றன. கொழும்பு மேற்கை ஒரு தளமாகவும், கொழும்பு மத்தியை இன்னொரு தளமாகவும் கொண்டு இவற்றில் கலை இலக்கிய நிகழ்வுகள் அரங்கம் கண்டு வருகின்றன.

தமிழ்ச்சங்கம், கம்பன்கழகம், சனாதன தர்ம விழிப்புணர்ச்சிக் கழகம், தமிழ்மையம் எனப் பல அமைப்புகள் மேற்கை தளமாகக் கொண்டு தமிழ்ச் சங்கத்திலும் இராமகிருஷ்ண மண்டபம் கதிரேசன் மண்டபங்களிலும் தமது கலை இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

இதுபோன்று கொழும்பு மத்தியிலுள்ள முத்தமிழ் மன்றம், புதிய அலை கலைவட்டம், தமிழ் கலாசாரக் கூட்டமைப்பு, தமிழர் நற்பணி மன்றம் என பல அமைப்புகள் டவர் மண்டபம், எல்பின்ஸ்டன் மண்டபம், ஸ்போர்ட்ஸ் ஹேராட் டேல் மண்டபங்களில் தமது கலை இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

இந்த அமைப்புகள் மூலமாக பல பட்டிமன்றங்கள், கவியமர்வுகள், இசை விழாக்கள்- கலை நிகழ்ச்சிகள் பல அவ்வப்போது மேடை ஏற்றப்பட்டு வந்தன.

வாரந்தோறும் மிக சிறப்பாக நடைபெற்று வந்த இந்த நிகழ்வுகள் தற்சமயம் தேக்கம் கண்டுள்ளது. இந்த நிலை ஏற்பட்டது ஏன் என்பதே இன்றுள்ள கேள்வியாகும்!

தமிழ்ச் சங்கமும், கம்பன்கழகமுமே தமது கலை இலக்கிய நிகழ்வுகளை திட்டமிட்டு நடத்தி வருகின்றன. ஏனையவை மௌனித்திருக்கின்றன.

இதே வேளை கொழும்பு மத்தியிலுள்ள பல நாடக இயக்கங்களும் தற்போது இயங்காமல் இருந்து வருகின்றன. சிலோன் யுனைட்டட் ஆர்ட்ஸ்ரேஜ், வெள்ளிநிலா கலாலயம், தேசிய கலாநிலையம், புதிய அலை கலைவட்டம் கிருஸ்ண கலாலயம் போன்றவை கூட நாடகத் கலைத்துறையில் எவ்வித படைப்புகளையும் முன்வைப்பதாக அறிய முடியவில்லை.

அண்மையில் கிருஷ்ண கலாலயம், ஒரு குறு நாடக விழாவை நடத்தியது. புதிதாக உருவான யூனிவேர்சல் ஆர்ட்ஸ்ரேஜ் என்ற அமைப்பு இரண்டு நாடகங்களை மேடையேற்றியுள்ளது.

இவை தவிர வேறு ஏதும் நடைபெற்றதாகவே அறிய முடியவில்லை. கலைஞர்கள் தமது கலைப் படைப்புகளை உருவாக்கம் செய்வதிலும் நிகழ்வுகளை சமர்ப்பிப்பதிலும் ஆர்வமற்று இருக்கிறார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

இந்நிலை மாற வேண்டும். தொடர்ந்து தொடர்ச்சியாக கலை இலக்கிய நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற வழிவகைகள் தோன்ற வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் முன் வருவார்களா?

நாச்சியாதீவு [illegible]



கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்ற வானொலி, தொலைக்காட்சி, மேடை புகழ் எஸ்.கணேஸ்வரனின் ''அன்றும் இன்றும்'' வெள்ளி விழா இசை விருந்தினை யாழ். மாவட்ட முன்னாள் எம்.பி நடராஜா ரவிராஜ் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். நிகழ்வில் கலந்து கொண்ட ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாசன் குருக்கள், மாநகர சபை உறுப்பினர் பிரகாஷ் கணேசன், கலைஞர் எஸ். கணேஸ்வரன் மற்றும் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# 2004 நாடகவிழா நடக்குமா? பரிசுகள் கிடைக்குமா?

இலங்கைக் கலைக்கழகத்தின் உப குழுக்களில் ஒன்றான சிங்கள நாடக உபகுழு 2004ஆம் ஆண்டுக்கான சிங்கள நாடகங்களை 2ஆம் சுற்றுக்காக தெரிவு செய்து முடித்துவிட்டது. இதன்படி அரச நாடக விழா நிகழ்வுகள் மார்ச் 28ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 9ஆம் திகதி வரையிலும், அதன் பின்பு ஏப்ரல் 20ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையிலும் கொழும்பு ஜோன் டி.சில்வா அரங்கில் நடைபெறவிருப்பதாக தெரியவருகின்றது.

இரண்டாம் சுற்றுக்காக மொத்தம் 32 நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அனுப்பப்பட்ட மொத்தப் பிரதிகள் 750 ஆக இருந்தன. இவிருந்து அவை அனைத்தும் நடுவர் குழுவினரால் வாசிக்கப்பட்டு அவற்றில் இருந்து மொத்தம் 32 பிரதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிங்கள நாடக உப குழுவும், அதன் தலைவர் பராக்கிரம நிரியெல்லவும் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை மிகுந்த அக்கறையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வருகின்ற அதே வேளை தமிழ் நாடகக் கலைஞர்களின் சாபக்கேடாக தமிழ் நாடகஉப குழுவும் அதன் தலைவரும் செயற்படாமல் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்து வருவது ஏனோ என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

2002 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடகங்களின் பரிசளிப்பு நிகழ்ச்சியை 11 மாதங்கள் கடந்த நிலையில் ஏனோ தானோ என்ற வகையில் பெயருக்கு நடத்தி முடித்துவிட்டு ஓய்ந்துவிட்டார்கள். 2003ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நடைபெறவுமில்லை. 2004 ஆம் ஆண்டுக்கான போட்டிகளுக்கான ஆயத்தங்களும் இதுவரையில் எதுவும் இடம் பெறவில்லை.

இது சம்பந்தமாக தமிழ் நாடக உப குழு உறுப்பினர்களில் ஒருவரிடம் தொடர்பு கொண்டு விசாரித்த பொழுது தமிழ் நாடக போட்டிகளுக்கான பணம் ஒதுக்கப்படவில்லை என தமிழ் நாடக உப குழுவின் செயலாளர் கூறியதாக அறிய முடிந்தது. அப்படியாயின் தமிழ் நாடகக் குழுவின் தலைவர் உட்பட அங்கத்தவர்கள் அனைவரும், தமிழ்நாடக கலைக்குழு இழைக்கப்படுகின்ற அநீதியை வெளிப்படுத்திவிட்டு தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய முன் வருவார்களா?

''ஒருவருடத்துக்கு 'நர்த்தன உலெல' என்ற பெயரில் 200 லட்சம் செலவிடும், கலாசார அமைச்சு கலைக்கழகத்துக்கு வருடத்துக்கு 20 லட்சம் ரூபா மாத்திரம் ஒதுக்குகின்றது. அதனால் எம்மால் செயற்பட முடியாது உள்ளது'' எனக் கூறி நவம்பர் 10 ஆம் திகதி கடிதம் ஒன்றினை கலாசார அமைச்சருக்கு அனுப்பிவிட்டு கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் அனுராசெனவிரத்ன தனது பதவியை இராஜினாமா செய்தது போல் தமிழ் நாடகக்குழுவினரும் (தலைவர் உட்பட) செய்வார்களாயின் அது மதிப்பிற்குரிய செயலாகும். செய்ய முன்வருவார்களா நம்மவர்கள்?

-ஆறுமுகம் தங்கவேலாயுதம்-

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 06 1981



உதிர்வு 06 03 2003

அமரர்

## விநோதினி திலீபன்

(சுடர் ஒளி, உதயன் நிறுவனங்களின் விளம்பரப் பொறுப்பாளர்)

**எங்கள் அன்புச் செல்வமே வினோக் குட்டி**

இதயம் பிழிந்த உன் இறப்பின் வேதனை இன்னும் கனக்கிறது .. உன்னை எண்ணும் போதெல்லாம் எங்கள் இதயங்கள் ஒரு கணம் நின்று விடுகின்றது...
ஓராண்டு கடந்தாலும் மீளாத் துயரில் தேறாத மனங்களுடன் நாங்கள் துடிக்கின்றோம்...
உடல் வாழாவிட்டாலும் எங்கள் உள்ளத்தில் என்முடனே நீ வாழ்கின்றாய் அம்மா...
கண்கள் மூடினால் கண்களுக்குள் நிறைந்து, புன்னகையுடனும், குறும்புடனும் எங்களை கொல்லாமல் கொன்று தவிக்க வைக்கிறாயே..
வீட்டார் இல்லை, ஊரார் இல்லை, இந்த உலகத்தையே கலங்க வைத்து ஓராண்டு ஒரு மாதம் போல் சென்று விட்டதே அம்மா...
சென்றது என்ன நூற்றாண்டுதான் சென்றாலும், உன் குழந்தைமுகமும் அப்பா, அப்பா என்று கூப்பிடும் உன் குரலும், உன் அப்பாவை விட்டு என்றும் அகலாது அம்மா...
மூச்சுக்கு மூச்சு உன் கணவன் திலீபனை திலீப், திலீப் என்று வீடு நிறைய கூப்பிட்டு ஆசையுடன் வாழ்ந்தாயே அம்மா...
எங்கள் எல்லோரையும் சிரிக்க வைத்து, செல்லம் பொழிந்து என்றும் நான்கு வயதுப் பிள்ளைபோல் சோறூட்டி வளர்த்த உன் ஆசை அம்மாவோடு சென்ற போது ஒரு நொடியில் அந்த பாதகன் எங்கள் குடும்ப கோட்டையை வீழ்த்தி ஓராண்டு சென்றதோ அம்மா....

**இன்றும் மீளாத் துயரில் துடித்து நிற்கின்றோம்.**
***உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.***

உன் பிரிவால் வாடும்
*கணவர் (திலீபன்), அப்பா, அம்மா, மாமா, மாமி, மைத்துனன்.*

# மூட்டைப் பூச்சி முத்தர்



''கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம்!''

— ஈ.பி.டி.பி.யின் அறிவிப்பு ஒன்றை செவிமடுத்த யாழ் பொதுஜனம் ஒருவரின் பிரலாபம் இது.

''ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?'' — என்று கேட்டேன்.

''அமைச்சர் என்ற பந்தாவில் ஆள், அணி, அம்புகளோடு தியேட்டருக்குள் இருந்து கொண்டு இராச்சியம் நடத்தியவர், அந்தப் பதவி பறிபோனதோட இந்தப் பக்கமே தலை காட்டவில்லை. 'நாம் எப்பவும் மக்களோடை தான். மக்களை விட்டு ஒரு போதும் ஓட மாட்டோம்' என்றும் சொன்னவர். ஆனால், இரண்டு வருஷமாய் யாழ்ப்பாணப் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை. அதுதான் நிலைமை சீரில்லை எண்டதால அவர் இந்தப் பக்கம் வரேல்லை எண்டு மன்னிச்சு விட்டுவிடுவம்.

''ஆனால், கடந்த இரண்டு வருஷமாய் — உயர் பாதுகாப்பு வலயத்திலை — பிரதான இராணுவ முகாமுக்குப் பக்கத்திலை இருக்கிற தன்னுடைய தியேட்டர் பதுங்கு குழிப்பக்கம் கூடத் தலை காட்டாதவர், இப்ப என்னடாவென்றால் புலிகளின்ரை கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பிரசாரம் செய்யப் போகப்போறாராம். அதுக்குப் பாதுகாப்புத் தரச் சொல்லி பொலிஸ்மா அதிபரிட்டை விண்ணப்பிச்சும் இருக்கிறார்.

''பூரண பாதுகாப்போடை தாம் பதுங்கியிருந்த யாழ்ப்பாணப் பக்கமே இந்த இரண்டு வருஷமாகத் தலைகாட்டாதவர், ஏதோ புலிகளின்ரை பகுதிக்குப் போகப்போற மாதிரி பந்தா காட்டுறதைப் பார்த்ததும் உந்த வைகுண்டம் போற பழமொழிதான் நினைவுக்கு வந்தது'' — என்றார் திருவாளர் பொதுஜனம்.

தியேட்டர்காரர் கொழும்பிலை தங்கடை அலுவலகத்திலை கொட்டித் தீர்த்த வயித்தெரிச்சல் விவகாரமும் அறிய வேண்டிய விடயம்தான் பாருங்கோ.

''கடந்த இரண்டு பொதுத் தேர்தலிலையும் யாழ்ப்பாணத்திலை பெரும் தலையிடி கொடுத்தவை இரண்டு சனியன்கள். ஒருவர் மண்ணெண்ணை அரசியல் வாதி. மற்றவர் ஊத்தையன் பத்திரிகைக்காரர். இப்ப இரண்டு பேரும் யாழ்ப்பாணத்தை விட்டுக் கிளம்பிட்டினம். ஆனால், நிலைமையும் மாறிப் போச்சு. போன முறை தொல்லை கொடுத்த சனியன்கள் தொலைஞ்சுது எண்டு பார்த்தால் இந்த முறை வெளியாலை கூட வரமுடியாது போல எல்லோ கிடக்குது'' — என்று வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறாராம் இளைய பாலா.

* * *

'உதயசூரியன்' அஸ்தமனமாகி 'வீடு' வந்து சேர்ந்தாலும் உள்வீட்டுப் பிரச்சினை இன்னும் முடியவில்லை. சிலர் பொறுமிக் கொண்டுதானாம் இருக்கினம்.

அதிலை சைக்கிள் காரருக்கு இரண்டு குறை.

காலங்காலமாய் 'வீட்டைத்' திட்டித்தீர்த்த பெரியவரின், பேரனார் கடைசியிலை வீட்டிலை நிற்க வேண்டியதாயிற்றே என்ற கவலை ஒருபுறம்.

தங்கடை கட்சியிலை யார், எங்கு தேர்தலிலை நிக்கிறது என்பதைத் தாங்களே தீர்மானிக்க முடியாமல் போயிட்டுதே என்ற கவலை மறுபுறம்.

''அதுதான் எல்லோரும் ஐக்கியமாகி விட்டீர்கள். அந்தக் காலத்துச் சின்னத்தின்ரை பிரச்சினைகளை அந்தக் காலத்தோடு விட்டு விடுங்கோ. பேரனின்ரை காலம் வேறு, பூட்டனின் காலம் வேறு. இரண்டையும் ஒண்டு சேர்த்துக் குழப்பாதீங்கோ.

''அதோடை இப்பதான் ஐக்கியம் எண்டு சொல்லி எல்லோரும் ஒரே தேசியத்துக்குள்ள கரைஞ்சு போய் விட்டீர்கள். இனி என்ன தனித்தனிக் கட்சி எண்டும் எங்கடை கட்சி வேட்பாளரை நாங்கள் தெரிவு செய்யிறது எண்டும் பேசிக் கொண்டு நிக்கிறீங்கள்?

''அதுதான் பொடியளின்ரை தியாகத்தை மேடை மேடையாய், நாடாளுமன்ற அமர்வு அமர்வுகளாய் முழங்கினீங்கள். நீங்களும் கொஞ்சம் தியாகம் செய்யுங்கோவன். தியாகம் செய்த பொடியள் கேக்கிறான்கள் எண்டு எண்ணிக்கொண்டு அவை கேட்ட இடத்திலை போய் நிக்கிறதுதானே அழகு'' — என்று சைக்கிள்காரருக்கு சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தார் நடுநிலையாளர் ஒருவர்.

* * *

இயக்கத்தோடை ஒட்டிக் கொண்டதாய்த் தங்களைக் காட்டிக்கொண்ட பல பிரமுகர்களுக்கு மனக் கசப்பு.

பொதுப் பிரமுகர் எண்ட பட்டியலிலை இயக்கத்தோடை நிண்ட சிலருக்கு — அல்லது நிண்டதாய் நடித்துக் கொண்ட சிலருக்கு — கூட்டமைப்பிலை போட்டியிட இடங் கொடுத்தவை. அந்த இடம் தங்களுக்கும் தரவில்லை எண்ட மனக் காய்ச்சல்தான் பாருங்கோ பலருக்கும்.

ஏதோ இடம் தராததால் தங்கடை சேவைக்குப் பொடியள் அங்கீகாரம் தரவில்லை எண்ட கவலை அவையளுக்கு.

மெல்லவும் முடியாமல், வெளியே சொல்லவும் முடியாமல் அவை தவிச்ச தவிப்புப் பாருங்கோ... சொல்லி மாளாது.

எண்டாலும் பொடியள் என்ன லேசுப்பட்டவையளோ! இந்த விண்ணாணங்களின்ரை முணுமுணுப்பைச் சரிக்கட்டவும் ஒரு வழி பாத்திட்டினம்.

தேசியப்பட்டியல் எண்டு மாவட்டத்துக்கு 29 பேரின்ரை பெயரைப் போட்டு, முணுமுணுத்தவையள் பலரின்ரை பெயர்களையும் அதிலை சேர்த்து, நாசூக்காய் விசயத்தை வெட்டிப் போட்டாங்கள் பாருங்கோ.

''என்ன சொன்னாலும் பொடியள் பொடியள்தான். பாத்தியளோ அவையளோட நிண்ட ஆக்களின்ரை பெயரை எல்லாம் தேசியப் பட்டியல் அட்டவணையில சேர்த்து கௌரவிச்சுப்போட்டினம்'' — என்று துள்ளிக் குதிக்கிறார் பிரமுகர் ஒருவர்.

பாவம். ஐந்து தமிழ் மாவட்டங்களிலிருந்தும் கிடைக்கிற வாக்குகளில ஒண்டு அல்லது இரண்டு தேசியப்பட்டியல் எம்.பி. இடம் தான்தேறும் எண்டது எல்லோருக்கும் விளங்கவே போகுது?

* * *

ஆளும் கட்சியிலை இருந்து கொண்டும் தமிழ்த் தேசியத்துக்காய் புரிந்த 'மகேஸ்வர தியாகம்தான்' இப்ப யாழ்ப்பாணத்திலை பலரின் வாயிலையும் அடிக்கடி மெல்லப்படுகின்ற விவகாரம்.

ஆனால், அந்தக் கில்லாடி மகேஸ்வரனுக்கே வேட்டு வைக்கிற யோகராஜாக்களும் யாழ்ப்பாணத்திலை இருக்கினம் எண்டது தான் புதுத் தகவல்.

தமிழ்த் தேசியத்துக்கும் — ஐக்கியத்துக்கும் — மதிப்புக் கொடுத்து யாழ்ப்பாணத்தை விட்டு ஒதுங்கினார் மகேஸ்வரனார்.

ஆனால், கிடைத்த அந்த இடை வெளியிலை புகுந்து ஒட்டிக்கொள்ள முயற்சித்தாராம் தொழில்நுட்பப் போதனைப் பிரகிருதி ஒருவர்.

'அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்ப காலியாகும்?' எண்டு பார்த்திருந்தவையள் போல, மகேஸ்வர தியாகத்தைக் கேள்விப்பட்டதும் உவர் யோகரும் ஜயலத்தாரின்ரை சிபாரிசோடை ஸ்ரீ கொத்தாவுக்குப் போய் தவம் கிடந்து அந்த இடத்தைப் பிடிக்க முயற்சித்தவையாம்.

தெரிந்த அரைகுறை சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் கலந்து ரணிலிட்டை யோகர் விட்ட கோரிக்கை இதுதான்:—

''மகேஸ்வரனார் மாதிரி நாலு கால்களுக்குப் பயந்தவையள் இல்லை நாங்கள். நீங்கள் எங்களுக்கு இடம் தாங்கோ. நாங்களும் யாழ்ப்பாணத்திலை நிண்டு, வெண்டு காட்டிறம்'' — எண்டாராம் யோகர். ஆனால், ரணில் சம்மதிக்கவில்லை.

அப்ப ஜயலத் குழு புது அஸ்திரம் ஒன்றை எடுத்து விட்டது.

''மகேஸ்வரன் சொல்லுகிறார் எண்டு நாங்கள் யாழ்ப்பாணத்திலை ஆக்களை நிறுத்தாவிட்டால், புலிக்கு ஆதரவாக நாங்கள் அங்கு தேர்தலிலை போட்டியிடாமல் விலகி விட்டம் என்று அம்மா அணி பிரசாரம் செய்யும். எனவே பெயருக்கு எண்டாலும் யோகர் தலைமையிலை ஒரு குழுவைப் போடுவம்!'' — எண்டு காயை நகர்த்தினாராம் ஜயலத். மகேஸ்வரனுக்கு மாற்றாய் தன்னுடைய ஆள் ஒருவரைப் போட்டு, இடைவெளியை நிரப்பி விட வேண்டும் எண்ட சிரத்தை அவருக்கு.

ஆனால், ரணில் அசைந்து கொடுக்கவில்லை. யதார்த்தத்தை உணர்ந்து ஏற்றுக் கொண்டு, தலையை அங்கும் இங்கும் ஆட்டி மறுத்து விட்டார்.

பாவம்! யோகராஜன், 'சோக'ராஜனாய்த் திரும்பியதுதான் மிச்சம்.

* * *

மகேஸ்வரனார் மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

நிச்சயம் வெற்றி கிட்டும் எண்டு நம்பியிருந்த யாழ்ப்பாணத்தை விட்டு வெளிக்கிட வேண்டியதாயிற்றே என்பதில் ஆரம்பத்தில் கவலைதான்; துக்கம்தான்.

ஆனால், எங்கும் மகேஸ்வர தியாகம் பற்றிய பேச்சு என்பதால் ஒரு ஆறுதல்.

மற்றது — கொழும்பில் ... ஸ்ரீகோத்தாவில் நேர்ந்த அனுபவத்தால் ஏற்பட்டது.

அவருக்குக் கொழும்புப் பட்டியலிலை இடங்கொடுக்கிறதுக்கு கட்சிக்குள்ள பல உயர்மட்டங்களில் எதிர்ப்பு.

அவரை வைத்துக் கொண்டே தலைவர் ரணிலிடம் இதை நேரில் கூறியிருக்கின்றார்கள் மூத்த தலைவர்கள் பலர்.

''உவர் எம்.பியாக இருந்து கொண்டு போனமுறை கட்சிக்குள் பண்ணின அட்டகாசம் போதாதா? தலைமைக்கு எதிராகக் கெம்பிறதும், தலைவரையே திட்டிப் பேசுறதுமாய் இருந்தவர். இவருக்கேன் இடம் கொடுத்து தலையிடியை விலைக்கு வாங்குவான்? விருப்பம் எண்டால் யாழ்ப்பாணத்திலை போய் கேட்டு, நிண்டு, வெண்டு வரட்டும். கொழும்பிலை இடம் கொடுக்க மாட்டியள் எண்டு திட்டவட்டமாய்ச் சொன்னியள் எண்டால் வேறு வழியில்லாமல் தன்ரை பாட்டிலை யாழ்ப்பாணத்திலை போய் நிப்பார். அதாலை அங்கும் ஒன்றிரண்டு சீட் கிடைக்கும். தேசியப் பட்டியலுக்கும் கொஞ்சம் வாக்குக் கிடைக்கும்'' — எண்டு அந்தத் தலைவர்கள் சீறி விழுந்தவையளாம்.

ஆனால், ரணில் அசைந்து கொடுக்கவில்லை.

''மகேஸ்வரன் கொழும்பிலை போட்டியிடுவார். அவர் அங்கு வெண்டாலும் தோற்றாலும் அவரைக் கூட்டிக் கொண்டுதான் அடுத்த முறை நாம் நாடாளுமன்றத்துக்குப் போறம்'' — எண்டு ரணில் அடித்துக் கூறினாராம்.

ரணில் தனக்கு இவ்வளவு ஆதரவு தந்தது மட்டுமல்ல, தான் கொழும்பிலை தோற்றாலும் தன்னைக் கூட்டிக் கொண்டுதான் நாடாளுமன்றம் போவேன் என்று கூறியதன் மூலம் தனக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கூட ஒதுக்கி வைத்திருக்கிறார் எண்ட இரட்டிப்பு மகிழ்ச்சி மகேஸ்வரனாருக்கு.

## சொற்சிலம்பம் போட்டி இல.97

**சொற்சிலம்பம் 97 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் மார்ச் 07ஆம் திகதி ஆகும். விடைகள் மார்ச் 14 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 21 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.95க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.**

**தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.95

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | 2 க | 3 போ | 4 க | ம் | ■ | 5 க | 6 வி |
| 7 வ | ழை | த | ல் | ■ | 8 க | ரு | து |
| ல் | ■ | 9 க | வி | 10 ஞ | ன் | ■ | ர |
| ■ | 11 பொ | ன் | ■ | 12 ம | ணி | 13 த | ன் |
| 14 வெ | றி | ■ | 15 பு | லி | ■ | ட | ■ |
| 16 கு | த் | 17 த | கை | ■ | 18 ப | ங் | 19 கு |
| 20 ம | த | லை | ■ | 21 மி | ரு | க | ம் |
| 22 தி | ல் | ■ | 23 அ | க | வ | ல் | பா |

## சொற்சிலம்பம் போட்டி இல.97

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| ■ | 9 | | | 10 | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | 14 | | |
| 15 | | 16 | | ■ | 17 | | ■ |
| | ■ | | ■ | 18 | | ■ | 19 |
| 20 | 21 | | | ■ | 22 | 23 | |
| 24 | | | ■ | 25 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.97

**இடமிருந்து வலம்**

1.சமாதானம்/இணக்கம்.
5.ஒரே அளவான.
7.இரும்பைக் கவர்வது.
8.விளையாட்டு உபகரணம்.
09.கணவன் — மனைவி.
11.பெருக்கல் குறி.
12.உள்.
13.வரும்படியாகக் கிடைப்பது.
15.நண்பகல் வேளை.
17.தங்களுடைய.
18.குளிர்மையான பானம்.
20.பல சொற்கள் கொண்டு பூர்த்தியாவது.
22.தந்திரம்/வஞ்சகம்.
24.திடுக்காட்டம்/பயம்.
25.அகமும்.

**மேலிருந்து கீழ்**

1.தோழன்.
2.மெதுவான கதி.
3.தேர்.
4.நிகழ்ந்த செயல்.
5.குளிர்மையானது/மங்கள கரமானது/நிறைகுடத்தோடு இடம்பெறுவது/நெற்றியில் அணிவதும் கூட.
6.இனிமையானது.
10.செல்வம்.
12.அம்பிகாபதி மனம் கவர்ந்தவள்.
14.பெண்கள்.
16.அறைக்குக் காற்றோட்டம் வருவது இதனால்.
19.தீயைத் தீண்டினால்...
21.தோழி.
23.பாரம்.

## சொற்சிலம்பம்-94 பரிசு பெறுவோர்.

1. சி.கோகுலபாலன்,
   பனை அபிவிருத்திச் சபை,
   மன்னார்.
2. அ. ஜனுஜா,
   நவாலி கிழக்கு,
   மானிப்பாய்.
3. மு.யாழவன்,
   44/2 வித்தியாலம் வீதி,
   திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. சா.கமலராணி,
   167, மத்திய விதி,
   திருகோணமலை.
2. பி.நவானந்தன்,
   நித்திய புரி,
   திருகோணமலை.
3. திருமதி.பி. உதயகுமார்,
   எல்லை வீதி,
   மட்டக்களப்பு.
4. கு.முரளிதாஸ்,
   வன்னியசிங்கம் வீதி,
   புத்தூர்.
5. எஸ்.வேணி கமலாஷினி,
   அல்விஸ் டவுண்,
   வத்தளை.
6. வ.கதிர்காமத் தம்பி,
   மூர் வீதி,
   கொழும்பு — 06.
7. க.கமாலுதீன்,
   புன்னக்குடா வீதி,
   ஏறாவூர் — 03.
8. திருமதி. பா.இராஜேஸ்வரி,
   18/5 குடியிருப்பு,
   வவுனியா.
9. ஜீ.யாழினி,
   மடுக்கோயில், மடு.
10. ஜெ.சுபத்திரா,
    40, மேல்மாடி வீதி,
    மட்டக்களப்பு.

# யுத்தம் ஓய்ந்த பின்பும் தொடரும் அவலங்கள்

## விற்பனைப் பொருளாக மாறும் வெடிக்காத ஷெல்கள்

**போர்** ஓய்ந்து விட்டிருந்தாலும்கூட யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதன் தாக்கங்களும் அழிவுகளும் இப்போதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட மிதி வெடிகளும், வெடி பொருட்கள் போன்றனவும் வெடிக்காத நிலையில் ஒளிந்து கிடக்கும் ஷெல்கள் போன்றனவும் இபோதும் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

பள்ளிச் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை பெரும் எண்ணிக்கையானோர் சமாதான காலத்திலேயே தமது உயிர்களையும் உடல் உறுப்புக்களையும் இழந்திருக்கின்றனர்.

இத்தகைய சம்பவம் ஒன்று கடந்த வாரம் கொழும்புத்துறையில் இடம் பெற்றிருக்கிறது.

வெடிக்காத நிலையில் இருந்த ஷெல் ஒன்றினை வாள்பிளேட்டினால் அறுத்து அதற்குள்ளிருந்த வெடிமருந்தை எடுக்க முயன்ற ஒருவர் அது வெடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம்தான் அது.

இந்தச்சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்தவரான வெற்றிவேலு சிவலோகநாதன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்திருக்கிறார். இவர் ஷெல்லை வாள் பிளேட்டினால் அறுத்த போது அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களான குருநகர் சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த மரிதாஸ் அன்ரன் பிரசன்னா (வயது 21) குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த அந்தோணிப்பிள்ளை யேசுரட்ணம் (வயது 24) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்திருக்கிறார்கள்.


குடாநாட்டில் பல பகுதிகளிலும் வெடிக்காத நிலையில் பற்றைக்குள்ளும் மறைவிடங்களிலும் மறைந்து கிடக்கும் ஷெல்களும் ஏனைய வெடிப் பொருட்களும் அவ்வப்போது தமது 'வித்தை'யைக் காட்டி பலரது உயிர்களைக் குடித்துக் கொண்டிருப்பதும் — அங்கங்களை எடுத்துக் கொண்டிருப்பதும் ஒன்றும் புதிய விடயம் அல்ல.

ஆனால் இப்போது கொழும்புத்துறையில் நடந்திருக்கின்ற சம்பவமும் அந்தச் சம்பவம் தொடர்பான பொலிஸாரின் பூர்வாங்க விசாரணையின் முடிவுகளும் பலரையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றன. அனைவரது கவனத்தையும் திருப்பி விட்டிருக்கின்றன.

உயிரிழந்தவரான நாதன் வெடிக்காத ஷெல்களை அறுத்து அதற்குள் இருக்கும் வெடிமருந்தை எடுத்து விற்பனை செய்வதையே அவரது தொழிலாகக் கொண்டிருக்கின்றார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருக்கின்றது.

சம்பவம் இடம்பெற்றிருப்பது ஓர் ஒதுக்குப் புறமான இடத்தில்தான். அங்கு அரையும் குறையுமாக அறுக்கப்பட்டு அவற்றுக்குள் இருந்து வெடி மருந்து எடுக்கப்பட்ட 6 ஷெல்களும் இன்னும் அறுக்கப்படாமல் — அறுப்பதற்கு தாயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த மற்றெரு ஷெல்லும் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், ஷெல்களுக்குள்ளிருந்து வெளியே எடுக்கப்பட்ட வெடி மருந்தும் ஒரு பையுடன் அவ்விடத்தில் மீட்கப்பட்டிருக்கிறது.

வெடிமருந்து எடுக்கப்பட்ட எறி கணைகள்கூட முழுமையாக செயலிழந்து போய் விடவில்லை. அவையும் ஏதாவது பாரமான பொருட்களுடன் தட்டுப் பட்டால் வெடித்துச் சிதறக் கூடிய ஆபத்தான நிலையில் தான் இருந்திருக்கின்றன.



*கொழும்புத்துறையில் அறுத்த நிலையில் மீட்கப்பட்ட ஏனைய ஷெல்கள்.*

அறுக்கப்பட்ட வேளை வெடித்தது 600 மில்லிமீற்றர் ஷெல்.

அதுவும் முழுமையாக வெடிக்கவில்லை. அதன் ஒரு பகுதி (முனைப்பகுதி) மட்டுமே வெடித்திருக்கிறது. அது முழுமையாக வெடித்திருந்தால் உயிரிழப்புகளும் சேதங்களும் இன்னும் பல மடங்காகியிருக்கும் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்த யாழ்.மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான், திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அங்கிருந்த ஷெல்கள் அனைத்தையும் செயலிழக்கச் செய்யுமாறு படையினருக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவையடுத்து படையினரும் பொலீஸாரும் இணைந்து அவ்விடத்தில் கண்டெடுத்த ஷெல்களை அங்கேயே வெடிக்க வைத்தனர்.

வெடிமருந்தை எடுப்பதற்கு வெடிக்காத ஷெல்களை இவர்களுக்கு வழங்கியவர் யார்? அவற்றை இவர்கள் எங்கிருந்து பெற்றுக்கொண்டார்கள்? ஷெல்களை அறுத்து எடுக்கப்படும் வெடி மருந்து என்னதேவைக்காக பயன்படுத்தப்படுகிறது? இவை போன்ற கேள்விகள் இப்போது எழுந்திருக்கின்றன. இவற்றை அறிவதற்காக பொலீஸார் தலையைக் குடைந்துகொண்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களிடம் பொலீஸார் பூர்வாங்க விசாரணைகளை நடத்தியிருக்கின்றனர்.

எனினும் தமக்கு அது குறித்து எதுவும் தெரியாது என்றும் உயிரிழந்தவரான நாதன் அவ்விடத்தில் வைத்து ஷெல் ஒன்றை வாள் பிளேட்டினால் அறுத்துக்கொண்டிருந்ததை தாங்கள் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாகவும் ஆனால், அது குறித்த விவரங்கள் எதுவும் தமக்குத் தெரியாது என்றும் அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்து விட்டனர்.

இத்தகைய ஆயுதங்களுக்குள்ளிருந்து எடுக்கப்படும் வெடி மருந்தைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறை ஒன்று இருக்கிறது. எனவே அதற்காக இந்த வெடிமருந்து பயன்படுத்தப்பட்டு வந்திருக்கலாம் என்ற சந்தேகம்இப்போது எழுந்திருக்கிறது.

வெடிமருந்தைப் பாவித்து பெருந்தொகையான மீன்களைப் பிடிக்க முடியும் என்பதால் அதிக விலைக்கு அது மீனவர்களுக்கு விற்கப்பட்டு வந்திருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்திருக்கிறார்.

எனினும் இந்த முறைமூலம் பிடிக்கப்படும் மீன் மனித பாவனைக்கு கேடானது என்பதால் இலங்கையில் இம்முறை தடை செய்யப்பட்டிருப்பதுடன் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் நீதவான் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இது ஒரு புறமிருக்க, இத்தனை ஷெல்களையும் பிரஸ்தாப நபர் எங்கிருந்துபெற்றுக் கொண்டார்? அதற்காக சம்பந்தப்பட்டோருக்கு இவர் கொடுத்த வெகுமதி எவ்வளவு? இது வரை இவரால் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வெடிமருந்துகள் வேறெங்காவது மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா? இவைபோன்ற கேள்விகளுக்கு விடை காண்பதற்காக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர் பொலிஸார். இப்போது அவர்கள் தமது பார்வையை யாழ்ப்பாணத்தில் மிதி வெடிகள் மற்றும் வெடி பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை நோக்கித் திரும்பி விட்டிருக்கிறார்கள் என்றும் தகவல் வெளியாகியிருக்கிறது.

அதாவது வெடிபொருள்களை அகற்றும் நிறுவனங்களால் மீட்கப்பட்ட ஷெல்கள் ஏதாவது 'குறுக்கு' வழியில் சம்பந்தப்பட்ட நபருக்கு கிடைத்திருக்குமோ என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதற்கான விசாரணைகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுடிருக்கின்றனர்.

இந்த ஷெல்கள் படையினரிடமிருந்து பின்கதவால் விநியோகிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்களும் எழாமலில்லை.

எது எப்படியோ, அப்பாவிப் பொதுமக்களுக்கு ஆபத்தான வழிகளில் — குறுக்கு வழிகளில் பணம்சம்பாதிக்கும்வித்தையைக்கற்றுக் கொடுத்து அதன்மூலம்தங்களது வயிற்றைக்கழுவிக் கொள்ளச் சிலர் முனைந்திருக்கிறர்கள் என்பது மட்டும்தெளிவாகத் தெரிகிறது.

இத்தகைய புல்லுருவிகளை இனம் கண்டு சமூகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் கடமையாகும்.

அத்தோடு ஆசை காட்டி ஆபத்தில் மாட்டி விடும் இவ்வாறன செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய தேவையும் எம்முன் எழுந்துள்ளது.

*யாழ்ப்பாணி*

---

# தூண்டி விடுங்கள் சிறுவர்களின் சிந்தனையை



**கு**ழந்தைகள் குறிப்பிட்ட வயதைக் கடக்கும் போது அவர்களுக்கு சிந்தனைச் சக்தியை வளர்த்து விடுவது பெற்றோரின் கடமை. அவர்களுக்கு சிறுவயதில் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தால் தான் பின்னால் வளர வளர அவர்களுடைய அறிவுத்திறன் வேகமாக வளர்ச்சி அடையும்.

குழந்தைகள் 2, 3 வயதாகும் போது நாம் எதைச் செய்யச் சொல்கிறோமோ அதைத் தான் 'ரிமோட் கொண்ட்ரோல்' போல் செய்கின்றன. சில குழந்தைகள் சில நேரங்களில் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாலும் எல்லா நேரங்களிலும் அப்படி இருப்பது இல்லை.

4,5 வயதை எட்டும் போதுதான் குழந்தைகளுக்கு ஓரளவு வெளியுலக அனுபவம் கிடைக்கிறது. எனவே இந்த வயதில் குழந்தைகளை சிந்திக்க தூண்டுவதன் மூலமே அவர்களது அறிவுத்திறனையும், கற்பனைச் சக்தியையும் அவர்களாகவே வளர்த்துக்கொள்ளும் நிலையை எளிதாக ஏற்படுத்திவிடலாம்.

உங்கள் குழந்தை தானாகவே நல்ல சிந்தனை வளம் உள்ளதாகி விடும் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் சில நேரம் பாராட்டும் படியான செயல்களைச் செய்தாலும் கூட, அவர்களை சிந்திக்கத் தூண்டுவது உங்கள் கடமை. ஏனெனில் புத்திசாலிக் குழந்தைகளில் பெரும்பாலானவர்கள் வளரும் போது குறைந்த சிந்தனைசக்தி உடையவர்களாகவும், சோம்பேறித்தனம் கொண்டவர்களாகவும் மாறி விடலாம்.

குழந்தைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதோ மற்ற நேரங்களிலோ அவர்கள் ஏன், எதற்கு, எப்படி, எங்கே? என்பன போன்ற கேள்விகளை உங்களிடம் கேட்டுமாறு சிந்திக்கத் தூண்டி விடுங்கள். அப்போதுதான் நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்கள் உருவாகும் நிலை ஏற்படும். குழந்தைகள் எதிர்க்கேள்வி கேட்கும் போது வெளிப்படையாக கேட்டு விடுவார்கள். எனவே அவர்களுக்கு மறைக்காமல், தெளிவாக பதில் சொல்லுங்கள்.

படிக்கும்போதும், டெலிவிஷன் பார்க்கும்போதும், வெளியே மிருகக்காட்சிச் சாலை, மியூசியம், பிக்னிக் என்று செல்லும் போதும் குழந்தைகளும் உங்கள் பக்கத்தில் இருக்கட்டும். அவர்களிடம் பத்திரிகைகளிலும்டெலிவிஷனிலும், வெளியிடங்களிலும் பார்த்த விஷயங்களைப் பற்றிக் கேளுங்கள். அப்போது அவர்கள் நினைவில் வைத்துச் சொல்லாத விஷயங்களை நீங்கள் நினைவுபடுத்துங்கள்.

குழந்தைகள் சிரிக்கும்படி ஏதாவது நகைச்சுவை விஷயங்களைச் சொல்லுங்கள். அது அவர்களுக்கு வித்தியாசமான சிந்தனையாக இருக்கும். நீங்கள் குழந்தைகளிடம் கேள்வி கேட்கும் போது அவர்கள் தவறான பதிலை சொன்னால் நீங்களும் உடனே பரவாயில்லைஎன்று சரியான பதிலைச்சொல்லி விடாதீர்கள். 'இன்னும் நன்றாக யோசித்து பதிலைச் சொல்லு' என்று குழந்தைகளுக்கு மேலும் சில வாய்ப்புகளைக் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் நன்றாக சிந்திக்கத் தொடங்குவார்கள்.

# கிராமப்புற வாக்குகளை சுருட்ட ஜெயலலிதா தேர்தல் 'ஸ்ரண்ட்'

## ஆலயங்களில் மிருகங்களை பலியிடுவதைத் தடுக்கும் சட்டம் நீக்கம்

ஆடு, கோழிகளை ஆலயங்களில் பலியிடுவதற்கு தமிழகத்தில் விதிக்கப்பட்டிருந்த தடையை ஜெயலலிதா அரசு நீக்கி உள்ளது.

அதேசமயம் வேலை நிறுத்தம் காரணமாக பதவிநீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்களில் ஆயிரம் பேரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளவும் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலில் கிராமப்புற வாக்குகளை சுருட்டுவதற்கான ஸ்ரண்ட் என்று அவதானிகள் இதனை வர்ணிக்கின்றனர்.

கோயில்களில் மிருகங்களைப் பலியிடுவதற்கான சட்டம் கடந்த 54 ஆண்டுகளாக தமிழகத்தில் அமுலில் இருந்து வந்தது. காங்கிரஸ் ஆட்சியினால் 1950 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்த தடையை ஜெயலலிதா அரசு தற்போது நீக்கி உள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களிலும் இக் கிராமங்களிலும் வாழகின்ற மக்கள் தங்களது குல தெய்வம் மற்றும் கிராமத் தேவைகளுக்கு மிருகங்களை மற்றும் பறவைகளைப் பலி கொடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுகிற மத நம்பிக்கைக்கு மதிப்பளித்து அவர்களது உணர்வுக்கு மதியாதை அளிக்கும் விதத்தில் 1950 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மிருக பலி தடைச் சட்டம் நீக்கப்பட்டிருப்பதாக அறிக்கை ஒன்றில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாநாடு

இதற்கிடையில் தி.மு.க.வின் தென் மண்டல மாநாடு விருது நகரில் ஓஹோ வென்றுநடந்து முடிந்துள்ளது. வட தமிழ்நாட்டில்வலுவான செல்வாக்குள்ள தி.மு.க தென் மாவட்டங்களில் கடும் பிரயத்தனப்பட்டுத்தான் தேர்தல்களில் வெல்லவேண்டும். அதிலும் நகர்ப்புறங்களில் தி.மு.க.வுக்கு நல்லசெல்வாக்குண்டு. மறுபுறம் அ.தி.மு.க.வின் கோட்டை தென் தமிழ்நாடாகும். அதற்கு காரணம் அ.தி.மு.க.வின் முக்கிய வாக்கு வங்கியான தேவர் இனத்தவர் தென் நாட்டில் கூடுதலாக இருப்பதே.

காங்கிரஸ் கட்சி 1967 இல்இழந்த ஆட்சியை இன்னும் மீளப்பெற முடியவில்லை. ஆயினும் தமிழ்நாடு பூராவும் பரவலான ஆதரவு காங்கிரஸ் கட்சிக்கு இருப்பதை மறுக்க முடியாது. ஆக தென் தமிழ்நாட்டில் வெற்றி பெறுவதற்கு இம்முறை நல்ல வாய்ப்பு இருப்பதாக தி.மு.க. கருதுகிறது. தென் மண்டல மாநாட்டை தி.மு.க. விருது நகரில் வைத்ததற்கு அதுவே முக்கிய காரணம்.



மேலும் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் காங்கிரஸ் – தி.மு.க கூட்டணி அமைந்திருப்பதால் முது பெரும் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் சொந்த ஊரான விருது நகரில் மாநாட்டை வைத்து காங்கிரஸின் தற்போதைய மாநிலத் தலைவர் வாசன் உள்ளிட்ட கூட்டணித் தலைவர்களை பேச வைத்தது முக்கியவிடயமாகும்.

கடந்த ஆண்டு விழுப்புரத்தில் நடந்த தேர்தல் நிதிசேகரிப்பு மாநாட்டில் இருந்த கூட்டத்தை விட நான்கு ஐந்து மடங்கு ஆதரவாளர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டது தி.மு.க.வுக்கும் கூட்டணிக் கட்சிகளுக்கும் உற்சாகத்தை கொடுத்துள்ளது. தி.மு.க.வின் சார்பில் லோக்சபாத் தேர்தலில் போட்டியிடும் 15 வேட்பாளர்களது பெயர்பட்டியல் மாநாட்டில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டாலும் தேர்தலுக்கான திகதிகள் இன்னமும் தேர்தல் ஆணையத்தால் சரியாக அறிவிக்கப்படாத நிலையில் வேட்பாளர் பட்டியலைஅறிவிக்கவில்லை என கருணாநிதி கூறினார்.

வழமையாக முந்திக்கொண்டு கூட்டணியையும் வேட்பாளர் பட்டியலையும் அறிவிப்பவரான ஜெயலலிதா இம்முறை கூட்டணி அமைப்பதில்பிந்தினாலும் வேட்பாளர்களை அறிவிப்பதில் வழமை போல தி.மு.க.வை முந்திகொண்டு விட்டார்.

வழக்கம் போலவே தனது சொந்தத் திறமையை மட்டும் நம்புபவரும் வேறு எவரையுமே நம்பாதவரும் என்ற தனது பெயருக்கேற்ப புத்தம்புது வேட்பாளர்களை பெரும்பாலான தொகுதிகளுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த முறை 10 எம்.பிக்கள் அவருக்கு லோக்சபாவில் இருந்தனர். ஆயினும்அவர்களில்இரண்டே இரண்டு பேருக்கு மட்டுமே இத் தேர்தலில் போட்டியிட இடமளித்துள்ளார். தென்காசி எம்.பி. முருகேசன், பெரிய குளம் எம்.பி. தினகரன் ஆகியோரே அவர்கள். தினகரன் சசிகலாவின் அக்காள் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜெயா டிவி இயக்குநரும் அவரே. இதைவிட திருச்செந்தூரில் கடந்தமுறைபோட்டியிட்டுத்தோற்ற வேட்பாளருக்கும் ஜெயலலிதா இடமளித்துள்ளார். கடந்த முறை போட்டியிட்டு தோற்ற வேறு எவருக்கும் பட்டியலில் இடமில்லை.

பெரிய குளம் தேனி மாவட்டத்திலுள்ள அ.தி.மு.க. கோட்டை.ஆண்டிப்பட்டி தொகுதிகூட பெரியகுளம் லோக்சபா தொகுதிக்குள் அடங்கியதுதான். அங்கு அ.தி.மு.கசார்பில் எவர் நின்றாலும் வெல்லலாம் என்ற நிலை. அ.தி.மு.க. போட்டியிடும் 33 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு நிச்சயமான தொகுதி என்று விரலை நீட்டச் சொன்னால் அது ஒன்று பெரியகுளம். மற்றது திருநெல்வேலி. இந்த இரண்டிலுமே அ.தி.மு.க.வை எதிர்ப்பது காங்கிரஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இது விடயத்தில் தி.மு.க. காங்கிரஸை வெற்றி வாய்ப்பில்லாத தொகுதிகளுக்குள் தள்ளிவிட்டதாக குற்றச்சாட்டும் உண்டு. எனினும்பழனி, மயிலாடுதுறை, சிவகங்கை, நீலகிரி, ராசிபுரம் ஆகிய தொகுதிகளில் காங்கிரஸுக்கு வெற்றி நிச்சயம் என்றே சொல்லப்படுகிறது. சேலத்திலும் திண்டுக்கல்லிலும் முயன்றால் வெல்லலாம் என்ற நிலை.

அ.தி.மு.க. கூட்டணியில் கடந்த வாரம் இப்பத்தியில் எழுதியது போலவே புதுக்கோட்டை தொகுதி பி.ஜே.பிக்கு இல்லை என்றாகிவிட்டது. பரிகாரமாக திருநாவுக்கரசுக்கு ராஜ்யசபா எம்.பி பதவி வழங்க பி.ஜே.பி உறுதியளித்துள்ளதாக தகவல். ம.தி.மு.க. தலைவர் வைகோ மாநிலம் பூராகவும் தேர்தல் பணிக்கு செல்ல வேண்டியிருப்பதால் கடந்த முறை தாம் வென்ற சிவகாசியில் கட்சியின் சார்பில் வேறொருவரை நிறுத்தியுள்ளார்.

பி.ஜே.பி.க்கு புதுவை உள்ளிட்ட 7 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கோயமுத்தூரில் கட்சிக்குபலமான வெற்றி வாய்ப்புண்டு. இதைவிட நீலகிரியில் காங்கிரஸையும், நாகர்கோயிலில் கம்யூனிஸ்ட்டையும், திருச்சியில் வைகோவையும் எதிர்த்து கட்சி கடுமையாக போட்டியிட வேண்டியிருக்கும். ஆக பி.ஜே.பி 1998, 1999 தேர்தல்களில் பெற்றது போல் தமிழ்நாட்டிலிருந்து நல்ல அறுவடை இம்முறை கிடையாது என்பது எதிர்பார்க்கப்படத் தக்கதே. தவிரவும் தி.மு.க. போல் அ.தி.மு.க. நம்பத்தகுந்த கூட்டாளியும் அல்ல. இதனால் அ.தி.மு.க.வுக்குள் பி.ஜே.பி போட்டியிடும் தொகுதிகள் பி.ஜே.பி.க்கு முழுமையாக சேருமா என்பது கேள்வியே. ஆயினும் இரு கட்சிகளுமே மனப்பூர்வமாக இந்துத்துவ அஜெண்டாவை பின்பற்றுவதால் இருதரப்பு தொண்டர்களும் மிக நெருங்கி விட வாய்ப்புண்டு.

—எஸ்.சுரேந்திரஜித்


இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

TEGOSL

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2003

சிறந்த பத்திரிகையாளர்களுக்கான சான்று விருதுகள் வழங்கல் 2003

03ஆம் வருடத்திற்கான பத்திரிகை வாயிலாக ஊடக எழுத்துத் துறையில் சிறந்த சேவை ஆற்றிய பத்திரிகையாளர்களுக்கான சான்றிதல் விருது வழங்க இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் சிறந்த சேவையாற்றியவர்களிடமிருந்து விண்ணப்ப விபரங்கள் கோர விரும்புகின்றது. அடியில்கண்டவாறு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இதனுடைய முக்கிய குறிக்கோள் வருடந்தோறும் செய்தி இதழ்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றிய சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு குறிப்பிட்ட வருடத்தில் சான்று விருதுகள் வழங்க இ.ப.ஆ.ச உத்தேசித்துள்ளது. அதாவது விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்புவோர் ஊடகத் துறையில் செய்தி இதழ்களுக்கு மும்மொழிகளிலும் சிறந்த சேவையாற்றியவர்கள் இலங்கையில் வெளி வந்த செய்தி இதழ்கள் சம்பந்தப்பட்ட அனைவரும் இதில் பங்குபற்ற வாய்ப்புண்டு.
இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சுதந்திரமாக இயங்கும் நடுவர்களால் தேர்வு செய்யப் பட்டு சான்று விருதுகள் வழங்கப்படும்.
இவ்வருட இறுதியில் நடைபெறும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு சான்று விருதுகள் அடியில் கண்டவாறு வழங்கப்படும்.

1. மேர்வின் த சில்வா விருது - வருடத்தின் சிறந்த பத்திரிகையாளர்.
2. டி ஆர் விஜேவர்தன விருது - பொதுமக்களின் ஆர்வமுடையோரின் பாராட்டுதல்கள் பெற்றவர்
3. சேப்பால குணசேன விருது - இலங்கை செய்தி இதழ் சுதந்திரத்திற்காக வாதாடியவர்.
4. உப்பாலி விஜேவர்தன விருது - வருடத்தின் வருங்கால எழுத்தாளர்.
5. டி பி தனப்பால விருது - வருடத்தின் ஸ்கூப்
6. பி ஏ சிரிவர்தன விருது-வருடத்தின் சிறந்த கொலம்மிஸ்ட
7. கலாநிதி கே கைலாசபதி விருது - விசேட இக்கட்டான நிகழ்வுகளில் செய்தி தொகுத்தவர்
8. டென்சில் பீரிஸ் விருது - வருடத்தின் இளம் செய்தியாளர் (30 வயதிற்கு கீழ்பட்டவர்கள்.
9. வருடத்தின் சிறந்த சுற்றாடல் அறிக்கை தயாரிப்பாளர்.
10. வருடத்தின்விளையாட்டு விடயங்களை தயாரித்தளித்தவர்
11. வருடத்தின் சிறந்த கார்ட்டூன் அமைப்பாளர் விருது.
12. வருடத்தின் சிறந்த புகைப் படப் பிடிப்பாளருக்கான விருது.
13. வருடத்தின் சிறந்த வடிவமைப்பு பத்திரிகை.
14. சிறந்த பத்திரிகையாளர்கள் (3 தரப்பினர்) தமிழ், ஆங்கிலம், சிங்களம்.
15. வேறு விசேட விருதுகள் அல்லது நடுவர்கள் தேர்ந்தெடுக்கும் சிறப்பு விருது பெறுபவர்கள்.

விண்ணப்பங்களை அஞ்சல் வழியில் அல்லது நேரடியாக காலை 10 மணி முதல் மாலை 6 மணிக்கிடையில் கையளிக்க முடியும். அடியில்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:-

அமைப்பாளர்
நடுவர் குழு 2003ஆம் வருடத்திற்கான சிறந்த விருது வழங்கள்.
இல 100 பாரன்ஸ் பிளேஸ்
கொழும்பு 7.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2003ஆம் வருடம் தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை அமைந்துள்ளதாக இருத்தல் வேண்டும்.
விதி முறைகள்: இலங்கையின் ஊடகத் துறையில் சம்பந்தப்பட்ட செய்தி இதழ் பத்திரிகையாளர்கள் நிருபர்கள் அனைவரும் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். மேலும் அவர் அல்லது அவரது பத்திரிகை ஆசிரியர் அல்லது இச்சங்கத்தின் அங்கத்தினர் மூலமாகவும் அசல் பிரதிகள் அவரின் போட்டோ கொப்பி பிரதிகள் உள்ளடங்கியவாறு அவரின் ஆக்கங்கள் பற்றிய விபரங்களை அடியில்கண்ட மாதிரி உட்பிரவேச படிவத்திலுள்ளவாறு சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்பங்கள் முடிவுறும் திகதி 2004 பங்குனி 15ஆம் திகதி**

மாதிரி விண்ணப்பப் படிவம்
சிறந்த பத்திரிகை ஊடகவியலாளருக்கான சான்று விருதுகள் 2003

விண்ணப்பத்தின் வகை :
பெயர் :
வெளியீடு :

(பட்டியல் வகையில் உள்ள ஒன்றை தெரிவு செய்யுங்கள். ஒன்றிற்கு மேற்பட்ட விடயங்களை அனுப்ப விரும்புவோர் தனித்தனியாக படிவங்களை நிரப்பி அனுப்பி வைக்க வேண்டும்.) சமர்ப்பிக்கப் பட்ட பேப்பர் கிலிப்பிங்ஸ் விபரப் பட்டியல்.
ஒவ்வொரு கிலிப்பிங்சும் தெளிவான விபரக் கொத்துடன் அதாவது தலையங்கம் பத்திரிகையில் வெளியான திகதி அனைத்தும் தெளிவாக எழுதி அனுப்பப்படல் வேண்டும்.)

1.
2.
3.

சிபார்சு கடிதங்களை ஆசிரியரிடமிருந்து அல்லது செய்தி ஆசிரியர், நிகழ்வுகள் ஆசிரியர், நிழற்பட ஆசிரியர், விளையாட்டு சம்பந்தமான ஆசிரியர், வர்த்தக சம்பந்தமான ஆசிரியர் அல்லது பிரதான ஆசிரியர் ஆகியோரிடமிருந்து சமர்ப்பித்தால் சிறப்பாகும். (ஆனால் இது அவசியமாகாது).

.................................... ....................................
சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கையொப்பம் விண்ணப்பதாரியின் கையொப்பம்.

# ஹெய்ட்டியில் கிளர்ச்சி!

எட்டுலட்சம்மக்கள்தொகையைக்கொண்ட வறிய, கரிபியன் தீவான ஹெய்ட்டியில், ஜனாதிபதி ஜீன் பேட்ரகன் அரிஸ்டைட்டுக்கு



எதிரான கிளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கிறது.

ஜனாதிபதி அரிஸ்டைட்டை பதவி விலகு மாறு கோரி எதிர்க்கட்சியினரால் இக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு – 1994இல் முன்னாள் மதகுருவான அரிஸ்டைட்டை, இராணுவ ஆட்சியாளர்கள் பதவியிலிருந்து துரத்திய சமயம், அமெரிக்கப் படையின உதவியுடன் அரிஸ்டைட் ஆட்சியினை மீட்டுக் கொண்டார்.

1994இல் அமெரிக்கப் படையின் உதவியோடு ஆட்சி பீடத்தில் அமர்ந்த அரிஸ்டைட் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஆறு ஆண்டுகளுக்கு – 2006 ஆம் ஆண்டு வரை – இரண்டாவது ஆட்சிக் காலத்துப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால், மோசடியான ஒரு தேர்தல் மூலமே அவர் ஆட்சியைத் தக்க வைத்



துக்கொண்டார் என்று கூறிய எதிர்க்கட்சிகள் அவரை பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தன. கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டங்கள் பரவலாகப் பரவி இப்போது கிளர்ச்சியாக உருவெடுத்திருக்கிறன.

1994இல் அரிஸ்டைட், அமெரிக்கப் படைகளின் உதவியுடன் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட சமயம், நாட்டை விட்டுத் தப்பியோடி அண்டை நாடான டொமினிக்கன் குடியரசில் தஞ்சம் புகுந்திருந்த முன்னைய இராணுவ உயரதிகாரிகளும், தளபதிகளும் ஆயுதங்களோடு திரும்பி வந்து தற்போது கிளர்ச்சியாளர்களுடன் இணைந்துள்ளனர்.

இந்த இரு தரப்பினரும் கூட்டுச் சேர்ந்துள்ளது மட்டுமன்றி பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்களும், மக்களும் கூட இணைந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதனால் மிக நெருக்கடியான நிலையை அரிஸ்டைட் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஹெய்ட்டியின் நகரான கொனைவ்ஸில் கிளர்ச்சிக்காரர்கள் 'ஆர்ட்டிபொனைற்' என்ற சுதந்திர நாடு ஒன்றை தாமாகவே பிரகடனம் செய்து, அரசு ஒன்றையும் ஜனாதிபதியையும் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளராக இருந்து, பின்பு எதிரியாகிய பூட்டர் மெற்றாயர்என்பவரையே தமது சுதந்திர நாட்டு ஜனாதிபதியாக அவர்கள் பிரகடனம்செய்துள்ளனர்.

ஹெய்ட்டியின் மேற்கு நகரான கொனைவ்ஸின் முக்கிய சதுக்கத்தில் 20,000 மக்கள் கூடியிருந்து பார்க்க, கிளர்ச்சியாளர்கள் பூட்டர் மெற்றாயரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். கிளர்ச்சியாளர்கள் கடந்த 5ஆம் திகதி வடக்கு நகரான கொனைவ்ஸை கைப்பற்றியதிலிருந்து, பல்வேறு நகரங்களுக்கு அவர்களது ஆதிக்கம் பரவி, இதுவரை மொத்தம் 12 நகரப்பிரதேசங்கள் அவர்கள் வசமாகியுள்ளன.

இந்த சம்பவங்களின் போது 58க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், ஆயிரக் கணக்கானோர் பலவேறு பாதிப்புகளுக்கும் உள்ளாகி இருக்கின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தோறும் சென்று சிறுவர்களையும் இளைஞர்களையும் தமது படையில் சேர்த்து வருவதாயும் தலைநகரிலிருந்து வடபகுதி நகரங்களுக்கான விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதால் அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் மனித பேரவலம் உருவாகி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

கேப் – ஹெய்ஸியனின் விமான நிலையத்தையும் கிளர்ச்சியாளர் கைப்பற்றி உள்ளனர். அரிஸ்டைட்டின் நிர்வாகக் குறியீடாக இருந்த 4 பொலிஸ் நிலையங்களையும் பெரிய எதிர்ப்பு ஏதுமின்றி கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள், அங்கிருந்த பொலிஸாரைக் கலைத்துவிட்டு, நூற்றுக்கணக்கான கைதிகளை விடுவித்ததுடன், பொலிஸ் நிலையங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

அங்கு வீதிகளில் இளைஞர்கள் ஆயுதங்களுடன் திரிந்து மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களிலும் ஆரவாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரச அலுவலகங்கள், சூறையாடப்படுகின்றன.

பொலிஸாரின் தொப்பிகளையும் கவச உடைகளையும் அணிந்து கொண்டு இளைஞர்கள் வீதிகளில் குடித்து கும்மாளமிட்டு அட்டகாசம்புரிகின்றனர் எனக்கூறப்படுகிறது.

''அரிஸ்டைட் வீழ்க!'' என்ற கோஷத்துடன் வெற்றி ஊர்வலங்களும் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

கிளர்ச்சியாளர்களின் பிரதேசத்தில் சட்டமும், ஒழுங்கும் இல்லாததால் பெரும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் ஆங்காங்கே பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

தாம் கைப்பற்றிய பிரதேசத்தை தனி சுதந்திர நாடாக அறிவித்துள்ள கிளர்ச்சிப் படையின் தளபதி ஜேன் பப்டிஸ் ஜோசப், இந்த இராணுவம் தான் இந்த நகருக்குப் பொறுப்பு, இந்த இராணுவமே ஹெய்ட்டியை முழுமையாக விடுவிக்கும் எனச் சூளுரைத்துள்ளார்.

இந்நிலையில் ஜீன் அரிஸ்டைட் சர்வதேச உதவியை கோரியமையால் அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, கரிபியன் சமூகம் (கரிஜெம்) அமெரிக்க மாநிலங்கள் ஸ்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஹெய்ட்டிக்கு விரைந்துள்ளது.

கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பன்னாட்டுப் பிரதிநிதிகள் குழு முன் வைத்த சமரசயோசனையை ஜீன் அரிஸ்டைட் அப்படியே ஏற்றுக் கொண்டார்.

ஆனால், ஜனாதிபதி அரிஸ்டைட் பதவியில் நீடிக்க அனுமதிக்கும் அந்த சமரச யோசனையை ஏற்க முடியாது என கிளர்ச்சித் தலைவர்கள் கூறி விட்டனர்.

அரிஸ்டைட்டோ தாம் பதவி விலக தயாரில்லை என்றும், நாட்டை கிளர்ச்சியாளர்களிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு போராடி உயிர்விட தயாராயிருப்பதாகவும் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்தினால் முன் வைக்கப்பட்ட திட்டத்தின் படி—

* ஜனாதிபதி அரிஸ்டைட் 2006 ஆம் ஆண்டு வரை— தமது பதவிக்காலம் முடியும் வரை – ஆட்சியில் இருப்பார்.
* தற்போது ஆட்சியில் இருக்கும் —அரிஸ்டைட்டுக்குச் சார்பான பிரதமரின் தலைமையிலான அரசு கலைக்கப் படும்.
* நாட்டின் பக்கச்சார்பற்ற – சுயாதீன – உயர்மட்ட பிரமுகர்கள் ஏழு பேரைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும். அந்த குழு புதிய பிரதமரையும், அமைச்சரையும் நியமிக்கும்.
* புதிய அரசிடம் கணிசமான அதிகாரங்கள் வழங்கப்படும்.
* ஹெய்ட்டியை முன்னர் காலனித்துவ நாடாக வைத்திருந்த பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் வீரர்களை உள்ளடக்கிய அமைதிப் படை ஒன்று அமைக்கப்படும். அந்தப்படை கிளர்ச்சிகள் உட்பட சட்ட விரோத ஆயுத தாரிகள் அனைவரிடமிருந்தும் ஆயுதங்களை களையும்.



என்ற அம்சங்கள் முன் வைக்கப்பட்டன.

இந்த சமரசத் திட்டத்தை பகிரங்கமாக – முழுமையாக – ஒரே சொல்லில் – 'ஆம்' என்று கூறி ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று அறிவித்தார் அரிஸ்டைட்.

எனினும் தமக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வோரிடமிருந்து சமரசத் திட்டத்தின் படி அமைதிப்படையினர் ஆயுதங்களைக் களைவார்கள் என்ற விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட அவர், "நான் ஆயுதம் வைத்திருக்கும் எந்தப் பயங்கரவாதிகளுடனும் இணைந்து செயற்படத் தயாரில்லை" – என்றார்.

''முறையற்ற தேர்தல் மூலம் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு ஊழல் மற்றும் அராஜக ஆட்சி புரியும் அரிஸ்டைட்டை ஆட்சியிலிருந்து அகற்றும் வரை நாம் ஓய மாட்டோம். அரிஸ்டைட்டை உடனடியாகப் பதவியை விட்டு இறக்குவதை உறுதி செய்யாத எந்தத் தீர்வு யோசனையும் எங்களுக்கு ஏற்புடையதல்ல'' என தீவிரவாதிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஆஷா -

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 12 04 1956



உதிர்வு 01 02 2004

### திருமதி நடராஜா புஸ்பராணி
(மாதகல்)

அன்பே உருவானாய் எங்கள்
அனைவருக்கும் தாயானாய்
பொன்போல எமைப் பேணி வளர்த்தவளே!
எம் அம்மா
பெற்றவர்கள் உற்றவர்கள் உடன் பிறப்புக்கள்
எல்லாம் இங்கிருக்க
பாசத்துடன் நீ வளர்த்தவர்கள் பாரிலே பரிதவிக்க
நேசமுடன் பேசியவர்கள் நெஞ்சுருக
பாரிலே படைத்த உன்னைப் பாதியிலே
பறித்த செய்தி காற்றிலே வந்ததும்
மாதம் ஒன்றாகியும் மறக்க முடியவில்லையே
மெழுகாய் உருக்குதெம்மை


மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்பு அன்னை அமரர் திருமதி நடராஜா புஸ்பராணி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை செவ்வாய்க்கிழமை (02.03.2004) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

காஞ்சிபுரம்,
வைரவர் கோயிலடி,
மாதகல்.

ந.தவக்குமார் (மகன் - லண்டன்)
அ.சுவேந்திராதேவி (மகள் - ஜேர்மனி)
ந.வசந்தகுமாரி (மகள் - மாதகல்)

# ஆறுமுகன் தொண்டமான்






இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள ஸாண்டமார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 மார்ச். 07 ஆம் திகதி வெளியிடப்பட்டது.